

விகடன்
பிரசுரம்

# கொங்குதேர் வாழ்க்கை

நாஞ்சில் நாடன்

# கொங்குதேர் வாழ்க்கை

# கொங்குதேர் வாழ்க்கை

நாஞ்சில் நாடன்

விகடன்
பிரசுரம்

Title :
KONGUTHAER VAAZHKKAI
© NANJIL NADAN

ISBN : 978-81-8476-542-7

விகடன் பிரசுரம்: **776**

நூல் தலைப்பு:
**கொங்குதேர் வாழ்க்கை**

நூல் ஆசிரியர்:
**© நாஞ்சில் நாடன்**

அட்டை ஓவியம்:
**ஷிவராம்**

முதற்பதிப்பு : **அக்டோபர், 2013**

விலை : **₹ 70**

பதிப்பாளர்:
**பா.சீனிவாசன்**

முதன்மை உதவி ஆசிரியர்:
**அ.அன்பழகன்**

முதன்மை வடிவமைப்பு:
**மு.ராம்குமார்**

வடிவமைப்பு:
**ப.ஷங்கர்**

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

**விகடன் பிரசுரம்**
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com

# பதிப்புரை

நாஞ்சில் நாடன் ஊர் அறிந்த எழுத்தாளர். விருதுகள் வாங்கிய எழுத்தாளர். அவர் ஆனந்த விகடன், விகடன் தீபாவளி மலர், விகடன் பவழ விழா மலர் ஆகியவற்றில் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு இந்த நூல்.

அவர் தனக்கே உரிய நடையில் கதைகளை எழுதியிருக்கிறார். அங்கங்கே கிண்டலுக்குக் குறைவேயில்லை. கிண்டலின் ஊடே எது நடந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகப் புரியும் வகையில் எழுதியிருக்கிறார். வாழ்க்கையில் சாமானியர்கள் சந்திக்கும் அவலங்களை உற்று நோக்கி அதைக் கதைப்படுத்தியிருக்கிறார்.

வாழ்க்கையைத் தியாகம் செய்து பிள்ளையை வளர்த்த பிறகு முதுமைக் காலத்தில் மீண்டும் ஒரு வைராக்கிய வாழ்க்கையைத் தொடரும் பேச்சியம்மை கதை மனதைப் பிசைகிறது. இது கதையல்ல, வாழ்க்கையின் யதார்த்தம். இப்படிப்பட்ட தாய்மார்களை அடுத்தத் தெருவில், நாம் வாழும் ஊரில் பார்க்கத்தானே செய்கிறோம்.

நூல் ஆசிரியர் அலுவல் நிமித்தமாக வட நாட்டில் வாழ்ந்தவராதலால், மும்பை, தாணே, கோவா போன்ற ஊர்களையும் அதன் சுற்றுவட்டாரத்தையும் வைத்துக் கதையைப் பின்னியிருப்பதும், இந்தி, மராத்தி மொழிகளையும் தன் கதைகளில் கையாண்டிருப்பதும், அதன் மாந்தர்களை பாத்திரங்களாகப் படைத்திருப்பதும் சுவையை கூட்டுகிறது. ஆனால், தமிழகமானாலும் வட மாநிலமானாலும் உணர்வுகள் ஒன்றே என்ற இழை கதைகளில் சன்னமாக பின்னப்பட்டிருப்பது கதைகளின் வலிமை.

கதைகள் எல்லாத் தரப்பு வாசகர்களையும் ஈர்க்கும் என்பது நிச்சயம்.

## காமம் செப்பாது...

கதை எழுத ஆரம்பித்தது 1975 ‘தீபம்’ இதழில் தொடங்கி இந்த ஆண்டு விகடன் தீபாவளி மலர் வெளியிட்ட ‘கடிதடம்’ ஈறாக 38 ஆண்டுகளில் என் கதைகளின் ஐந்தொகை 122. எண்ணிக்கையில் என்ன இருக்கிறது என்றாலும் எண்ணிக்கையும் மகிழ்ச்சிக் குறியீட்டு எல்லைதான்.

நெடுநாட்கள், ஈடன் தோட்டத்து விலக்கப்பட்ட கனியென இருந்தன எமக்கு வெகுசன பருவ இதழ்கள். சிற்றிதழ் அல்லது சிற்றிதழ் பாவனை இதழ் தாண்டி எழுதுவதை எமது குருக்கன்மார் ஆதரித்தவரில்லை. சொந்த புத்தி என்னாயிற்று எனக் கேட்பீர்கள்! அது தெளிந்துவர எனக்கு 25 ஆண்டுகள் எடுத்தன. பலருக்கும் பித்தம் முன்பின்னாகத்தான் தெளிந்தது.

2001-ம் ஆண்டு தொடங்கி 2013-ம் ஆண்டு வரை எனது 13 கதைகளை ஆனந்தவிகடன் வெளியிட்டுள்ளது. சராசரியாக ஆண்டுக்கு ஒன்று. வேறு சில படைப்பாளிகளின் முகம் இருமடங்கோ, மும்மடங்கோ பொலிந்திருக்கக் கூடும். எனது கதைகளைத்தானே நான் பேசவியலும்?

இந்தப் பதின்மூன்று கதைகளுமே எனக்கு முக்கியமான கதைகள். காக்கை என்றில்லை, எந்தப் பறவைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சுதான். வாசிப்போர் இவற்றின் சிறப்பையும் பன்முகத் தன்மையையும் மாறுபட்ட பாடுபொருள்களையும் வேறுபட்ட மொழி ஆள்கையையும் உணர்வார்கள் என்பதில் எனக்கு ஐயப்பாடு ஏதும் இல்லை.

‘கொங்குதேர் வாழ்க்கை’ எனும் இந்தப் புத்தகத் தலைப்பை வாசகர் யோசிக்கக் கூடும். கொங்கு எனில் பூந்தாது, தேன். தேனைத் தேர்ந்து நடக்கும் வாழ்க்கைப் பயணம்.

கொங்குதேர் வாழ்க்கை அம் சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ?

என்பது குறுந்தொகையில் இறையனார் பாடிய குறிஞ்சித் திணைப் பாடல். குறுந்தொகையில் இவர் பாடியது இது ஒன்றுதான். பத்துப் பாட்டிலும் எட்டுத் தொகையிலும் இறையனார் பாடியது ஒன்றே ஒன்று.

அதுவே குறுந்தொகையின் இரண்டாவது பாடல். இறையனார் என்பதோர் புலவர் என்றும், இல்லை அவரே முக்கண் முதல்வர் என்றும் இரு தரப்புகள் உண்டு.

ஐந்துவரிப் பாடலில் முதலிரு வரிகளை மட்டுமே நாம் எடுத்து ஆள்கிறோம். ‘பூந்தாதுகளையே தேர்ந்து உண்பதை வாழ்க்கையாகக் கொண்ட அழகிய சிறகுடைய தும்பியே! நீ உன் சொந்த விருப்பு வெறுப்புகளைச் செப்பாமல், கண்ட உண்மையை மொழிவாயா?’ இது பாடல் வரிகளின் பொருள்.

கலைஞனின் வாழ்க்கையும், கொங்குதேர் வாழ்க்கைதான். அவனும் காமம் செப்பாது, கண்டது மொழிய வேண்டும். சற்று யோசித்துப் பார்த்தால் எத்தனை ஆயிரம் ஆண்டுகளாகத் தேனீ மது சேகரிக்கிறது! என்று நீ, அன்று நான், உன் எதிரி அல்லவோ எனும் பாங்கில், எத்தனை ஆயிரம் ஆண்டு காலமாக அது சேகரித்த தேனை மனிதரும் சில விலங்குகளும் கவர்ந்து உண்கின்றன. அதனால் தேனீக்களின் பரமபரையினர் தேன் சேகரிப்பில் உற்சாகம் இழந்து விட்டனவா? தேன் சேகரிப்பை மறந்து விட்டனவா? துறந்து விட்டனவா?

இஃதோர் நகை முரண். எவனும் சொல்லிவிட்டுப் போகட்டும், கலைஞன் வாழ்க்கை கொங்குதேர் வாழ்க்கை. அவனது சேகரம் மனித இனத்துக்கானது. பாக்கியசாலிகள் பயன்படுத்திக்கொள்வார்கள். இந்தத் தொகுப்புக்கான தலைப்பைத் தீர்மானித்த விகடன் பிரசுரத்தார்க்கு நன்றி.

2000-த்துக்குப் பிற்பட்ட என் எழுத்தின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை இந்தக் கதைகள் உங்களுக்குத் தரும். காலக் களிம்பு படர்ந்த கதைகள் அல்ல இவை. இன்னும் புதுக்கருக்கு அழியாதன. இவற்றுள் சில, இன்னும் தொகுப்பு ஆகாதன.

இன்னொரு செய்தி... விகடனுக்காக என்று தனியாக நான் இவற்றை எழுதவில்லை. சிறுகதை எனத் தேர்ந்து எழுதியவற்றை விகடன் வெளியிட்டது. ஒவ்வொரு கதை வெளியான உடன்தானே விகடன் வாசகர் எதிர்வினை என்னை எப்போதும் குதூகலப்படுத்தியிருக்கிறது. வாசகனைப் படைப்பு சென்று அடைவது இன்றியமையாதது.

2008-2009 காலகட்டத்தில் ஆனந்த விகடனில் தொடர்ந்து 42 கிழமைகள் நானெழுதிய ‘தீதும் நன்றும்’ எனக்குப் பெரும்புகழ் ஈட்டித் தந்தது.

இவ்வாண்டு, ஜூலை 27-ம் நாள் சென்னையில், விகடன் மாணவப்

பத்திரிகையாளருக்கு உரையாற்றச் சென்றபோது விகடன் ஆசிரியர், மதிப்புறு ரா.கண்ணனிடம் வேண்டுகோளாக வைத்தேன். விகடனில் வெளியான என் கதைகளைத் தொகுப்பாக வெளியிடலாமே என. ஒருவேளை இத்தகைய தொகுப்பு ஒரு முன்மாதிரியாக இருக்கக் கூடும்.

இந்தத் தொகுப்பில் ‘தன்ராம் சிங்’ என்றொரு கதை உண்டு. அந்தக் கதை கோரும் பாங்கில், இதன் மூலம் நான் சொல்ல வருவது, கனவான்களே! கலைஞர்களையும், சற்றுக் கருணையுடன் பாருங்கள். அவர்கள் உங்களுக்காகவே கொங்கு தேர்கிறார்கள். கலைஞர்கள் எனும்போது திரைப்படக் கலைஞர்கள் என்று தீர்மானிக்கப்பட்ட பொருளில் நான் பேசவில்லை.

அரசாங்கம் வாங்கும் என்றெண்ணி, புத்தகம் எழுதி, அச்சிட்டு வெளியிட்டு, விற்பனை செய்வது எதிர்காலத்தில் நம்பக்கூடிய காரியம் அல்ல. எனவே நேரடியாகப் படைப்பாளி வாசகனை அடைவதும் அவனைப் புத்தகத்தின் விலை தந்து வாங்கச் செய்வதும் இன்றியமையாததாகிறது. அந்த நோக்கில் ஆனந்தவிகடனின் இவ்வகை முயற்சிகளுக்கு வாழ்த்தும், எம் மீது கொண்டுள்ள அபிமானத்துக்கு நன்றியும்.

மிக்க அன்புடன்,

நாஞ்சில் நாடன்

2013 அக்டோபர் 21
கோயம்புத்தூர் - 641 028.

இந்த நூல்**...**

சகோதரர் ஏர்வாடி எஸ்.ஐ.சுல்தானுக்கு...

## உள்ளே...

1. தாலிச் சரண்
2. பாம்பு
3. காடு
4. கொங்குதேர் வாழ்க்கை
5. பரிசில் வாழ்க்கை
6. தன்ராம் சிங்
7. பேச்சியம்மை
8. நீலவேணி டீச்சர்
9. கான் சாகிப்
10. ஆத்மா
11. பெருந்தவம்
12. பூனைக் கண்ணன் கடத்திய அம்மன்
13. கடிதடம்

# 1

## தாலிச் சரண்

நாகமாகச் சீறியது இரு கைவிரல்கள். பிடித்துத் தொங்கிய பொன்னில் தாலி. உலகில் மிகக் குறைந்த நபர்கள் பங்கேற்ற தாலிக் கட்டுக்கள் அதற்கு முன்பும் நடந்திருக்கும், பின்பும் நடக்குமாக இருக்கும்.

கிழக்குப் பார்த்து விளக்கேற்றி வைக்கப்பட்டிருந்தது. கிழக்கென்பது அனுமானம் தீர்மானித்தது. கான்கிரீட் அடுக்குப் பெட்டிகளுக்குக் கிழக்கும் - மேற்கும் என்பது, உழக்கில் கிழக்கும் - மேற்கும் போல. ஆனால், வாஸ்துப் புரோகிதர்கள் உழக்குக்குள்ளும் ஈசான மூலை, கன்னி மூலை, அக்னி மூலை என வாய்ப்பாடு சொல்வார்கள்.

பிள்ளையார் பிடிக்கப் பசுமாட்டுச் சாணம் வேண்டும். கிடேரியானால் சாலவும் நன்று. வேண்டுமானால் மும்பை நகரெங்கும் கேட்பார் கேள்வி இன்றியும், ஓட்டுவாரும் மேய்ப்பாரும் இன்றியும், சேணமும் கடிவாளமும் இன்றியும் தள்ளாடித் திரியும் கிழட்டுக் குதிரைகளின் லொத்திகள் கிடக்கும் ஆங்காங்கே.

எருமைத் தொழுவங்களில் - கோரேகாவ், கோகேஸ்வரி தாண்டிப் போனால் - மழை பெய்யும் ஜூன் - ஜூலை - ஆகஸ்ட் - செப்டம்பர்

மாதங்கள் அன்றிக் குளிக்காத எருமைகளின் சாணம் கிடைக்கலாம். கிராமத்துப் பசுமாடுகளின் அரைத்து உருட்டிய எள்ளுத் துகையல் போல, கெட்டிச் சாணமாக இராது அது.

ஓட்டல் கழிவு இலைகள், சந்தைக் குப்பை, பாலிதீன் பைகள், சாக்குப் படுதாக்கள், வால் போஸ்டர்கள், மக்காச்சோளத் தாள்கள், முட்டைக்கோஸ், பூக்கோசு கழிவு இலைகள் தின்று செரித்தும் செரியாமலும் கெட்டியாகக் கரைத்த கம்மங்கூழ் போலக் கழியும் எருமைகள். உருட்டி வார முடியாது. அகப்பையால் கோரி வாரலாம். அதற்கும் மாட்டுக்காரப் பையாக்கள் தயவு வேண்டும்.

பிள்ளையார் பிடிக்கும் அளவுக்கு வீட்டில் மஞ்சள் பொடி இருக்காது. எந்த மாவானால் என்ன என்று ‘மௌனாத் பஞ்சன் வீர் ஹனுமான் சக்கி’யில் அரைத்த கோதம்பு மாவு கணிசமாக இருந்தது. வெல்லப் பிள்ளையார், படிகப் பிள்¬ளார், கற்கண்டுப் பிள்ளையார் போல அது கோதம்பு மாவுப் பிள்ளையார்.

தும்பு வாழை இலையின் ஓரத்தில் உட்கார்ந்திருந்தார். ஒரு சீப்பு மோரீஸ் வாழைப்பழம், ஊதுவத்தி, சின்ன அலுமினியத் தட்டில் எரிந்துகொண்டிருந்த சூடச் சதுரங்கள், உடைந்து மலர்ந்து கிடந்த தேங்காயில் ஊதுவத்திச் சாம்பல் கனிந்து விழுந்தது.

தலை குனிந்து தாலி ஏற்க நின்றிருந்த பாலம்மாள், அதிக விலையில்லாத முகூர்த்தப் பட்டு சுற்றியிருந்தாள். புல்லுப் போல ஒரு சங்கிலி. காதில் பழைய மங்கல் கம்மல்கள். கைகள் இரண்டிலும் கண்ணாடி வளையல்கள். தலையில் கனகாம்பரமும், ஜாதிமல்லியும். விளக்கைத் தூண்டி நிமிர்ந்த பாலம்மாளின் அம்மாவின் கண்களில் தாலி சர்ப்பம், பிளந்த நாக்கை நீட்டித் துழாவியது.

“கட்டு தம்பி... நேரமாகுல்லா..?”

நேரம் பொழுதடைந்து ‘சாயா கீத்’ ஓடிக்கொண்டிருந்தது தொலைக்காட்சி டப்பாக்களில். கொட்டில்லை, முழக்கில்லை, குரவையில்லை, மஞ்சள் மங்கல அரிசியும் உதிரிப் பூவிதழ்களும் தூவிச் சொரிவாரில்லை. ‘மாங்கல்யம் தந்துனானே’ இல்லை, ‘கெட்டிமேளம், கெட்டிமேளம்’ இல்லை. கலைந்த சிகையை ஒதுக்குவாரில்லை, வியர்வை ஒற்றியெடுக்க பூங்கைக்குட்டை பிடித்த பொன் வளைக் கரங்கள் இல்லை, புத்தாடைகளில் கல்யாணப் பந்தலைச் சுற்றி அலையும் சிறுவர் - சிறுமியர் இல்லை.

பாலம்மாள் என்ற பதினைந்து வயதுச் சிறுமி சுமந்து நின்ற மூன்று

மாதக் குழந்தையின் கனம் தொங்கியது அடிவயிற்றுப் பரப்பிலா, முலைக்குவடுகளிலா, மனதின் ஆழ்கடல் சலனங்களிலா என்று தெரியவில்லை.

தாலியேந்தி நின்றார் புலவர் முத்தனேந்தல். அவர் முகத்திலும் ஒளியோ, களையோ இல்லை. உள்ளூறை உவமமாக ஒரு தவிப்பு. அணிந்திருந்த பட்டு வேட்டியும், பட்டுச் சட்டையும் தோளில் கிடந்த சால்வையும் கணக்கற்ற கவியரங்குகள் கண்டவை. கையில் இருந்த கைக்குட்டைக்குப் பதில் காகிதச் சுருள் இருந்தால்,

தாயைப் பாடித் தமிழ்பாடி
தானைத்தலைவன் அடிபாடி
சேயைப் பாடச் சொல்கின்றீர்
செவியைத் தாரும் சிங்கங்காள்

-என்று தொடங்குவதற்கோர் ஒலிவாங்கி வேண்டும் முன்னால்.

கவிக்களம் பல கண்ட புலவர் முத்தனேந்தல் மனதில், நுங்கும் நுரையுமாக உணர்ச்சிப் பேராறு சீறிப் பாய்ந்து கொண்டு இருக்கலாம்தான்.

பாலம்மாளின் அம்மாவின் கண்கள் எந்த நேரமும் பொங்கிவிடும் போலக் கலங்கிச் சிவந்தவண்ணம், யார் முகத்தையும் கூர்ந்து பார்க்க முடியவில்லை. கார்த்திகை மாதக் குளிரிலும் உள்ளிருந்து கிளர்ந்து சீறியது வெப்பம். மணப்பெண்ணை அருகணைத்து தாலிக் கொடியின் முடிச்சுகளைப் போட்டார் புலவர்.

ரத்தம் செத்துப்போன கிழவர்கள் கடைசிக் காலத்தில் தன்னைப் பார்க்க ஆளில்லை என்றோ, மருமக்கள்மாரின் உதாசீனம் தாங்காமலோ, பதினாறு வயது பாவப்பட்ட குமருகளை வயலும் தோப்பும் எழுதிக் கொடுத்து ‘அடுக்களைத் தாலி’ கட்டி இரவோடிரவாகக் கூட்டிக் கொண்டு வருவார்கள் வில் வண்டிகளில்.

“விழுந்து கும்பிடம்மா மாமாவை...”

மஞ்சள் நூலில் கோக்கப்பட்டிருந்த தாலி, மஞ்சள், குங்குமப் பொட்டுகளும் சூடிய பூவுமாகப் பொலிவாகத் தொங்கியது. இரண்டு தோள்களையும் பற்றித் தூக்கி நிறுத்திய புலவர் கண்கள் கலங்கிக் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தார்.

“போட்டும் தம்பி... இனிமே அவளைப் பொன்னு போல வெச்சுக் காப்பாத்து...” என்றாள், புலவரின் அக்காவாகிய பாலம்மாளின் தாய்.

“அண்ணன் காலையும் தொட்டுக் கும்பிடம்மா...” என்றாள்.

எரிந்தவிந்திருந்த சிதையின் சாம்பல் போல் திருநீறு காந்தியது.

இலை போட்டுப் பரிமாறினார்கள். புலவரும் அவனும் அருகமர்ந்து புலவர் வீட்டில் உண்பது அது முதல் முறை அல்ல. பதினைந்து வயதுச் சிறுமிக்கு என்ன ஆக்கி அரைக்கத் தெரியும்? குழம்புத் தோதில் ஒன்றிருக்கும். உப்பும் புளியும் உறைப்புமாக. எப்போதாவது புலவரைப் பார்க்கப் போய்விட்டு சாப்பாட்டு நேரம் கடந்துவிடும் எனப் புறப்பட்டால் பாலம்மாள் என்ற சிறுமி சொல்வாள்...

“இருந்து சாப்பிட்டுப் போங்கண்ணே...”

“உனக்கென்னம்மா வைக்கத் தெரியும்? நான் போறேன் மெஸ்ஸுக்கு...”

“அட, சாப்பிட்டுத்தான் பாருங்கண்ணே... மாமாவே சாப்பிடுது பேசாம...”

நிறையப் புளி கரைத்து, புளியின் நிறத்தில் ரசம். புடலங்காயோ, முட்டைக்கோஸோ பொரியல். வடித்த சோறு சுடச்சுட இருக்கும்.

புலவர் சங்ககாலக் கனவுகளில் முறத்தை வைத்துப் புலியைத் துத்திய வீரக் கடல்களில் ஆடிக்கொண்டிருப்பார். ‘அது புலிதானா?’ எனக் கேட்க, சண்டை வந்துவிட்டது ஒரு நாள். புலியை அடித்துத் துரத்தினாளா, இல்லையா என்பதல்ல முக்கியம். அடித்து விரட்ட முடியும் என்கிற மனோபாவம் முக்கியம் என்பார்.

சற்றுத் தீவிரமான நீண்ட முகம். வீரத் தமிழ் மீசை, பழைய காலத் தூண் கிருதா, கைப்பையில் படிக்கத் தீவிரமான புத்தகம். ஆழ்ந்த பெரியாரிய வாசிப்பும் தோய்வும் உண்டு. மதுரைத் தமிழ்ச் சங்கம், தென்னிந்தியக் கல்விக் கழகம் நடத்திய உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர். தமிழாசிரியர் என்றால் சட்டியிலும் இல்லை, அகப்பையிலும் இல்லை எனும் கடனுக்கு மாரடிக்கிற கூட்டமல்ல. அவர் அடிக்கடி சொல்லும் கவிதை வரிகள்:

‘சாவில் தமிழ் படித்துச்

சாக வேண்டும் என்

சாம்பல் தமிழ் மணந்து

வேக வேண்டும்...’

நகரம் சுற்றும் வேலை அவனுக்கு. எப்போதாவது புலவர் வேலை பார்க்கும் பள்ளியருகில் போனால், “தோழர், இங்கேயொரு மலையாளத்தான் மெஸ் இருக்கு. சாப்பிட்டுவிட்டுப் போகலாம்” என்பார்.

அவருக்குக் கல்யாணமாகியும் பிரம்மச்சாரி வாழ்க்கையாக இருந்தது. அக்காள் எவ்வளவு சொல்லியும், புலவருக்குப் படித்த பெண்ணைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று தட்டிவிட்டு உறவுவிட்டு, சாதிவிட்டுக் கட்டிக்கொண்டார். புலவருக்குப் படித்த பெண்ணுக்கு நல்ல சம்பளமும் இருந்தது. புலவரைவிடவும் முதிர்ந்த கன்னி.

அவருக்கும் எவ்வளவோ கனவுகள் இருந்திருக்கும். அரசு வேலையை விட்டுவிட்டு மும்பைக்கு வர மனைவிக்குப் பிரியமில்லை. கணவன் என்பதே சிறுவர் விளையாட்டின் ‘தாச்சி’ தானோ என்னவோ? பொருள் வயிற் பிரிந்து, ஆண்டுக்கொரு முறை விடுப்பில் வந்து, வயிற்றில் பிள்ளை கொடுத்துவிட்டுப் போய் விடுவானோ என்ற கவலை மாமனாருக்கும், மைத்துனன்மாருக்கும். சொல்வார்களல்லவா, மனைவியைப் புணர மாமனாருக்குச் சும்பனம் செய்ய வேண்டும் முதலில் என்று. அதுபோல புலவர் காற்றோட்டமாக முன்னறையில் மைத்துனன்மாருடன் படுத்தார் தினமும்.

பையாக்கடை சாயும், மலையாளத்தான் கடை சாப்பாடுமாகக் காலம் கழிந்ததில் நெஞ்சுக்கூடு முட்ட இரும ஆரம்பித்தார்.

“தோழர், வாங்க, டாக்டரைப் பார்த்து வரலாம். இருமித் துப்பினால் ரத்தம் வருது சில நாளாக!” என்றார் ஒரு நாள்.

அந்த ஆண்டு தமிழ் மன்றக் கவியரங்கத் தலைமைக்கு, புலவர் தாம்பரம் டி.பி. சானடோரியத்தில் இருந்தார். என்றாலும் வாழ்த்துக் கவிதை தபாலில் வந்தது. புலவருக்குப் பிடித்த பத்தினி போய்ப் பார்த்தாளா, அல்லது நோய் தொற்றிக்கொள்ளும் என்று ஒளிந்து கொண்டாளா என்று தெரியவில்லை.

ஆறு மாதங்கள் பொறுத்து, தாம்பரத்தில் இருந்து குணமாகி வந்தபோது, பொங்கல் வீட்டிலிருந்து மாறி, மாகிம் லேபர் கேம்பில் ‘ஒன் ரூம் கிச்சன்’ வீடு பார்த்துக் குடியேறினார். தபாலில் சேர்க்கச் சொல்லி ஒரு நாள் அவர் கொடுத்த உள்நாட்டுக் கடிதம் உமிழ் நீரில் ஒட்டியதால் சரியாக ஒட்டப்படாமல் இருந்தது. மனம் வழக்காடிய தர்மங்களை மீறிப் படித்தபோது, ‘அடி! காந்தா! நான் புழுத்துச் சாகிறேன். நீ கொழுத்துத்

திரிகிறாய்’ எனும் பாங்கில் வரிகள் ஓடின. ஏன் படித்தோம் என்றிருந்தது அவனுக்கு.

பத்து நாட்களில் ஊரில் இருந்து அக்காள் பெண் பாலம்மாளைக் கூட்டிக்கொண்டு வந்தார். பெருக்க, துடைக்க, துவைக்க, சமைக்க, தண்ணீர் பிடிக்க, பாத்திரம் கழுவ, பால் வரிசையில் நிற்க...

முதன்முறையாக அவளை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனபோது பாலம்மாள் கண்களில் ஊர்க் கிணற்றில் ஊறிய நீர். அது பெருநகரத் தூசி பட்டுக் கலங்கியது.

வாரந்தோறும் ஞாயிறுகளில் புலவரைத் தமிழ்மன்றப் படிக்கட்டுகளில் காணுவது தவறாது. உளுத்துப் பொடிகள் உதிரும் சங்கப் பலகை.

ஒரு ஞாயிறு மாலையில் வழக்கமான நான்கு மணிச் சந்திப்பில் சொன்னார்...

“தோழர், முக்கியமான வேலை ஏதும் இருக்கா?”

“இல்லை புலவரே!”

“வாங்க, போகலாம்.”

நடந்து மாதுங்கா வந்து, தென்னிந்தியப் பொற்கொல்லர் கடையொன்றில் ஏறி அமர்ந்து தாலி ஒன்று வேண்டும் என்றார்.

அவனுக்குப் பரபரப்பாக இருந்தது. பலவும் பார்ப்பனத் தாலிகளாக இருந்தன. சில மராத்தியத் தாலிகள், கொங்கணித் தாலிகள். புலவர் என்ன சாதியென்று அவனுக்கு ஊகம் ஒன்றுமில்லை. அவர் மனதில் இருந்த தாலியைத் தட்டான் கண்டுகொள்ள முடியாத திரை அடர்ந்திருந்தது. பென்சிலால் உத்தேசமாக வரைந்து காட்டினார்.

“ஓ... நீங்க ராமநாதபுரம் ஜில்லாக்...ங்களா? அது இங்க கிடைக்காதுங்க... உங்க ஆளுங்க மும்பையிலே குறைவு. ஆர்டர் கொடுத்தா ஊரிலே சொல்லிச் செய்து கொண்டுவரலாம். அட்வான்ஸ் கொடுத்தா ரெண்டு வாரம் ஆகும்.”

புலவரின் அவசரம் பதினைந்து நாட்கள் பொறுக்காதெனத் தோன்றியது. குப்பை போலக் கண்ணாடி மேசை மீது தாலிகள் கிடந்தன. விற்ற தாலிகள், அடமானத் தாலிகள், அறுத்த தாலிகள், கள்ளத் தாலிகள், ஆர்டர் கொடுத்துப் பெற்றுக்கொள்ளப்படாத தாலிகள்.

எதைத் தெரிவு செய்வதென்று தெரியவில்லை. கவியரங்கச் சொற்களில் எதுகையும் - மோனையும் - உவமையும் - உருவகமும் தேர்வது போலிருந்தது. ஒப்புதலின்றித் தலையசைத்தார். அடமானக் கடையொன்றில் இருந்து மேலும் தாலிகள் வந்தன.

'தமிழர் திருமணத்தில் தாலி' என்ற புத்தகத்தின் தலைப்பு ஒன்று அவசியமற்று நினைவில் ஓடியது அவனுக்கு. புலவரிடம் ஒன்றும் பரிந்து சொல்ல இயலவில்லை. தன் சாதித் தாலியேதும் தென்படுகிறதா என்று பார்த்தான். கணக்கெடுத்தால் இந்திய நாட்டில் இருபது, முப்பதினாயிரம் வகைத் தாலிகள் இருக்கக் கூடும். தாலி வகைக்கென்றோர் அரசியல் கட்சியும் இருக்கக் கூடும். மாம்பழங்களே ஆறாயிரம் வகைகள் இருக்கும்போது தாலிகள் இருக்கக் கூடாதா?

முழுத் திருப்தியும் இல்லாமல், வேறுவழியும் இல்லாமல், கிடந்தவற்றில் கிட்டத்தட்ட சொந்த சாதித் தாலி போலத் தோன்றிய ஒன்றை எடுத்து விலை போடச் சொன்னார்.

குங்குமம் வைத்து, ரோஸ் காகிதத்தில் பொதிந்து எழுந்து நின்று, சாமி படங்களை நோக்கித் தொழுது, எடுத்துக் கொடுத்தார் பொற்கொல்லர். வாங்கிச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டார் புலவர். 'காட்டுமிராண்டி, வெங்காயம்' என உள் மனது ஊளையிட்டது.

பிறகு கொஞ்சம் பூ, மோரீஸ் வாழைப்பழம், வாழை இலை, மஞ்சள் கயிறு, சூடம், சாம்பிராணி, வெற்றிலை பாக்கு...

கொஞ்சம் கொஞ்சமாகத் துலங்கி வந்தது.

பாலாபிஷேகம் கொள்ளும் அம்மன் சிலையில் முகமும் மூக்கும் கண்களும் நாடிக் குமிழும் தோள்களும் முலைகளும் இடுப்பும் அடிவயிறும் நாபிக் குழியும் துலங்கி வருவதைப்போல...

புலவரிடம் கலகலப்பில்லை. அவனுள் வெறுப்பு, நிராசை, இரக்கம், சங்கடம், குற்றம் எல்லாம் குமிழியிட்டுப் பொங்கிப் பொங்கி வந்தன.

எப்போதும் புலவர் வீடு நாடி நடக்கும் பாதைதான். வழியெங்கும் மௌனத்தின் முட்கள் கீறிய நீண்ட பயணம்.

"கூச்சப்படாம வவுத்துக்குச் சாப்பிடு தம்பி" என்றாள் அக்காள்.

நிமிர்ந்து பார்த்தான். சிரிக்கத் தோன்றவில்லை. சேமியாப் பாயசம் இனிப்புப் பெய்த சுடுகஞ்சி போலிருந்தது. புறப்படுகையில் சொன்னாள்.

"நான் ரெண்டு நாள்ளே ஊருக்குப் புறப்படுவேன் தம்பி. நாலஞ்சு

மாசம் செண்ணு வாரேன். கூடப் பொறப்பா இருந்து பார்த்துக்கிடணும். உன்னை நம்பித்தான் விட்டுக்கிட்டுப் போறேன்.”

கண்களின் அன்றைய முக்கியமான வேலை கலங்குவதென்றாயிற்று. பெண்கள் சாப்பிடட்டும் என்று புறப்பட்டவன்கூடப் புலவரும் நடந்து வந்தார். வழக்கமான கடையில் சிகரெட் பொருத்திக் கொண்டார். சற்றுத் தயங்கி, கையைப் பிடித்து உடைந்து அழுதபடி சொன்னார்.

“எல்லாம் நடந்து போச்சு... ரொம்ப வெக்கமா இருக்கு.. நீங்க யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம் தோழர். என்ன?”

மாகிம் லேபர் கேம்பில் இருந்து கோலிவாடா சி.ஜி.எஸ். காலனிக்கு நெடுந்தூரம் நடக்க வேண்டியது இருந்தது. சுயவெறுப்பு சீமைக் கருவை போலக் கலியலுற்றது. நுரைந்துப் பொங்கியும் வந்தது. பாலம்மாள் சுலபமாக உண்மை பேசியிருக்க முடியும். ஆனால் அவளுக்கும் இரண்டு உண்மைகள் இருந்திருக்கும் போல.

**-ஆனந்த விகடன், 18.11.2001**

# 2

## பாம்பு

புரந்தரர் காலனியைப் பாம்பு வந்து சேர்வதற்குள் படிஞாயிறு மலைகளுக்குள் இராத் தங்கப் புகுந்துவிட்டது. நல்ல முனைப்பான வைகாசி வெயில். மழை கண்டு ஆயின மாதங்கள். பாவி அரசு செய்தால் பருவ மழை பொழியாது. செல்லாது இயல்பாக இயற்கை, கசங்கிக் குலையும் கானுயிர் என்பது கார்க்கோடக புராணம். பசிய புல் எலாம் காய்ந்து சருகாகி, ஊர்வன, பறப்பன வருந்தி உயிர் தரித்துக் கிடந்தன. குடையுமில்லை வெயில் தாங்க, பெப்ஸியும் இல்லை தாகம் தீர்க்க.

புதர்கள் அடர்ந்து கிடக்க வேண்டிய செயற்கைப் பூங்காக்களில் காய்ந்த சுள்ளி, சருகு, பாலிதீன் உறை, நசுங்கிச் சிதைந்த தண்ணீர் போத்தல். அசைந்து அசைந்து, வழுக்கி ஊர்வதற்குச் சற்றும் தோதில்லாத தார்ச் சாலை. பகலெல்லாம் வாகன நெரிசல். புகை, டீசல் ஒழுக்கு, கட்செவியையும் சிரமப்படுத்தும் கனல் காற்று. எங்காவது பதுங்கிக் கிடந்து, நடமாட்டம் ஓய்ந்த பிறகு, பேய் உறங்கும் சாமத்தில் ஊர வேண்டியது. ‘ஆழாக்கு அரிசி பொங்கி வெச்சிருக்கேன், தின்னுக்கிட்டுப் போடி மாரியம்மா’ என அதிகாலை அதட்டல்கள் வேறு ஒலிபெருக்கிகளில்.

பாம்பின் முதுகு வலி முடுக்கமாக இருநதது. இரவு உணவாகச் சுண்டெலி, இளைத்துக் களைத்த தேரை, பெயரறியாச் சிறு குருவி

முட்டை. மழைக்காலமும் ஊர்ப்புறமுமாக இருந்தால் கொழுத்த மாக்கிறித் தவளை, நாமத் தவளை, பச்சைத் தவளை கிடைக்கும். தமிழ்நாட்டு நகர்ப்புறங்களில் கிணற்றுத் தவளை என்றொரு இனம் வாழ்ந்தாலும் பாம்பினத்துக்கு உணவன்று என விலக்கப்பட்டது என ஈசாந்திமங்கலம் குளக்கரை கண்ட பொய்சொல்லா மெய்யன் பண்டாரத்தார் கல்வெட்டு அகம் 23, புறம் 44 கூறுகிறது.

ஊர்ப்புறங்களில் ஆரோக்கியமான எலி அல்லது பெருச்சாளி கிடைக்கும். ஊரும் தளர்வு போக்க நாட்டுக் கோழிமுட்டைகள். பால் கூட்டுறவு சங்கக் கறவைக்காரர் எழும் முன் ஊர்ந்து போனால் தாயினும் சாலப் பரிந்து ஊட்டும் நாட்டுப் பசுக்களும் முர்ரா எருமைகளும் காம்பு சுரந்து நிற்கும்.

பசுமடியில் பால் குடிக்க ஆதி முதற் பாம்பு எங்ஙனம் கற்றுக்கொண்டதெனத் தெரியவில்லை. முடிவுறாத பல்கலை ஆய்வு வெளிவந்தால் தெரியலாம். “பசும்பாலை மனிதன் குடிக்கலாமெனில் பாம்பு குடிக்க அனுமதி இல்லையா?” பாம்பின முற்போக்கு எழுத்தாளர் சங்கக் கூட்டங்களிலும், அரவக் கலை இலக்கியப் பெருமன்ற வாதங்களிலும் கேட்கிறார்கள் உரத்து.

காமுற்ற மானிடப் பெண் முலைக்காம்பில் பாம்பு பாலருந்திய, மோகம் தீர்த்து உடலுறவு கொண்ட செய்திகள் தொன்மங்களிலும் இதிகாசங்களிலும் பின்நவீனத்துவக் கதையாடல்களிலும் காணக் கிடைக்கின்றன. தொல்சிற்பங்களில் யோனியாகத் தன்னைப் பாவித்தோ அல்லது நீள் தவளை இனம் என நினைத்தோ நாகங்கள் குறி கவ்வும் காட்சிகள் உண்டு.

பாம்புகளின் காலக் கணக்கில், பல்லீராண்டுகளுக்கு முன்பு, மலையடிவாரத்து பங்களாவில் வாழ்ந்திருந்தார் பேராசிரியர், கலாநிதி, பரமார்த்தலிங்க மாயக்கூத்தன். மாக்கிறித் தவளைக் கறி நாவில் நீர் சொட்ட, பிளவுபட்ட நாக்கைத் துழாவி நீட்டித் துரத்திக்கொண்டு ஊர்ந்ததில் மாயக்கூத்தனின் படிப்பறைக்குள் நுழையும்படி ஆயிற்று.

ஓம் என்றுரைத்தன சங்கு, ஆம் ஆம் என்றுரைத்தன மகுடி.

மாக்கிறி தின்றால் சின்னாட்கள் இரை எடுக்க வேண்டாம். புற்றுக்குள் அறிதுயிலும், ஆழ்துயிலும் கொள்வதைவிடவும் சுகமாக இருந்தது பாம்புக்கு, பேராசிரியரின் புத்தக அடுக்குகள். சமீபத்திய சில பத்தாண்டுகளில் எந்த நவீன இலக்கியமும் பிரித்துப் பார்த்திருக்க மாட்டார் போலும். பின்னட்டைக் குறிப்புகள் கூடப் படித்திருக்க

மாட்டார். பல புத்தகங்களில் வேறுவேறு கல்லூரிகளின் முத்திரைகள் இருந்தன. அத்தனை கல்லூரிகளிலும் வேலை பார்த்தவரா, அல்லது நவட்டிக்கொண்டு வந்தவையா எனத் தெரியவில்லை. விலைக்கு வாங்கியிருக்க நியாயமில்லை. ஏனென்றால் பாடப் புத்தகங்களுக்கு வெளியே அந்த இனத்தவர் பலர் புத்தகங்கள் வாங்குவதில்லை. எந்தக் காலத்திலும் படிக்கவே போகாத புத்தகத்தை இரவல் வாங்கினால் என்ன, நவட்டிக்கொண்டு வந்தால் என்ன?

குளிர்ச்சியும், திட்பமும் கொண்டவையாக இருந்தன எம்.ஃபில்., பிஹெச்.டி. ஆய்வுத் தொகைகள். ‘நகுமோ தாம்பகாட்டா புனைவுத் தளமும் கிரேக்க பார்ஸித் தியேட்டர்களின் செல்வாக்கும்’ எனும் ஆய்வேட்டைப் பேராசிரியர் மாற்று பல்கலைக்கழகத் தேர்வுக் குழுவினராக வாசித்துக்கொண்டிருந்த அடையாளங்கள் இருந்தன.

சுருண்டு, படம் சுருக்கி, உறங்கிக் கிடந்த நேரம் போக, மீதி நேரங்களில் பாம்பு ஆய்வுத் தொகைகளை அலசிப் பார்த்தது. திறனாய்வாளர், கிணற்றுத் தவளை நாட்டுப் பேராசிரியர், கலாநிதி, குமரேச குத்தாலிங்கம் கோபக் குரலில் எழுப்பும் வினா கட்செவியில் உறைத்தது. உலகத்திலுள்ள பாம்புகள் அனைத்துக்கும் தமிழ் தெரியுமா, அதிலும் கள்ளியங்காட்டுத் தமிழ் தெரியுமா, ஆய்வுக் கட்டுரை எழுதப்படும் பல்கலைக்கழக மொழி தெரியுமா என.

பாம்பு சிரித்துக் கொண்டது... பாம்புகளின் சமூகத்தில் தான் பி.ஆர்க். பட்டம் பெற்ற பொறியாளர் என்றோ, வேற்றினக் குழுக்களின் புற்றுக் கட்டுமானங்களில் பிஹெச்.டி. ஆய்வு மேற்கொண்டிருப்பதோ, விரிவான வாசிப்பும் புலமையும் பல கருத்தரங்குகளில் கட்டுரை வாசித்த அனுபவமும் கொண்டவன் என்பதோ திறனாய்வாளருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

பேராசிரியர், கலாநிதி, நாகவேலுக்கரையாள முத்துத்தாண்டவர் எழுதிய திராவிடப் பாம்புகளின் மொழி வரலாறு, பாகம் 43, பக்கம் 1856-ல் குறித்துள்ளபடி பாம்பு மொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவான ஒற்றுமைகள் இருப்பதும், உலகப் பாம்பு மொழிகள் 21,497-லும் அநேகம் தமிழ்ச் சொற்கள் காணக் கிடைப்பதும், உலகப் பாம்புகள் அனைத்துமே தமக்குள் தமிழில் பேசினால் புரிந்துகொள்ளவும் பதில் பேசவுமான பயிற்சி கொண்டவை என்பதும் பாம்புகளின் தொல்குடிகளில் ஒன்றான ஆதிசேடக்குடி மாத்திரம் சிறப்பாக வடமொழிப் பயிற்சி கொணடது என்பதும் சைவப் பாம்பினத்துக்கும் வைணவப் பாம்பினத்துக்கும் அன்று மூண்ட போர் இன்றுவரை ஓயவில்லை என்பதும் இந்தியா -

பாகிஸ்தானியப் பகையுணர்வுக்கு அது எவ்விதமும் இளைத்ததில்லை என்பதும் சமீப காலமாக சீனப் பாம்பரசு ஒத்துத் தீர்ப்பு முயற்சியில் முனைப்பாக இருக்கிறது என்பதும் அறிந்திருக்க வேண்டிய சமீபகாலச் செய்திகள்.

மேலும் ஸ்ஸ், ஷ்ஷ், சுசு, ஹஹ, ஊய்ஊய் என ஒற்றைப் படையிலோ, இரட்டைக் கிளவியிலோ அமைந்த அத்தனை சொற்களும், அது எந்த மனித மொழியில் இருந்தாலும் பாம்பு மொழியிலிருந்து சென்ற திசைச் சொற்கள்தாம் என்பதும் ஐயம் திரிபற நிறுவப்பட்டுள்ள கருதுகோள். மேலும் பழந்தமிழ் இலக்கியங்களில் பாம்பு, பணம், நல்லது, அரவம், அரவு, நாகம், கட்செவி என்றெல்லாம் புழங்கும் ஆயிரக்கணக்கான இடங்களை மேற்கோள் காட்ட இயலும். எகிப்து என இன்று வழங்கப்பெறும் தேசத்தில் நைல் நதிக்கரையில் அமைந்துள்ள பாம்பினக் கூட்டுப் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று பாம்பு மொழிகளில் புழங்கும் தமிழ்ச் சொற்களை ஆய்வு செய்து அகராதி தொகுத்து வருவதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மாக்கிறித் தவளை செரித்த பிறகு பாம்புக்கு இளம் பசி எடுத்தது. இளம் பசிக்கு அருந்தவென ஏதுமில்லை. பேராசிரியரோ அருகம்புல் சாறு ஆசாமி. போன பிறவியில் புல்லாக நேரடியாகவே தின்றிருப்பார். எனவே வெயில் தாழ்ந்த பிறகு வெளியே புறப்படலாமா என பாம்புக்கு மயக்கமாக இருந்தது. அன்று பாம்பு வாசித்துக்கொண்டிருந்த ‘காந்தீயம், பெரியாரியம், அண்ணாயியம், பேரீயம், தோரீயம், வாரீயம், காரீயம் - ஒரு கட்டுடைப்பு’ எனும் ஆய்வு மிகுந்த ஈர்ப்பு கொண்டதாக இருந்தது.

எகிப்திய அரசகுமாரிகளின் மணிமுடிகளை அலங்கரித்த வம்சாவளியில் வந்த பாம்புக்கு ஆய்வில் மேற்கோள் காட்டப்பட்ட பெயர்களில் பல - அவை பாம்பினக் குழுத் தலைவர்களா என்ற சந்தேகம் இருந்தது. ஐயத்துக்கு இடமான பகுதிகளை வாயில் பென்சில் கவ்விக் கோடு போட ஆரம்பித்தபோது பேராசிரியரின் ஆய்வு மாணவன் கையில் மதுக் குப்பிகளுடன் அறையினுள் நுழைந்தான். குருதட்சணையாக இருக்க வேண்டும் என நினைத்து, முக்கால் சுருளாக நின்று என்ன பிராண்டு மது எனத் தெரிந்துகொண்டபின் பத்தியை விரிக்கலாமா அல்லது உருவினாற்போல புத்தக அடுக்குகளினுள் நுழைந்துவிடலாமா என நிதானிப்பதற்குள், ஆய்வு மாணவன் பயத்தில், “ழாம்பு... ழாம்பு” என நாக்குழறினான்.

பேராசிரிர் கொழும்புக் குடை கொண்டு தாக்குவார் என எதிர்பார்க்கவில்லை. சிறுமூளையில் அடிபட்டு, நினைவு பிசக, பாம்பு

மயங்கித் துவண்டது. மூச்சிருக்கிறதா என்று கையால் உணர்ந்தறிய பேராசிரியருக்கு உரம் இல்லை.

கொழும்புக் குடையடிகூட அனாவசியம். ‘விளிம்பு நிலைப் பாம்புகளும், சில வரலாற்றுத் தீர்வுகளும்’ என்று ஒரு கட்டுரை வாசித்திருந்தாலே போதுமானதாக இருந்திருக்கும். பேராசிரியரின் மனைவி சொன்னாள் - குழி தோண்டிப் பாம்பைப் புதைத்துப் பாலூற்ற வேண்டுமென்றும் காளஹஸ்தி சென்று ராகு - கேது ப்ரீதி செய்ய வேண்டும் என்றும் அவசர அடியாக சோமனூர் வாழைத் தோட்டத்து ஐயன் கோயில் போய் வர வேண்டும் என்றும். பேராசிரியருக்கு அதில் நம்பிக்கை இல்லை. மெனக்கெட நேரமும் இல்லை. மேலும் சமயச் சொற்பொழிவுகள் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னால் அவர் கடவுள் மறுப்புக் கழகச் சார்பாளராக இருந்தவர்.

கோல் கொண்டு தூக்கி, சுற்றுச் சுவருக்கு வெளியே புதர்களில் வீசினார் பாம்பை. சில மணிக்கூர் கிடந்த பிறகு பாம்புக்கு நினைவு மீண்டது. தண்டுவடத்திலும் செம்மையான அடி. தொழிலாளர் காப்பீட்டு மருத்துவ வசதி இல்லை. மெடி-க்ளெய்ம் இல்லை. மேலும் ஜெஸ்லோக், பீச்கேன்டி, அப்போலோ, ஏ.ஐ.ஐ.எம்.எஸ் போன்ற புகழ்பெற்ற மருத்துவமனைகளில் பாம்புகளுக்கு நட்டெலும்பு அறுவைசிகிச்சை செய்வார்களா என்றும் தெரியவில்லை. ஆங்கே அமைச்சர்களுக்கும் இ.ஆ.ப-க்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பெருந்தொழில் அதிபர்களுக்குமே இடம் கிடைக்க சிரமம் உண்டு. முன்னாள் போலீஸ் மந்திரியையே வராந்தாவில் கிடத்திப் போட்ட மருத்துவமனைகள் கொண்ட நாடு இது. சிங்கிரிபாளையம், தெலுங்குபாளையம், புத்தூர், காட்டுக்கடை என்ற எலும்பு முறிவு சிகிச்சை மையங்களோவெனில் வெகு தொலைவில் இருந்தன.

பாச்சா, பல்லிகளைத் தின்று சின்னாட்கள் உயிர் வாழ்ந்தது. சாதிக்கு அடுக்காத செயல்தான்.

பக்கத்துப் புற்றிலிருந்த மலைச் சாதிப் பெண் பாம்பொன்று அதன் துயர் தரிக்க இயலாமல் தனது புற்றுக்கு நகர்த்திச் சென்றது. தனக்குத் தெரிந்த பச்சிலைகளைக் கடித்து வந்து ஊட்டியது. புண்ணில் எறும்பு அரிக்காமல் இருக்க பச்சிலை மென்று உமிழ்ந்தது. முதுகு வலி தொந்தரவு செய்யாதபடி மலையாளக் கலவி செய்தது.

தனியாகச் சுருண்டு கிடந்து யோசிக்கும் வேளையில் வஞ்சம் திரண்டு விஷமாய் ஊறியது, அடிபட்ட அரவத்துக்கு. காயம் ஆறி, முதுகில் ஊனத்துடன் பாம்பு, புற்றை விட்டு வெளிப்போந்தது. கலாநிதி

பரமார்த்த மாயக்கூத்தன் தன்னைப் புடைத்து வீசியதற்கு வஞ்சம் தீர்த்து, போட்டுத் தள்ளிவிட வேண்டும் என்ற கறுவலுடன் பாம்பு, வீட்டின் வெளிச் சுவரைச் சுற்றிய புதர்களில் ஊர்ந்து திரிந்தது. காலம் எவருடைய சேவகன்?

பங்களாவில் வேற்று மனித வாடை. பேராசிரியர் வீட்டுத் தோட்டத்தில் குடியிருந்த பாம்பு சொன்னது, சோமாலியா நாட்டில் பூர்வகுடிப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிற்றுவிக்க ஐந்தாண்டு ஒப்பந்தத்தில் போய்விட்டார் என. தன் வாழ்க்கையின் பண்பும் பயனுமே தமிழ்ச் சேவை என்று முடிவுகட்டிய பாம்புக்கு காதருகில் ஷெனாய் வாத்தியத்தின் துக்கம் பொதிந்த ஊதல்.

பாம்பு மலைத்துப் போயிற்று. பாம்புகளுக்கு பாரத நாட்டில், பாஸ்போர்ட் தருவதில்லை. பாலைவன நாட்டுக்குப் போக கள்ளத் தோணியும் இல்லை. விமானங்களில் நுழைவதற்குக் கடுமையான பாதுகாப்புத் தடைகள் இருந்தன. மேலும் அந்தப் பாம்பு நினைத்தபடி பயணம் செய்ய மத்திய அமைச்சரோ, கிரிக்கெட் வீரரோ, டெரரிஸ்டோ, சினிமா நடிகரோ, தொழிலதிபரோ, கடத்தல்காரரோ, கலைத் தூதுவரோ இல்லை.

ஐந்தாண்டுகள் சென்று தனது புதிய மூன்றாந்தாரம் சோமாலிய மனைவியுடனும், புல்கானின் தாடியுடனும் பேராசிரியர் ஊருக்கு வந்தபோது பாம்பு வயோதிகத்தில் இருந்தது. பகலில் சூரிய ஒளிக் கூச்சத்தில் கண் தெரிவதில்லை. இரவில் மாணிக்கனை உமிழ்ந்து அந்த ஒளியில் இரை தேட வேண்டியதிருந்தது. உடல் நீளம் குறுகி கழுத்துப் பக்கம் சின்னச் சிறகுகள் முளைக்க ஆரம்பித்துவிட்டன. எலி சீரணமாவதில்லை. மிக்ஸியில் அடித்துக் கொடுத்தால் சாப்பிட எளிதாக இருக்கும். சட்டை உரிப்பதன் இடைவெளிகள் நீண்டுவிட்டன. விந்து சுரப்பில்லை. பாம்பு முயன்றால் எட்டுப் பத்து அடிகள் பறக்க இயலும் தற்போது.

இந்தியாவில் கால் பட்டதும் பேராசிரியருக்கு ஆசிய - ஆப்பிரிக்க தொல்மொழி ஆய்வு நிறுவனத்தில் இயக்குனராகப் பதவி கிடைத்தது.

இனிமேல் பேராசிரியர் சிவலோகம் அல்லது வைகுந்தம் சேரும்வரை கவலை இல்லை. சம்பளத்தைப் போல இன்னொரு மடங்கு பயணப்படி, பஞ்சப்படி, ஆய்வுப்படி, அதிநேரப் படி, சோற்றுப்படி, வீட்டுப்படி, வேலையாட்கள்படி, புத்தகங்கள்படி, அப்படி, இப்படி எனப் படிகள் பதினெட்டு.

தமிழச் சாதியும் என்ன தவம் செய்தது எனத் தெரியவில்லை. விமான நிலையத்தில் இருந்து விரைந்து, பல்கலைக்கழக வளாகப் பெரும்பாம்புகளிடம் கெஞ்சிக் கெரவிப் புதிய முகவரி கேட்டு, அரவம் பயணம் மேற்கொண்டது. வஞ்சம் தீர்க்கும் பயணம். வாழ்க்கையின் விளிம்பில் நிற்கும் வயசாளிப் பாம்பின் குலமானம் இனமானம் காக்கும் பயணம். வழியில் இட்லி, சாம்பார் கிடைக்குமா, இடியாப்பம் சொதி கிடைக்குமா, தயிர் சாதம் கிடைக்குமா, கையில் எடுத்துவந்த இட்லி மிளகாய்ப் பொடி, வடுமாங்காய், ஆவக்காய், வேப்பிலைக்கட்டி, கைமுறுக்கு, அதிரசம் எல்லாம் பூசணம் பூத்தோ காம்பல் வீசியோ கெட்டுப் போகாதிருக்குமோ என்றெல்லாம் அதற்கு அக்கறை இல்லை.

சிம்ரா பௌர்ணமிக்குள் பேராசிரியரைப் போட்டுத் தள்ளாவிட்டால் அடுத்த கொய்ராலா அமாவாசைக்குக் காத்திருக்க வேண்டும். அதுவும் தாண்டிவிட்டால் அனந்த பட்சத்து அநங்கன் திதி ஒன்றுதான் மாற்று. வஞ்சம் தீர்ப்பது என்பது சாலைக்கடை முட்டை புரோட்டா சாப்பிடுவது அல்ல. நெஞ்சில் கருதிய வஞ்சம் தீராவிட்டால் புலவர் பாடாது ஒழிக தன் நிலவரை என்றும், தன் மனைவி தவளைகளையோ எலிகளையோ புணர்ந்து இனவிருத்தி செய்யக் கடவள் என்றும், அடுத்த ஆடிக் கழிவு சட்டை உரிப்பு வரும்முன் எரி புகுந்து உயிர் மாய்ப்பேன் என்றும் பாம்பு வெஞ்சினம் வேறு பூண்டிருந்தது.

சிறுவாணிச் சாலையில், பாம்பு ஓய்ந்த கதியில் ஊர்ந்துகொண்டிருந்தது. நல்ல தணுப்பான காட்டுப்பாதை. வெயில் உறைக்கவில்லை.

நிறைய கொங்கு வேளாள, பலிஜா - கம்மவார் நாயக்க, தட்சிண மாற நாடார், தேவேந்திர குல வேளாள, கள்ள, மறவ, தேவ, மலையாள நாயர், பணிக்கர், இருபத்துநான்கு மனைச்செட்டி, ஆர்ய வைசியச் செட்டித் தவளைகள் உண்ணக் கிடைத்தன. தந்திரசாலிகளான மேட்டுக்குடித் தவளைகளும் வெள்ளாளத் தவளைகளும் கொழுப்பு வற்றிப் போய்க் கிடைத்தன.

புரந்தரர் காலனி ஆராய்ச்சி மையம், பெரிய வளாகம், வளாகத்தின் உள்ளேயே குடியிருப்புகள். மிகவும் அறிவார்த்தமான சூழல். திரைப்படக் கவிஞர், உலக ஐ.நா. சபை கவி செகரெட்டரி ஜெனரல், குஜ்ஜல நாயக்கன்பட்டி பொன்தூசிக் கவிராயனின் காலம் பற்றிய ஆய்வு அதிதீவிர கதியில் பதினேழு பேர் கொண்ட குழுவால் செய்யப்பட்டு வந்தது. தமிழக முதல்வர் ஆய்வு நூலை வெளியிட்டு, கவிஞருக்கு புதியதொரு பட்டமும் தண்ணீர் இல்லாத தஞ்சை

மாவட்டத்தில் ஐம்பது ஏக்கர் வாழைத் தோட்டத்துக்கான இலவச மானியப் பட்டாவும் வழங்குகிறார்.

தன் சாதியும், பிற சாதியுமான பாம்புகளின் குடியிருப்புகள் இருந்தமை பாம்புக்கு வசதியாகப் போயிற்று. நிலாவில் அமர்ந்து கதைக்க வேண்டிய அவசியமில்லை.

எல்லாம் கணக்கெடுத்து, சிடுக்கில்லாமல் திட்டம் செய்து, பேராசிரியரைக் குறிவைத்து, தோது பார்த்துக் காத்துக் கிடந்து கவாத்து செய்தது பாம்பு. தற்செயலாய்த் தன்னிலும் கிழடான துறவிப் பாம்பொன்றைப் பார்த்தது. வெளிப் படத்தில் இஸ்லாமியப் பிறை, உள் படத்தில் சூலாயுதம், கழுத்தில் சிலுவை. சினிமாக்களில், சீரியல்களில் நடிக்கும் பாம்பு அல்ல. உண்மையிலேயே முற்றும் துறந்த முனி.

பேராசிரியர் லிபிட் புரொஃபைல் குறைக்க, உண்டபின் பெர்முடாஸ் அணிந்து நடை பழகும் முன்னிராக் காலம், சரசரவெனக் காரில் ஏறி, தொடையில் போட்டுவிட வேண்டும் என்று கருதிக் கூட்டிக் காவல் கிடந்தது பாம்பு. துறவியோ உபதேசிக்கும் மனநிலையில். பாம்புக்கோ கிட்டிய அவசரம் போய்விடக் கூடாதே எனும் தவிப்பு. சிம்ரா பௌர்ணமிக்கு இன்னும் மூன்று இரவுகளே இருந்தன.

துறவிப் பாம்பு, தத்துவ வாசிப்பு ஒன்றையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டது. அல்தூசர், நீட்சே, காரல்மார்க்ஸ், ஜெ.கிருஷ்ணமூர்த்தி, ஓஷோ, பாம்பாட்டிச் சித்தர் என மட்டில்லாப் படிப்பு. மூன்று மணிக்கூர் கொல்லாமை பற்றியும் கொன்று தின்னாமை பற்றியும் பாடம் நடத்தியது.

துறவிப் பாம்பு என்ன தின்னும்? வரகரிசிச் சோறும் மொரமொரெனப் புளித்த மோருமா? இல்லை கார்ன் ஃப்ளேக்ஸ் போன்ற எளிய, செரிமான சைவங்களா? துறவியோ ‘இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்’ என திருக்குறளை மேற்கோள் காட்டியது. ‘ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு’ என பைபிள் சொன்னது.

“பேராசிரியருக்கு உன்மீது எந்தப் பகையும் கிடையாது. அச்சம் காரணமாயும், தற்காப்பு உணர்ச்சி காரணமாயும் நடந்த விபத்துத்தானே அது?” - துறவி.

“அந்த விபத்தில் நான் செத்திருக்கவும் கூடும் அல்லவா?” - பாம்பு.

“சாத்தியம்தான். ஆனால், பரதக் கண்டத்தில் தினமும் விபத்தில், தப்பான மருத்துவத்தில், காவல் நிலையங்களில், பயங்கரவாதத்தில்,

இனக் கலவரத்தில், கொள்ளை நோயில், தற்கொலையில், நீரில், தீயில், பாம்பு கடித்து, விஷச் சாராயம் குடித்து, கொலைபட்டு, புல் தடுக்கி, நாட்டைக் காத்து, கொழுத்துச் சாகிறவர்கள் எத்தனை பேர்?" - துறவி.

பேசப் பேச பாம்புக்குக் கண்ணில் பகைக் குறி மறைய, தயை பிறந்தது. மீதிக் காலத்தை ஆசாரியப் பாம்பின் காலடியிலேயே தத்துவ விசாரத்தில் கழித்துவிடலாம் என்றும், விலைமதிப்பற்ற தன் ஒரே சொத்தான நாக மாணிக்கனை பாம்பணை பீடத்தின் மடத்துக்கு விருப்பக் கொடை எழுதிவைத்துவிடலாம் என்றும் தோன்றியது.

பேராசிரியர் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று வஞ்சம் மறந்தது நெஞ்சம். ஆசாரியன் பூஜ்யஸ்ரீ இந்திரகால கனகசபாபதி புள்வரிப் பாம்பு சுவாமிகள் பணிவிடைகள் - உணவு தேடல், வால் அமுக்குதல், இரவுக்கு ரகசியமாக சர்வ ஜாதிப் பேரிளம் பெண் பாம்புகளை செட்-அப் செய்தல் எல்லாம் போகவும் பாம்பிடம் நேரம் மிகுந்திருந்தது.

முன்பு விட்டுப்போன ஆய்வுக் கட்டுரைகளை வாசிக்கலாம் என இருள் பார்த்து, ஆளரவம் தேர்ந்து, பேராசிரியரின் படிப்பறைக்குள் நுழைந்தது. இயக்குநரான பின் பேராசிரியர் மின் கட்டண பில், டெலிபோன் பில், உணவு விடுதி பில் போன்றவற்றை மட்டுமே படித்தாலும், இன்னும் பல ஆய்வுக் குழுக்களிலும் தேர்வுக் குழுக்களிலும் உறுப்பினராக இருந்தார்.

மேசை மீது விரித்த கோலத்தில் அவரது சமீபத்திய ஆய்வுக் கட்டுரை கிடந்தது. 'மலையாளத்தின் புள்ளுவன் பாட்டும் தமிழின் வள்ளுவன் கோட்பாட்டு வழுக்குகளும்' என்ற ஆய்வின் சில பக்கங்களை மேயலுற்றது பாம்பு. கதவருகே மனித நிழலாட்டம். மனதில் மீண்டும் கொழும்புக் குடையடி நாடகம். பாம்பின் மனது கல்லாக இறுகியது. மடிந்து போயிருந்த வஞ்சம் சுரந்தேறி நஞ்சாகத் திரண்டது. துறவிப் பாம்பிடம் பின்னால் ஒரு பாவமன்னிப்பும், சிவ தீட்சையும் பெற்றுக்கொள்ளலாம் என்று தோன்றியது. இத்தனை நாட்கள் அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்களுக்கு ஒரு பிராயச்சித்தமாக இருந்துவிட்டுப் போகட்டும் எனவும் தோன்றியது. சேதுவில் பாலம் கட்ட அணில் சுமந்த மணல் போல தொல் தமிழ்க்குடிக்குச் செய்யும் சேவையாகக்கூட அமையலாம். 'வரட்டும் வரட்டும்' என வஞ்சத்துடன் பாம்பு காத்திருந்தது.

**-விகடன் பவழ விழா மலர், 2002**

# 3

## காடு

சேலம் பேருந்து நிலையத்தில் ஏற்காடு தடப் பேருந்துகள் நிற்கும் பாந்துகளில் ஒரு வண்டியும் இல்லை. மற்ற நேரங்களில் எப்போதும் ஒரு வண்டி சிலர் மட்டும் ஏறி அமர்ந்து காத்திருக்க, கிடக்கும். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பது காரணமாக இருக்கலாம். அந்த ஆண்டின் பள்ளிகள் திறப்பதற்கு முன்பான இறுதி நாட்கள் என்பதால் இருக்கலாம்.

காலை ஒன்பதரை மணிக்கே வெயில் கத்தியால் கீறிக்கொண்டிருந்தது. ஏதோவொரு வண்டி. சாக்குக் கட்டியால் பெயர்ப் பலகையில் ‘ஏற்காடு’ என எழுதியது வந்து சரக்கெனத் திரும்பி நின்றது.

ஏற்கெனவே வண்டியினுள் முக்கால்வாசிப் பயணிகள் இருந்தனர். நம் மக்களில் பலருக்கும் பஸ் பிடிப்பதில் தந்திரமும் முன்யோசனையும் இருக்கிறது. சிலர் இறங்க முயற்சிக்க, வெகு சனம் ஏற முயன்றது.

இரண்டு திறப்புகளிலும் ஆணும் பெண்ணுமாய் இரு சனக் கூட்டம். அவன் எப்போதும் முண்டியடித்து ஏறுபவன் அல்ல. வாழ்க்கையில் எந்தக் காரியத்துக்கும் எந்தக் கட்டத்திலும். எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கும்போதும் நிதானமாய் நடந்துகொண்டிருப்பவன். இலக்கிய முகாம்களில்கூட சாப்பிடப் போகும்போது கிண்ணங்கள் காலியாகி இருக்கும். அதை நிதானம் எனலாம். கூச்சம் எனலாம். பயம்

எனலாம். கோழைத்தனம் எனலாம்...

நின்றுகொண்டேகூட பயணம் போகும் தூரம்தான். கூடிப்போனால் ஒரு மணி நேரம், முப்பது சொச்ச கிலோமீட்டர்கள். நின்றுகொண்டு நெடுந் தொலைவு பயணம் செய்வது அவனுக்குப் புதியதும் அல்ல.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு நாகர்கோவிலில் கன்னியாகுமரி மாவட்ட எழுத்தாளர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் ஒன்றிருந்தது. அவனும் அழைக்கப்பட்டிருந்தான். மாட்டுப் பொங்கலன்று விழா. நூறு ரூபாய்க்கு ஒரு 'பன்ன' விடுதியில் மூத்திரம் நாறும் அறை போட்டிருந்தார்கள். அடுத்த நாள் அலுவலகம் இருந்ததால் அன்று இரவே ஒன்பது மணி சொகுசுப் பேருந்தில் ஒரு இருக்கை 'பிளாக்' செய்யப்பட்டிருந்தது.

சிறப்புக் கூட்டம் மாலை நான்கு மணிக்கு ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அரை மணி நேரம் தாமதம் என்பது நமது கலை, இலக்கிய, பண்பாட்டு நிகழ்ச்சிகளில் அசாதாரணமானது அல்ல. நாலரைக்கு ஆரம்பித்து எட்டரைக்கு முடிந்தால்கூடப் பேருந்தைப் பிடித்துவிடலாம் என மெச்சுப் போட்டிருந்தான்.

விழாவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஒருவர் தலைமை தாங்கி நடத்துவதாக இருந்தது. அவர் நாலரை மணிக்குத்தான் திருநெல்வேலியில் இருந்து புறப்பட்டதாகச் சொன்னார்கள். அங்கே விழா மண்டபத்தில், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளில் ஆறு மணிக்கு ஆரம்பிக்கும் கூட்டம் ஒன்பது மணி வரைக்கும் தொடங்காமலிருக்கும் போது 'அழைக்கின்றார், அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா' எனப் பாடும் நாகூர் ஹனீஃபா போன்று பாடுவோரும் இல்லை.

பாராட்டுப் பெறுவோர் கூட்டத்தில் ஹெப்சிபா ஜேசுதாசன், சுந்தர ராமசாமி, பொன்னீலன், ஐசக் அருமைராசன், நீல.பத்மநாபன், ஜெயமோகன் ஆகியோர் இருந்தனர். தல இலக்கியவாதிகளில் பலரும் இருந்தனர். உரையாடல்களில் நேரம் கடந்து கொண்டிருந்தது.

துணைவேந்தர் வந்துவிட்டார் எனவும் குளிர்ப்பதன விடுதி அறையில் சற்று ஓய்வெடுத்துக்கொண்டு, பயணக் களைப்பு நீங்கிப் புறப்படுவார் என்றும் சொன்னார்கள். மறுபடியும் முகச் சவரம் செய்து, குளித்து, சபாரி உடைகள் பொருத்தி, ஒப்பனைகள் நிறைவு செய்து புறப்பட்டு வர ஏழரை மணி ஆகிவிட்டது.

பாராட்டு விழாவில் ஒரு பொன்னாடை போர்த்துவார்கள். ஏதேனும்

சில - எந்தக் காலத்திலும் படிக்க முனையாத புத்தகங்கள் பரிசளிப்பார்கள். இதற்குப் போய் இந்தக் காத்திருப்பு தேவையா எனப் பட்டது. என்றாலும், அவையில் நிறையப் பேர் இலக்கியக் குடும்பம். கல்யாண வீட்டுக் களை இருந்தது.

சொற்பொழிவு நடந்துகொண்டிருந்தது. மேடையில் எட்டுப்பத்துத் தமிழின் நவீனப் படைப்பாளிகள் 'சிவனே' என உட்கார்ந்திருந்தனர். வயது முதிர்ச்சி அடிப்படையில் படைப்பாளியின் சிறப்புகள் பற்றி, பேராசிரியர் ஒருவர் சொற்பொழிவு, கட்டுரை வாசிப்பு, வாழ்த்து மடல் எனும் பாங்கில் போய்க்கொண்டிருந்தது. துணைவேந்தர் இரண்டு மாமாங்கங்கள் இலத்தீன் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் தமிழ் பயிற்றுவித்துக்கொண்டிருந்ததால் மேடையில் அமர்ந்திருந்த எந்தப் படைப்பாளியின் எந்தப் படைப்பையும் வாசித்ததில்லை.

ஒவ்வொரு பாராட்டுரை முடிந்த பின்பும் படைப்பாளியைப் பாராட்டி, பொன்னாடை அணிவித்து இஸ்லாமியப் பாணியில் தோள் தழுவி, பித்தளைக் கும்பா போன்ற சாதனம் ஒன்றும் கொடுத்தார். ஈயம் பூசி வைத்தால் பழையது குடிக்க வாகாக இருக்கும். பின்பு படைப்பாளியின் ஏற்புரை. வயது அடிப்படையில் ஹெப்சிபா முடிந்து சு.ரா. நடந்துகொண்டிருந்தது. நல்லவேளையாக நகுலன், ஆ.மாதவன், பா.விசாலம், மா.அரங்கநாதன் ஆகியோர் வரவில்லை. இல்லையென்றால் பாராட்டு விழா முடிய அதிகாலை மூன்று மணி ஆகிவிடக் கூடும்.

பொன்னீலன் பாராட்டுப் பெற்று வந்தார். பித்தளைக் கும்பாவைத் திரும்பத் திரும்பப் பார்த்தார். கும்பாவின் நடுவில் துளை போட்டு ஐயன் திருவள்ளுவரின் சிலையின் பிளாஸ்டிக் மாடலை நிறுத்தி, போல்ட் போட்டு முறுக்கி இருந்தனர். துக்கம் பொங்கச் சொன்னார்-

"கும்பாக்க நடுவிலே ஓட்டை போட்டுட்டானுவோ. வத்தல் மொளவோ ஈருள்ளியோதான் போட்டு வய்க்கலாம்"

அவனுக்குச் சிரிப்பாணி வந்தது. சிரித்துப் பயனில்லை. எப்படியும் ஒன்பது மணிப் பேருந்து போய்விடும் - பாராட்டுகளை தூத்து, வாரி சாக்கில் போட்டுக் கட்டி தோளில் சுமந்து, விடுதி அறையைக் காலி செய்து, பெட்டியை எடுத்து மீள்வதற்குள்.

கூட்டம் முடிய ஒன்பதே முக்காமல் ஆகிவிட்டது. சொல்லிக்கொண்டு புறப்பட நேரமில்லை. இரவுச் சாப்பாட்டுக்கு நேரமில்லை. அவசர அடியாக ஒரு செந்துளுவன் பழம் தின்றதோடு சரி.

பெட்டி, பிளாஸ்டிக் பையில் தொங்கிய பொன்னாடை, சந்தன மாலை, பித்தளைக் கும்பா, பாராட்டுரை சேகரம் சகிதம் பேருந்து நிலையம் வந்தபோது பத்தேகால் மணிக்கு ஒரு பேருந்துகூட இல்லை. ஆயிரம் சனம் அலை பாய்ந்தது. விடுமுறை முடிந்து வேலைக்கு, கல்லூரிக்குத் திரும்புபவர்கள். திருநெல்வேலி, மதுரை வண்டிகள்கூட இல்லை. பித்தளைக் கும்பா வகையறாக்களையாவது விழாவுக்கு வந்த தம்பி கையில் தந்திருக்கலாம். அலவலாதித்தனம்.*

வேகமாக, கன்யாகுமரியில் அல்லது மார்த்தாண்டத்தில் இருந்து புறப்பட்ட திருவள்ளுவர் வந்து சரக்கெனத் திரும்பி நின்றது. “ஸ்டேண்டிங்தான்... சென்னை டிக்கட் மட்டும் ஏறுங்க” என்றார் நடத்துனர். மதுரைக்குப் பிறகு சென்னையும் கோவையும் சம்பந்தமில்லாத பாதைகள். வருவது வரட்டும் என்று சத்தம் மூச்சுக் காட்டாமல் உள்ளே நுழைந்து நடு வண்டியில் போய் நின்றான். சற்று நேரம் இரைந்த பிறகு மதுரைக்குப் பயணச்சீட்டு தந்தார். மதுரை வரை நின்று தூங்கி விழுந்தவாறு நள்ளிரவுப் பயணம் - அது ஒரு காலம்.

ஆனால் ஏற்காடு வரை, பட்டப் பகலில் ஒரு மணி நேரம் நின்று பயணம் செய்ய இயலாதா? கையில் பெட்டி, பை எதுவும் இல்லை. கையில் கீர்த்திலால் காளிதாஸ் நகைக்கடை துணிப்பையில் வீட்டில் செய்த எண்ணெய்ப் பலகாரப் பொதி மட்டும்.

எதற்கும் அடுத்த வண்டி போகட்டும் என்று நின்றான். திரும்பிப் போகும் உத்தேசமில்லை. காலை ஐந்தேகாலுக்கு கோவையில் இருந்து புறப்படும் ‘குர்லா எக்ஸ்பிரஸ்’ பிடித்தது. ‘பேன்ட்ரி கார்’ வழங்கிய மூன்று இட்லி, ஒரு வடை வயிற்றில் கிடந்து மிதந்துகொண்டிருந்தது. ஒரு தேநீர் குடித்தால் கொள்ளாம். இனி ஏற்காடு போய்ப் பார்த்துக்கொள்ளலாம்.

அடுத்த பேருந்தில் இடம் இருப்பதுபோல் தெரிந்தது. உள்ளே ஏறிப் பார்த்தபோது காலியான இருக்கைகள் மீது கூடைகள், துண்டுகள், கைக்குட்டைகள், பைகள், கைப்பிள்ளைகள், அந்த நொடியில் பிரசவம் ஆவதுபோல அகலப் பிளந்த தொடைகள். ஒருவர் மூன்று இருக்கைகளிலும் அனந்தசயனமாகப் பரவிக் கிடந்தார். இரண்டு இருக்கைகளில் ஆளில்லாதது போலிருந்தது. நெருங்கிக் கேட்டதும், “இல்ல... ஆள் வருது” என்றனர். மீதி வாழ்க்கையைப் பேருந்து இருக்கையிலேயே செலவழிக்கப் போவதுபோல் பெண்டுகள் இடவசதிக்காக வழக்கிட்டுக் கொண்டிருந்தனர்.

நல்லவேளையாக உடனே நகர ஆரம்பித்தது பேருந்து. பத்தரை

மணிக்குள் ஏற்காடு எத்திவிடுவதாக அண்ணனிடம் சொல்லியிருந்தான். அவன் அங்கு வேலையாக இருந்தான். அவசரமாகச் சில செலவுகள் இருந்தன. நேரில் வந்து வாங்கிக்கொள்ளச் சொல்லி இருந்தான். சாப்பிட்டு வெயில் தாழ்ந்து மடங்கினால் முன்னிரவில் வீடு போய்ச் சேர்ந்துவிட இயலும். அவசரப் பயணம். ஏற்காட்டின் குளிர்காற்று கொள்ளும் மனநிலை இல்லை.

நகரத்துச் சாலைகளில் பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. சேலத்துப் புழுக்கத்தை மாற்றிக்கொண்டிருந்தது காற்று. அவரவர் கதையாடல்களில் ஆழ்ந்திருந்தனர். இருக்கை வாய்த்தவர் முகத்தில் இருந்த பெருமிதமும், நின்றுகொண்டு வந்தவர் முகத்தில் இருந்த கடுப்பும் மாய, யதார்த்தம் பொருந்த இலக்கை யோசித்தவாறிருந்தனர்.

மலை எந்த உற்சாகமும் காட்டாமல் சோம்பிக் கிடந்தது. எத்தனை வண்டி மரம் தினமும் கீழே இறங்கிக்கொண்டிருக்குமோ?

அன்று மலைமேல் அமைச்சர் பங்குபெறும் மலர்க் காட்சி அல்லது காய்கனிக் காட்சி அல்லது வன விழா இருக்கிறது என்றனர். நெருக்கடி நிறைந்த வாகனப் போக்குவரத்து. இரு சக்கர வாகனங்களில் இணை இணையாக. இந்தியாவில் உற்பத்தியாகும் அனைத்து கார்களும், வேன்களும், ஜீப்புகளும்.

மலைப் பாதையின் காப்புச் சுவர்களில் வானரங்களும், மந்திகளும் குட்டிகளுமாய் குந்தியிருந்தன. பயணிகள் எறியும் வாழைப்பழங்கள், பன் ரொட்டிகள், பிஸ்கட்டுகளுக்காகக் கையேந்தி. மூன்று ஆண்டுகளாகச் சரியாக மழை இல்லை. காடு வறண்டு கிடந்தது. ஓடைகள் காய்ந்துவிட்டன. எதைத் தின்று சீவிக்கும் இவை என யோசிக்க வருத்தமாக இருந்தது. சுதந்திரமானதோர் உயிரினம் மனிதனிடம் கையேந்திக் கிடந்தது.

எல்லோரும் உல்லாசமான நிலையில் இருந்தனர். முதல் கொண்டை ஊசி வளைவில் ஓட்டுனரின் சிரமம் தெரிந்தது. பெரிய மலையேறத் தோதில்லாத வண்டி. ஓட்டுனருக்கும் மலையேறிய பழக்கம் இருந்ததாகப் புலப்படவில்லை.

முன்னகர்ந்து, பின்னகர்ந்து, மறுபடியும் முன்னகர்ந்து, ஒதுங்கி, இறங்கும் வாகனத்துக்கு வழியும் விட்டு, மறுபடியும் முன்னகர்ந்து, இடையில் அவசரப்படும் இரு சக்ரதாரிகளுக்கு மனமுவந்து வழிவிட்டு, மறுபடியும் இரண்டாவது கொண்டை ஊசி வளைவு.

இப்படியே கழக முன்னணிப் பேச்சாளர்கள் பாணியில்

வீராணத்திலிருந்து சென்னைக்கு ஒவ்வொரு நீரேற்று நிலையத்திலும் பம்ப் செய்வதை விவரிக்கும் விதத்தில், கொண்டை ஊசி வளைவுகளில் வண்டி சமாளிக்கும் வேலையைச் சொல்லிக்கொண்டு போகலாம். அல்லது தேசியக் கட்சியின் இலக்கியச் செல்வர்கள் மனிதனைக் கிணற்றுப் படிக்கட்டுகளில் அபாயகரமாக நிறுத்தி வைத்துக்கொண்டு ‘மேலே புலி, கீழே பாம்பு’ எனப்படும் அவஸ்தையைச் சொல்வது போலவும் சொல்லிக்கொண்டு போகலாம். நேரம் கொல்வதோ, பக்கம் களைவதோ நமது உத்தேசமில்லை.

ஆறாவது கொண்டை ஊசி வளைவைப் பேசித் தீர்க்க முனைந்த பேருந்து, ‘என்னைப் பெத்த அம்மா’ எனப் புலம்பி மறுக ஆரம்பித்தது.

மலையேறத் தெரிந்த ஓட்டுனர்களும், மலையேறும் திறனுள்ள பேருந்துகளும் முந்தி முந்திப் போக ஆரம்பித்தன. பேருந்தினுள் முனகல் ஒலி பெருகலாயிற்று. எட்டாவது கொண்டை ஊசி வளைவு அடையும்போது புறப்பட்டு ஒன்றரை மணி நேரம் ஆகியிருந்தது. இன்னும் கரை கண்ணுக்குத் தெரியவில்லை. நீர்ப் பறவைகளின் சிறகடிப்புகள் இல்லை. பயணிகளுக்கும் நடத்துனருக்கும் காரசாரமான வெற்று வாதங்கள் ஆரம்பமாயின.

குரல்கள் **1** : மலை ஏறாத லொடக்கு பஸ்ஸை எதுக்கய்யா எடுத்துக்கிட்டு வந்து கழுத்தை அறுக்கறீங்க?

2. டிரைவர் முன்னே பின்னே மலை பார்த்திருக்காரா?

3. சபரிமலை ஏறியிருக்காரு.

4. பிள்ளை குட்டியளோட நாங்க எப்ப போயிச் சேரதுக்கு?

5. இதுக்கு நடந்தே போயிரலாம் போல.

6. பேசாம அடுத்த பஸ்ஸைப் பிடிச்சிருக்கலாம்.

7. நீங்கதானே கெடச்சப் போச்சுன்னு ஆறு பேருக்கு ஸீட்டுலே படுத்துக் கெடந்து இடம் புடிச்சீங்க. உங்க புத்திக்கு வேணும்.

8. இதுல இவங்களுக்கு ஸ்பெஷல் சார்ஜ் டிக்கெட் வேற.

9. எல்லாம் தனியார்கிட்ட விடணும்பா. அப்பதான் நாய்களுக்குப் புத்தி வரும்.

இடையில் ஒரு வளைவில் பயணச்சீட்டுப் பரிசோதகர்களும், அதிகாரி ஒருவரும் ஏறினார்கள். தலை எண்ணினார்கள். பயணச் சீட்டுக்களின் எண்களைச் சரிபார்த்தனர். இரண்டு அரை டிக்கெட்டுகள்

கொடுக்கப்படவில்லை. நடத்துனரைத் தீவிரவாதியைப் பிடித்துவிட்ட பாணியில் பாய்ந்து பாய்ந்து திட்டினார்கள். ஓட்டுனரை நோக்கி அதிகாரி கேட்டார்.

“ஏன்யா..? எப்ப கொண்டு சேர்க்கப் போறே?”

“என்ன செய்யச் சொல்றீங்க சார்? ஆத்தூர்லேருந்து வந்துகிட்டிருந்தேன். மோளப் போகச் சம்மதிக்கலை. நீங்க சொன்னா தட்ட முடியுமா? எடுத்துக்கிட்டு வர்றேன். வண்டிக்கு யோக்கியதை நாங்க சொல்லித்தான் தெரியணுமா?”

எந்த அவசரமும் இல்லாமல், பேருந்து நிதானமாக முன்வைத்த அடியைப் பின்வைக்காமல் ஓடிக்கொண்டு, அல்ல, நகர்ந்துகொண்டிருந்தது.

அண்ணனிடம் பத்தரை மணிக்கு ஏற்காடு பேருந்து நிலையத்தில் நிற்கச் சொல்லியிருந்தான். அவனுக்கு அன்று அலுவலகம் விடுமுறை. அறைக்கும் வழி தெரியாது. அப்போதே பதினொன்றரை ஆகியிருந்தது அவனிடம் செல்போன் இல்லை. அண்ணனிடமும் இல்லை. இருந்தாலாவது ‘காலையில என்ன சாப்பிட்டே? இட்லியா? தோசையா? சாம்பாரா, சட்னியா?’ போன்ற தீவிரமான விஷயங்களைப் பேசலாம்.

அடுத்த ஏற்றத்தில் பேருந்தின் முன்பகுதியிலிருந்து புகையும் நீராவியுமாய் கறுப்பான ஆவியொன்று சுருண்டு சுருண்டு எழுந்தது. பேருந்து, “உம்ம்... உம்ம்...” என்று அமற ஆரம்பித்தது. நகர மறுத்தது. எல்லோரும் ‘க்ராஷ் லேண்ட்’ ஆகும் விமானத்திலிருந்து இறங்கும் அவசரத்துடன் வெளியே பாய்ந்தனர். புகை தணிய ஆரம்பித்தது. முந்திப்போன பேருந்துகளின் உள்ளேயிருந்து ஊளைச் சத்தங்கள் கேட்டன.

“என்ன எழவுன்னு பாருய்யா.” என்றார் அதிகாரி.

ரேடியேட்டர் மூடியைத் தூக்கியவுடன் நீராவி ஊற்றொன்று உயர்ந்து படர்ந்தது. கரியும் நெடி.

“என்னய்யா?”

“ரேடியேட்டர்ல தண்ணி இல்ல சார்.”

“கீழேயே பாக்கறதுக்கு என்ன?”

“எங்கே பாக்க வுட்டானுக.”

குரல் 1 : டீசலாவது இருக்கா?

ஓட்டுனர் : ஃபுல் டேங்க் ஆத்தூர்ல போட்டேன்.

அதிகாரி : இப்ப என்ன செய்யப் போறே?

ஓட்டுனர் : இங்கே எங்க சார் தண்ணி கெடைக்கும்?

குரல் 2 : சார், ஆம்பளைங்க எல்லாம் ஒண்ணுக்குப் போகலாம்.

குரல் 3 : பஸ்ஸிலே லேடீஸும் இருக்காங்கப்பா.

அதிகாரி : ஏம்பா, எளக்காரமா இருக்கா?

குரல் **4** : மேலே ஏறுகிற பஸ்ஸை நிறுத்தி ஏத்திவிடுங்க சார்.

குரல் **5**: : நடந்து போனா ராத்திரி ஆகிடும் சார்.

குரல் **6** : எல்லோருக்கும் மதியச் சாப்பாடு ஏற்பாடு செய்யுங்க சார். ஏர்கிராஃப்ட் ஆனா தருவாங்க.

ஏறும் பேருந்துகளில் எல்லாம் காற்று இடைபுகா வண்ணம் மனித மந்தைகள் இருந்தன. நிறுத்தி எவரையும் ஏற்றிக்கொள்ளவில்லை. எத்தனாவது மைலில் தண்ணீர் கிடைக்கும் என்ற தகவலும் இல்லை. ஓட்டுனரும் நடத்துனரும் பிட்ச்சின் மத்தியிலான மாநாடு நடத்தினார்கள்.

சற்றுத் தள்ளிப் பயணச்சீட்டுப் பரிசோதகர்களும் அதிகாரிகளும் கூடிப் பேசினார்கள். யாருக்கும் எந்த மார்க்கமும் தெரியவில்லை.

காப்புச் சுவரின் ஓரம் நின்று கீழே எட்டிப் பார்த்தான். பிளாஸ்டிக் பைமயமாகக் கிடந்தன. ஊன்றி நோக்கினால் உடைந்த பீர் போத்தல்கள், காலி குவார்ட்டர் போத்தல்கள் காணக் கிடைக்கும்.

சிறு தூறல்கள் விழுந்த துளிர்ப்பு மரஞ்செடிகளில் தெரிந்தது. புற்கள் பசிய ஆரம்பித்திருந்தன.

கூட்டம் அமைதி இழக்க ஆரம்பித்தது.

குரல்கள் **1** : சார்... ஒண்ணு காலியா கீழே இறங்குற வண்டியைத் திருப்பி விடுங்க அல்லது ஏறுகிற வண்டியிலே பத்துப் பத்துப் பேரா ஏத்தி அனுப்புங்க. சும்மா நின்னா எப்படி?

2. செய்ய மாட்டாம்பா. அவுனுக வேலை டிக்கெட் செக் பண்றது மட்டும்தான். அரை டிக்கெட் வாங்கலேன்னா ஆட்டிக்கிட்டு வருவானுக.

3. இங்கே எங்கப்பா இறங்கற பஸ்ஸை திருப்ப முடியும்?

4. அப்ப எல்லாரும் ஆளுக்கொரு கை கொடுங்கப்பா... பஸ்ஸை

மலைலேருந்து உருட்டிடலாம். கீழே சேலத்திலே பொறுக்கிக்கிடுவானுக.

5. என்ன பேச்சப்பா இது? எவன் அப்பன் வீட்டுச் சொத்து? பப்ளிக் பணம்பா... முட்டாள்தனமா பேசப்படாது.

6. அப்ப ஒரு காரியம் செய்வோம். எல்லாம் அப்படியே ரோட்டுக்கு குறுக்கே உட்காரலாம். மந்திரி வரட்டும். இல்லேன்னா கலெக்டர் வரட்டும்...

7. அதாம்பா சரி. எல்லாரும் அப்படியே உட்காரு. வெயிலுதான்... பரவால்லே... பொம்பளையோ, பிள்ளையோ எல்லாரும் அப்படியே உட்காருங்கோ. பயப்படாண்டாம். கலெக்டர் வரட்டும்.

ஓரமாய் வழிவாங்கி இறங்கிவந்த பேருந்தைக் கைகாட்டி, பரிசோதகர்களும் அதிகாரியும் ஓடிப்போய் ஏறிக் கொண்டனர். அடுத்த திருப்பில் ஓடி மறைந்தது வண்டி.

“ஓடிட்டானுங்கோ. .......... பயலுகோ...”

கலைந்து வெகுண்டு நின்ற பயணிகளிடம் ஓட்டுனரும் நடத்துனரும் நிதானமாய் நடந்து வந்தனர். இரைஞ்சும் பாவனையில் ஓட்டுனர் சொன்னார்.

“எல்லாரும் ஹெல்ப் பண்ணணும். அவங்கவங்க தண்ணி பாட்டிலைத் தாங்க. எல்லாம் சேர்த்து ஊத்திப் பார்ப்போம்.”

அவரவர் தண்ணீர் போத்தல்கள், சிறிய கேன்கள், பள்ளிச் சிறுவர்கள் உபயோகிக்கும் விதவிதமான வாட்டர் பாட்டில்கள், பன்னாட்டு நிறுவனங்களின் சுத்திகரிக்கப்பட்ட இந்தியத் தண்ணீர். ஒரு லிட்டர் பாலின் விலைக்கு விற்கப்படும் தண்ணீர்.

பேருந்து தாகித்து நின்ற அரக்கன் போல, ‘மளக் மளக்’ என தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தது. இரண்டு வாளித் தண்ணீராவது குடித்திருக்கும்.

ஓட்டுனர் மறுபடியும் இருக்கையில் ஏறி அமர்ந்து, கரங்கூப்பித் தொழுது, இயந்திரத்தை முடுக்கினார். இயந்திரம் உயிர் பெற்று உயர்ந்தது.

அவசரமாய் எல்லோரும் பழைய இருக்கைகளில் தப்பாமல், தவறாமல் பொருத்திக் கொண்டனர். நின்றவர் அனைவரும் நின்றுகொண்டனர்.

மழையற்று காய்ந்தும் வறண்டும் மெலிந்து கிடந்த காடு தனக்குள் மெதுவாய் கைத்துச் சிரித்தது.

-விகடன் தீபாவளி மலர், 2003

---

* போக்கிரித்தனம்

# 4

## கொங்குதேர் வாழ்க்கை

**லை**ன் வீடுகள் என்று சொல்வார்கள் இங்கு. ஒருவேளை சென்னையின் ஸ்டோர் வீடுகள் இப்படித்தான் இருக்குமோ தெரியவில்லை. முதலில் நீங்கள் நாற்பது அடி அகலமும் அறுபதடி நீளமும் கொண்ட காலிப் புரை இடம் ஒன்றை நினைவில் கொண்டுவரலாம். அதாவது, ஒரு கிரவுண்ட் அல்லது ஐந்தேகால் சென்ட். தெருவில் இருந்து மனையின் அகலப் பக்கத்தின் நடுவில் முன் வாசல். தொடர்ந்து ஐந்து அடி அகலத்தில் பொதுவான நடைபாதை. அதுவே புழங்குமிடம் மொத்த லைனுக்கும். நடக்க, தண்ணீர் கோர, சைக்கிள் அல்லது டி.வி.எஸ். 50 நிறுத்த, ஓடை தள்ளும் கம்பு சாத்த, சீமாறு வைக்க... நடைபாதையின் இருபுறமும் லைன் வீடுகள். பக்கத்துக்கு ஐந்து அல்லது ஆறு. வீட்டுக்காரனின் மனோ தர்மத்துக்கும் மன விசாலத்துக்கும் தகுந்த படி. நடைபாதையில் இருந்து ஒரேயொரு படி ஏறினால், நீங்கள் ஒரு லைன் வீட்டுக்குள் ஏறிவிடலாம்.

எடுத்துக்காட்டாக, பக்கத்துக்கு ஐந்து என மொத்தம் லைனுக்குள் பத்து வீடுகள் என வைத்துக்கொண்டால், முன் வாசல் கடந்து நுழைந்தவுடன், நல்ல தண்ணீர்த் தொட்டி ஒன்றும் உப்புத் தண்ணீர் தொட்டி ஒன்றும் சம தளத்துக்குக் கீழே இருக்கும். அதை சம்ப் என்றும்

சொல்வார்கள். தெற்குப் பார்த்த வாசல் என்று கொண்டால், நுழைந்தவுடன் இடது கைப் பக்கம் தண்ணீர்த் தொட்டி என்றால், தொடர்ந்து பொதுச் சுவர் வைத்து ஐந்து வீடுகள். நடைபாதையைப் பார்த்து ஒரு கதவும் சன்னலும். வேறு சன்னல்கள் கிடையாது. வலது கைப் பக்கம் கோடியில் இரண்டு கக்கூஸ், இரண்டு குளிமுறி.* மொத்த லைனுக்கும் மோட்டுக் கூரை போலக் கிடையாது. அடுத்த மனையில் வாரி வெள்ளம் விழக் கூடாது, சன்னல் திறக்கக் கூடாது என்பதால், நடை பாதையை நோக்கிச் சாய்ந்த கூரைகள். வானத்தை நோக்கியபடி மூடிய நாற்பதுக்கு அறுபது கதவு பாதிக்குப் பாதியாக உள்நோக்கித் திறந்தது போல். கிட்டத்தட்ட பொருளாகிறதா? இங்கொரு வரைபடம் போட்டுக் காட்ட எனக்கு ஆசைதான். பொம்மை போடுவதைவிட அது உகந்ததுதான். எனினும் சாத்தியமில்லை என்பார்கள். பொம்மைக்கு மாற்றுச் சொல்ல இயலுமா?

லைன் வீடு எனில் முதலில் பத்துக்குப் பத்தில் ஓர் முறி. பத்துக்குப் பத்து எனும்போது இடைச் சுவர்களின் கனம் முக்காலடி வீதம் நீள வாக்கிலும் அகலவாக்கிலும் கழித்துக்கொள்ள வேண்டும். அதுவே வரவேற்பறை, ஹால், டைனிங், படுக்கை, பூஜை, விருந்தினர், ஓய்வு அறைகள். எப்பெயரிலும் அழைக்கலாம். எந்தப் பெயரிட்டு அழைத்தாலும், இறைவன் ஏகன்தானே!

அடுத்தது பத்துக்கு ஏழில். வீட்டின் ஒரு மூலையில் சமையலறையும் அதில் இன்னொரு மூலையில் மோரி**, அல்லது அங்கணம்! ஙப்போல் வளை. அதில் பாத்திரங்களைப் போட்டு கழுவலாம். சுவரில் தொங்கிய கண்ணாடி பார்த்து முகம் வழிக்கலாம். பல் தேய்த்து, வாய் கொப்பளித்து முகம் கழுவலாம். சாப்பிட்டுக் கை கழுவலாம். மீன் முள் தொண்டையில் நின்றால், காறிக்காறித் துப்பலாம். இரவு நேரங்களில் ஒன்றுக்குப் போகலாம். உட்கார்ந்து துணி அலசலாம்.

சமையல் மேடைக்கும் அங்கணத்துக்கும் நடுவில் ஒரு சிமென்ட் தொட்டி, மூடியுடன். அல்லது செல்வாக்குடைய குடித்தனக்காரர் எனில் டிரம். பக்கத்தில் குடிதண்ணீர் நிறைந்த பித்தளை அல்லது செம்பு அல்லது கறுக்காத இரும்பு அண்டாக்கள். பிளாஸ்டிக் குடங்கள், பிளாஸ்டிக் பக்கெட், அலுமினிய வாளி, கக்கூஸுக்குத் தண்ணீர் கொண்டு போகும் சின்ன வாளி. வெந்நீர் போட அலுமினியக் குண்டான். அடுப்புக்குப் பக்கவாட்டில் சற்று உயரமாக ஒரு ஸ்டாண்ட். அதில் தட்டுகள், கரண்டிகள், டம்ளர்கள், கிண்ணங்கள், சின்ன டப்பாக்கள், பாட்டில்கள். சுவரோடு சேர்ந்து ஒரு ஷெல்ஃப். அதில் மல்லி, மிளகாய், மஞ்சள் பொடி, சீரகம், கடுகு, உப்பு, குரு மிளகு,

உளுந்தம் பருப்பு, துவரம் பருப்பு, அரிசி, சீனி, தேத்தூள், கோதுமை மாவு...

அடுப்பு மேடைக்குக் கீழே வெங்காயம், உருளைக் கிழங்கு, பூண்டு கிடக்கும் கூடை, காய்கறிக் கூடை, அரிவாள்மணை, திருவலைக்குத்தி,* முறம் எனும் சுளவு. பிரம்புக் கூடை, குக்கர், மிக்ஸி, சமையல் பாத்திரங்கள், இட்லிக் குட்டுவம், உட்காரும் மணை.

முன்னறையில் ஒற்றைக் கட்டில், சிறிய மேசை, அதன் மேல் டி.வி. அல்லது டேப் அல்லது டிரான்சிஸ்டர். கட்டிலின் கீழே சுருட்டிய படுக்கை, இடுப்பளவு அல்லது முக்கால் சைஸ் பீரோ...

கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் எனும் எண்ணத்துக்கு உள்ளே இருந்தால் மட்டுமே வாடகைக்குக் கிடைக்கும். இரண்டு குழந்தைகளுக்கு மேலே இருந்தால் வீடு கொடுப்பதில்லை என்பதில் அரசாங்கத்தைவிடக் கெடுபிடியாக இருந்தனர் வீட்டுக்காரர்கள். வாடகைக்கு வரும் போது குடி வருவோரின் மொத்த எண்ணிக்கை நாலுக்குள்தான் என்றாலும், உத்தேசமாக இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் இறந்துபோகலாம் என்று எண்ணத்தக்க வயதான பெற்றோர் இருந்தாலும் லைன் வீடுகள் வாடகைக்குத் தரப்பட மாட்டா.

இதற்குள் எப்படி ஐயா நான்கு பேர் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் வாழ முடியும் என்ற வினா கிளைத்துப் பெருகுகிற வாசக அன்பர்கள் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். மும்பை தாராவியில், கோவன்டியில், சுன்னா பட்டியில், மான்கூர்டில், கோலிவாடாவில் இந்த லைன் வீட்டை மூன்றாகப் பிரித்து வீட்டுக்கு எட்டுப் பேர் ஆணும் பெண்ணுமாய், குழந்தையும் முதியவருமாய், தாயும் பிள்ளையுமாய் பிழைத்து வாழ்வார்கள். மனசிருந்தால் புளியிலையில்கூட மூன்று பேர் புரண்டு படுக்கலாம்.

பெரிய பூட்ஸ் ஒன்றினுள் குடித்தனம் நடத்திய கதை ஒன்று நம்மிடம் ஏற்கெனவே உண்டு. உடம்பாடு இலாதார் வாழ்க்கைதான் குடங்கருள் பாம்பொடு உடன் உறைந்தற்று!

லைன் வீட்டுக்காரர்கள் என்னதான் முன்னூற்று அறுபத்தாறு பிரிவுகளும் உபபிரிவுகளும் துணைப் பிரிவுகளும் பிற்சேர்க்கைகளும் கொண்ட வாடகைக் குடியுரிமைச் சட்டங்கள் செய்தாலும், உச்சநீதி மன்றத்தின் துணைகொண்டு தம்பதியர் புணர்ந்தனர், கர்ப்பமுற்றாள், குழந்தை ஈன்றாள், பிறந்த நாள் கொண்டாடினர், நோயுற்றனர், நோய் நீங்கினர், மரணமுற்றனர், விருந்தினர் வந்தனர், பெண் குழந்தைகள்

சமைந்தன, லைனுக்குள் சண்டை இட்டனர், சமாதானம் ஆயினர், தக்காளியும் தோசை மாவும் கடன் கொடுத்தனர், கிண்ணத்தில் மீன் குழம்பு விநியோகம் ஆனது, பிள்ளைத்தாய்ச்சிக்கு கஷாயம் செய்து கிண்ணத்தின் மேல் கிண்ணம் வைத்து மூடிக் கொடுத்தனர். எல்லாம் இன்ப மயம்.

நான் குடியிருக்கும் வீட்டின் எதிர்முகத்திலும் பக்கவாடுகளிலும் ஏழெட்டு லைன்கள் இருந்தன. நான் இருப்பதும் ஏகதேச உருவகமாக லைன் வீடுதான். எனினும் முதல் மாடியில் தனிப் பங்கு. எழுத, படிக்க, பாட்டுக் கேட்க, உறங்க, உரையாட மனமில்லாதபோது வெளி வராந்தாவில் போய் நிற்பேன். சட்டைகூடப் போடாமல், மன்னர்கள் உப்பரிகையில் நின்று குடிபடைகளைப் பார்வை இடும் தோரணையில். எழுத்தாளன் என்பதால் அக்கம்பக்கத்தில் யாரோடும் உரையாடும் வழக்கம் இல்லை. இந்த பதினான்கு ஆண்டு லைன் வாசத்தில் சிலர் மட்டும் அபூர்வமாக எனது மோனோலிசா புன்னகை பெற்ற பாக்கியவான்கள்.

முதல் மாடி வராந்தாவில் நின்று வேடிக்கை பார்ப்பவனை எந்தக் கதாபாத்திரமும் பொருட்படுத்துவதுமில்லை. வேடிக்கை பார்ப்பேன் என்று நான் சொல்வதை எனது மனைசாட்சி வாய் பார்ப்பேன் என்று சொல்வாள். வேடிக்கை பார்ப்பதற்கு குறிப்பாக எந்த சுவாரசியமும் இன்றி பொழுது போகாமல் நின்று பொதுவாகப் பார்ப்பது என்று அகராதிகள் கூறும். வாய் பார்ப்பது என்பது ‘வாய் நோக்கி’ எனும் மலையாள வேர்ச் சொல்லில் இருந்து கிளைப்பது. இச்சையுடன் அலவலாதித்தனத்துடன், குறிப்பாகப் பெண்களை மட்டும் பார்ப்பது என்று பொருள். இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்.

ஏழைக்கேத்த எள்ளுருண்டையாக பக்கத்தில் கல்யாண மண்டபம் ஒன்றுண்டு. நான் குடியிருக்கும் வீட்டின் மொட்டை மாடியில் நின்றால் கெட்டிமேளம் சத்தம் கேட்கும். காற்று தென்கிழக்கிலிருந்து வீசினால் ஆக்குப்புரையிலிருந்து வரும் குருமா வாசனையும், சமயங்களில் மலிந்த நாட்களில் மல்லிகைப் பூ வாசனையும்.

நேரங்கெட்ட நேரங்களில் பிண ஊர்வலங்கள் போகும். கிருஷ்ணாபுரம் மேட்டுச் சுடுகாடும் இடுகாடும், கால் நடக்கும் தூரம்தான். இரவு பதினோரு மணி முதல் காலை மூன்று மணி வரை இங்கெல்லாம் காடு அடைப்பு... அடைப்பு என்பது கேட் சாத்துவதல்ல. எங்களூரில் சூரிய அஸ்தமனம் ஆகிவிட்டால், மறுநாள் சூரியோதயம் வரை பிணம் எடுப்பதில்லை.

பிணந் தூக்கிப் போம்போது உதிரிப் பூக்களும், பொரியும், சில்லறைக் காசுகளும் வீசிக்கொண்டு போவார்கள். சனிக் கிழமைகள் எனில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு உயிருள்ள ‘சிக்கன் அறுபத்தைந்து’ ஒன்று போகும்... என்ன நடக்கிறதென்று தெரியாமல், பாடையில் கட்டப்பட்டு தெய்வத்தாலும் ஆகாது, முயற்சியும் மெய்வருத்தக் கூலி தராது எனும் அறிவில்லாமல்.

அவ்விதம் பிணம் போனதொரு நாளில், ஆரம்பப் பள்ளியில் இருந்து திரும்பிய என் மகன் கை நிறையச் சில்லறைகளோடு வந்தான். ‘ரோட்ல நெறய சில்லறை களைஞ்சு கெடச்சு’ என்று உற்சாகமாகக் கூவியபடி.

தெருமுனையில் இருக்கும் பிள்ளையார் கோயிலில் இருந்து கல்யாண மண்டபத்துக்கு அதிகாலைகளிலும் முன் மாலை களிலும் மாப்பிள்ளை அழைத்துப் போகும்; மண்டபத்தில் பூப்புப் புனித நீராட்டு விழாக்கள் எனில், சீர் எடுத்துப்போவார்கள். சுவிசேஷ எழுப்புதல் கூட்டங்கள் நடக்கும். சில சமயம் தொடர்ந்து ஐந்தாறு நாட்கள். ஆங்கிலத்திலும், மொழிபெயர்த்த தமிழிலும் இறைவனைக் கர்ஜித்து எழுப்பிக் கொண்டிருப்பார்கள். அல்லது, பெருங்குரலில் இந்து சமய சொற்பொழிவாற்றிக்கொண்டு இருப்பார்கள். அவனை எழுப்பீரோ? அவன்தான் ஊமையோ, அன்றிச் செவிடோ? அனந்தலோ? ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டானோ?

அரவான் பண்டிகைக் காலங்களில் அம்மனுக்கு நோன்பு சாட்டப்பட்டிருக்கும்போது குழுவாய் நின்றும் சுவடு வைத்தும், பறை அடிக்கும்போது லயமுண்ட கால்கள் தன்னுணர்வின்றித் தாளமிட, கை கட்டி நின்று பார்க்கலாம்.

நம் வாழ்வில் காணா சமத்துவம் உலாவும் இடங்கள் லைன் வீடுகள். லைனில் மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடர்கள், அவர்களுக்குள் கிறித்துவர், இஸ்லாமியர், சர்வசாதி இந்துக்கள் இருப்பார்கள். வீட்டு உரிமையாளர்கள் கொங்கு வேளாளக் கவுண்டர்கள், நாயக்கர்கள், தேவர்கள், தென்னாட்டு நாடார்கள். ஆனாலும், மத இனப் பாகுபாடுகள் அறியப்படுவதில்லை. வாடகைகூட அவரவர் தோதுப் போல, முதல் தேதி முதல் இருபத்தொன்பதாம் தேதி வரை தரலாம். இரண்டு மாதங்களுக்கு மேல் பாக்கி என்றால்தான் பனிப்போர், பயங்கரவாதம் - கரன்ட், தண்ணீர் நிறுத்தம், எரியும் அடுப்பில் தண்ணீர் ஊற்றுதல், உறங்கி விழிக்கு முன் ஆட்களை உள்ளே வைத்து வெளிக் கதவைப் பூட்டுதல், கேளவொண்ணா சொற்பிரயோகம், பிற குடியினர் பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொள்ள நிர்ப்பந்திப்பது என எத்தனை

ஆயுதங்கள் இல்லை? வீட்டு உரிமையாளரும் லைன் வீடுகளில் ஒன்றில் குடியிருக்க நேர்வதுண்டு. சில சமயம் அது தவப் பயன். பல சமயங்களில் அது இடர்.

நிரந்தரமான வீடு தேடலில் இருப்பார்கள் போலும் நகரத்து மக்கள். முன் இரவுகளில் ஏகதேசமாய் ஒரு கைவண்டியில் அல்லது காங்கேயம் காளை கட்டிய ஒற்றைக் காளை வண்டியில் வந்திறங்கும் சமான்கள். ஏகதேசமாய் ஒரு கைவண்டியில் ஏற்றியும் போவார்கள், வீட்டுச் சாமான்களை. பிறிதொரு நாள் பக்கத்துத் தெருவில் பகல் பத்து மணிக்குப் பல் தேய்த்தவாறு, பேஸ்ட் சாறு வழிய, “நல்லாருக்கீங்களா?” என்பார்கள். மாற்றி மாற்றி ஐந்தாறு தெருக்களுக்குள் இருபத்தைந்து ஆண்டுகளைச் செலுத்தியவர்களும் உண்டு.

எல்லாம் அக்கரைக்கு இக்கரை பச்சை. அலகிலா விளையாட்டுடைய வாழ்க்கை.

மழலை பேசிக்கொண்டு ஐஸ் கட்டி கேட்க வரும் ரோஸி, சமைந்த குமரியாகி விட்டாள். உறைக்குத் தயிர் கேட்டு வந்த சிறுமி சஃபீனாவின் மகளுக்கு இன்று ஒன்றரை வயதாகிறது. எதிர் லைனில் இருந்து கை காட்டுகிறது. நான் குடிவந்த பிறகு பக்கத்து லைனில் நான்கு வயசாளிகளின் மரணமும் ஒரு அகால மரணமும் நடந்து விட்டன. பிரைமரியில் வாசித்துக் கொண்டிருந்தவள் பெங்களூருக்கு வேலைக்குப் போய்விட்டாள். அடுத்தவன் பெண்டாட்டியைக் கூட்டிக்கொண்டு ஓடிப் போதல், பருவத்தின் உடன்போக்கு பற்றிய தகவல்கள் தவிர்க்கப்படுகின்றன.

சில சமயம், குடி வந்து பன்னாட்கள் சென்ற பிறகுதான் புதிதாகக் குடிவந்தவர் போலும் என்று சில முகங்கள் அறிவிக்கும். பால்காரர், தச்சு வேலை செய்பவர், எலெக்ட்ரீஷியன், போட்டோ ஃபிரேம் செய்பவர், பாய் விற்பவர், கைவண்டியில் செருப்பு வைத்து விற்பவர், வசந்தா மில் பிரிவில் பீஃப் பிரியாணி வண்டி நிறுத்துபவர், தேங்காய்ப் பால், பருத்திப் பால், சுக்குக் காபி, பழ வண்டி, வாழைப்பூ - வாழைத் தண்டு, மரவள்ளி வியாபாரிகள், நகரத்துக் கனவான்களுக்குக் காரோட்டுபவர், பாத்திரம் தேய்க்கும், துணி துவைக்கும், சமைக்கும், குழந்தைகளைப் பராமரிக்கும், நோயாளிகளுக்குப் பணிவிடை செய்யும் ஆயாக்கள்...

ஒரு நாள் முன்னிரவு கடந்து, சாப்பாட்டுக் கடை ஒதுங்கி, அன்றைய சீரியல்களின் நாயக - நாயகிகள் தம் கடைசிச் சொட்டு கண்ணீர்த் துளிகளை எம் வீட்டு முன்னறையில் சிந்திச் சீரழித்துவிட்டு அரிதாரம் கலைத்தபோது, கம்பீரமாக எழுந்தது மிகச் சமீபத்தில் இருந்து அந்த

நாதசுர ஓசை. ஏதும் மாப்பிள்ளை அழைப்பு சமாசாரமாக இருக்கும் என்றெண்ணிப் பொருட்படுத்தத் தலைப்படவில்லை.

சற்று இடைவெளி விட்டு மறுபடியும் நாதசுர ஓசை. தவில் தட்டும் ஓசை இல்லை. வேறு தோல் வாத்தியங்களோ, ஜால்ராவோ இல்லை. ஒற்றை நாதசுரம் மட்டும் எடுப்பான முழக்கமாக...

சக்கனி ராஜ மார்கமு துண்டக
ஸந்துல தூரநேவ ஓ மனஸா

ஓ மனமே! ராமனின் பக்தி எனும் ராஜவீதியை விட்டு வெறுக்கத்தக்க சந்துகளில் நுழைவானேன்.

தியாகய்யரின் கரகரப்ரியா ராக கீர்த்தனை. துல்லியமான ஸ்வர சஞ்சாரங்களுடன். இரண்டு வரி மட்டும். சற்று இடைவெளி... மீண்டும் சக்கனி ராஜமார்கமு. சாதாரணமாக பெண் அல்லது மாப்பிள்ளை அழைப்புக்கு எமது தெருவில் வாசித்துப் போவோர் நாதசுரத்தை வைத்துக்கொண்டு நூதனமாகக் காதைச் சொறிந்துவிட்டுப் போவார்கள். தவிலின் இரண்டு தட்டுக்கள் கேட்கும். சாயம் போய்க் கிழிந்து நைந்த துணி போல் ஏதோ ஒரு கீர்த்தனையின் முதலடி தெருவில் அநாதையாகக் கிடக்கும். பிணத்துக்கு இறைக்கப்பட்ட உதிரிப் பூக்கள் போலக் கேட்பாரற்று.

இது அதுவல்ல. சங்கதி சுத்தமானதாக...

ஆனால், தொடர்ந்து மூச்சுப்பிடிக்க சிரமப்படுவதைப் போலத் தெரிந்தது. எழுந்து போய்த் தெருவை எட்டிப் பார்த்தேன். எதிர் வரிசையில் வாசற்படித் திண்டில் உட்கார்ந்து கொண்டு வயசாளி ஒருவர், காலையில் உதிக்க இருக்கும் சூரியனின் திசை நோக்கி நாதசுரக் குழலை உயர்த்தி, முறையிடுவதைப் போல வாசித்துக் கொண்டிருந்தார். நல்ல நிலவொளியும், தேர்தல் எதிர்பார்ப்பால் மாநகராட்சி மஞ்சள் விளக்கொளியும்.

கரண்டைக்கு மேல் உயர்ந்திருந்த வேட்டி. அரைக்கை பனியன் போல, வயிற்றுப் பக்கம் பை வைத்துத் தைக்கப்பட்ட காடாத் துணி சட்டை. கழுத்தில் சிறு உருத்திராக்கங்கள் கோத்த மாலை. ஸ்படிக மணிமாலை, பக்கத்தில் வெள்ளி போல மினுங்கிய வெற்றிலைச் செல்லம்.

உறக்கம் பிடிக்காதவர்கள், உறக்கம் கலைந்தவர்கள், பக்கத்து கடைக்கார அண்ணாச்சிகள் (அவர்கள் இரவு பதினொன்றரைக்கு கடை அடைத்து காலை நாலரைக்குக் கடை திறப்பவர்கள்) எல்லோரும்

அவரவர் லைன் வாசல்களில் இருந்து எட்டிப் பார்த் தார்கள். பத்துப் பதினைந்து பேர். மறுபடியும் மூச்சு வாங்கிக்கொண்டு ‘சக்கனி ராஜ மார்கமு’ முதல் இரண்டு வரிகள். சற்று இளைப்பாறல், மீண்டும் நாதசுரம்...

எதிர்த்த லைனில் சமீபத்தில் கணவனும் மனைவியுமாகக் குடிவந்த வயசாளிகள். பக்கத்துத் தெருவில் வேறேதும் லைனில் மகனோ மகளோ இருப்பார்கள் போலும். கூட வைத்துக் கொள்ள வசதிப்படாத காரணங்கள் இருக்கும். உறுப்பினர் எண்ணிக்கை நான்கைக் கடந்த காரணமாகவும் இருக்கலாம். முதுமையின் சுமை கூனலாகவும் வாதமாகவும் செவியின் சேதமாகவும் கனத்துக்கொண்டு இருந்தது. பல சமயம் மகள்தான் வந்து, வீடு தூத்து வாரி, துவைத்துக் கொடுத்து, சமைத்தும் வைத்துவிட்டுப் போவாள். சில சமயம் தெரு முனையில் இருந்த கொங்கு மெஸ்ஸில் நான்கு இட்லிகள் தின்றுவிட்டு வீட்டுக்காரிக்கும் நான்கு இட்லிகள் பொட்டலம் வாங்கிப் போவார். சில சமயம் கையில் இரண்டு பொட்டலம் லெமன் ரைஸ் இருக்கும். எலுமிச்சைச் சோறு என்று சொன்னால், நாக்கு அழுகிப்போகும் நமக்கு.

நான் அலுவலகம் போய்க்கொண்டிருந்த நாட்களில், லைன் வீட்டு வெளி முகப்பில், இரு பக்கத் திண்டுகளிலும் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள். முன்னிரவில் திரும்பி வரும்போதும் நான் பார்த்துக்கொண்டு வேகமாகப் போய் விடுவேன்.

முதுமை எப்போதுமே அச்சுறுத்துவது. ஆசைப்பட்டு அவனவன் கட்டிய மூட்டை. அவனவன்தான் சுமந்து திரிய வேண்டும்.

நான் சிந்துபாத் எனில், முதுமை முதுகில் ஏறி உட்கார்ந்து அடம் பிடிக்கும் கிழவன். இறங்கவே மாட்டான். சுமந்துதான் நடக்க வேண்டும்.

வீட்டுக்குள் கால் சறுக்கி விழுந்த கிழவி மருத்துவமனை போய்த் திரும்பி இரண்டு நாட்களே உயிர் வாழ்ந்தாள். பாலும் முடிந்து, நேற்று கருப்பும் முடிந்திருந்தது. பிரிவெனும் கொடுங் காற்று அலைக்கழித்துக்கொண்டு இருந்தது பெரியவரை. தனிமை புகையேற்றப்பட்டு அரவப் புடைபோல மூச்சு முட்டச் செய்திருக்கலாம்.

ஆனகாலத்தில் மங்கல வீடுகளிலும் பட்டீஸ்வரர், புற்றிடங்கொண்ட ஈசன், ஈச்சனாரி விநாயகன், மருதமலை முருகன், அனுபாவி சுப்ரமணியன், குருந்தமலைக் குமரன், உலகளந்த பெருமான், காரமடை ரங்கநாதன், வெள்ளியங்கிரி அடிவாரத்துப் பூண்டிப் பிரான், திருமுருகன் பூண்டி, செஞ்சேரிமலை சந்நிதிகளிலும் ஊதி ஊதி ஓய்ந்து

போயிருக்கலாம்.

அடுத்த தெருவிலிருந்து அவசரமாக ஓடிவந்த மகள் நாதசுரத்தைப் பிடுங்கிக்கொண்டு போய் உள்ளே வைத்தாள். பார்த்துக்கொண்டு நின்றவர்களிடம் சிரிப்பாணி பெருவெள்ளமாய் பொங்கியது. பெரியவர் வீட்டுக்குள் லம்பி லம்பி நடந்து போய் மீண்டும் நாத சுரத்தை எடுத்து வந்தார். மிகுந்த லயத்துடன், 'சக்கனி ராஜ மார்கமு...' இரண்டு வரிகள்.

"காலம்பற வாசிக்கலாம் வா... எல்லாரும் ஒறங்காண்டாமா?" மகளுடன் ஒரு இழுபறி. நாதசுரத்தைத் தராதபோது சீவாளியைப் பிடுங்கி வைத்துக்கொண்டாள்.

பெரியவர் கரகரத்த குரலில் ஏதோ இரைந்தார், அதட்டினார், சத்தம் போட்டார். "ஒருக்க வாசிச்சுட்டுத் தந்திரணும்" என்று சொல்லி, சீவாளியை எறியாத குறையாக வீசினாள்.

பெரியவர் சீவாளியைப் பொருத்தி, "பீ...பீ..." என்று ஓசையும் சுரமும் பார்த்து, மறுபடியும் இரண்டு வரிகள், "சக்கனி ராஜ மார்கமு..."

ஒற்றை நாயனத்தின் குரல் லயம் பிசகாமல் ஓங்கி ஒலிப்பதும், மூச்சு வாங்குவதும், மீண்டும் வாசிப்பதும்...

அக்கம்பக்கத்தில் விழித்து வேடிக்கை பார்த்தவர்கள் தமக்குள் சிரிப்பாகவும் இளக்காரமாகவும் குதூகலமாகவும் உரையாடிக்கொண்டு இருந்தார்கள்.

எனக்கு அவமானமாக இருந்தது. அழுகையழுகையாக வந்தது.

'தெலிய லேரு ராம பக்தி மார்கமுனு' எனும் தேநுக ராக தியாகய்யர் கீர்த்தனை சம்பந்தமில்லாமல் ஞாபகம் வந்தது.

'காலையிலெழுந்து நீராடி, விபூதியணிந்து, ஜபம் செய்வது போல் விரல்களை எண்ணி, நல்லவர்களைப் போல் நடித்து, பணம் சேர்ப்பதில் ஆசை கொண்டு, இங்குமங்கும் திரிந்து, கனவு காண்கிறார்களே தவிர, இந்த ஜனங்கள்...தியாகராஜனால் வணங்கப் பட்ட ஸ்ரீராமனே, உன்னிடத்தில் பக்தி என்ற சன்மார்க்கத்தைத் தெரிந்து கொள்ளவில்லையே!'

பிடுங்காத குறையாக நாதசுரம் பறிபோயிற்று. வாசற்படி திண்டில் லயத்தை, தாளத்தைத் தொலைத்தவர் போல், இசை ஞான ரூபத்தைக் களைந்தவர் போல், சுரத்தை பணயம் வைத்துத் திருப்ப முடியாதவர் போல, நெடு நேரம் தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டு இருந்தார். இனிமேல் பழமோ, சிகரெட்டோ, பாக்குத்தூளோ விற்காது என

சுவாரசியம் குன்றிப்போன அண்ணாச்சிகள் கடை அடைக்க முற்பட்டனர். லைன் வீட்டுக்காரர்கள் படுக்கப் போனார்கள். அவர்களுக்கு இருக்கிறது காலையில் பாடுகள்.

நிலவுக்குத் துணையாக சற்று நேரம் மாடி வராந்தாவில் நின்றுகொண்டு இருந்தேன்.

பிறகென்ன? இன்று வரை மறுபடியும் அந்தக் கிழவரின் நாதசுர ஓசை கேட்கவே இல்லை.

கடைக்கே வைத்துவிட்டார்களோ! காணாமற் போக்கிவிட்டார்களோ? விறகாகத்தான் போயிற்றோ?

பெரியவர் இன்னும் பகற்பொழுதுகளில் ஒரு காலைக் கிந்திக் கிந்தி நடந்துகொண்டு இருக்கிறார். நாதசுரத்தைப் போல அவருக்கும் க்ஷீண தசைதான் போலிருக்கிறது.

-ஆனந்த விகடன் **16.4.2006**

---

* குளியலறை

** சமையலறை மூலையில் தண்ணீர் புழங்கும் சிறு பள்ளம்

* தேங்காளிணித் துருவி

# 5

## பரிசில் வாழ்க்கை

**ஊ**ருக்கு மேல்கையில் நீர் வளம் ததும்பிய தலங்களில் இருந்தன சாத்தாங்கோயில்கள். ஆற்றங்கரை, குளத்தங்கரை போக சில சமயம் தோப்புக்கள், திரடுகள், விளைகள் நடுவிலும், அபூர்வமாக வயற்காடுகளின் திட்டுக்களிலும் சாத்தா நிலைகொண்டிருப்பார். சாத்தாங்கோயில் என்பதுதான் வழக்கு. மற்றபடி கிறிஸ்துவின், என்று நீ அன்று நான் உன் எதிரி அல்லவோ எனும் நிரந்தரமான எதிரியான சாத்தானின் கோயில் எனப் பொருள் கொளல் ஆகா!

சாஸ்தா என்பதன் தமிழாக்கம் சாத்தா. அல்லது மறுதலை நேராம். சாஸ்தா என்ன மொழி என்றெனக்குத் தெரியாது. வேட்டி வேஷ்டியானது போன்றும், துட்டி துஷ்டியானது போன்றும், கோட்டி கோஷ்டியானது போன்றும் இங்கிருந்து சென்று அங்கிருந்து திரும்பியதாகவும் இருக்கலாம்! அப்பம் தின்னவோ அலால் குழி எண்ணவோ!

தமிழகத்தின் தென் மாவட்டமான கன்னியாகுமரியிலும் மற்றும் கேரளத்தின் திருவிதாங்கூர் பகுதிகளிலும் தர்மசாஸ்தா ஐயப்பன் கோயில்களும் சாத்தாங்கோயில்களும் வழிபாட்டுத் தலங்கள். சபரியின் மலைக்குக் காடு கடக்கும் வழியிலுள்ள எரிமேலி, பந்தணம்திட்டை

பக்கத்தில் பேராறு ஒன்றின் மேட்டிலுள்ள பந்தளம், குளத்துப்புழை, செங்கோட்டை தாண்டி சிற்றாறுகளின் கரையிலுள்ள ஆரியங்காவு, அச்சன்கோயில் ஆகியவை ஐயப்ப சாஸ்தா கோயில்களில் பிரபலமானவை.

ஈண்டு சொல்ல வருவது நூறு வீடுகளுக்குள் இருக்கும் சிற்றூர்களில் அடங்கி ஒதுங்கி வாழும் சின்ன சாத்தாங்கோயில்கள் பற்றி. அவருள்ளும் சற்றுப் பெரிய ஊர்களில் பதி கொண்ட எங்கோடி கண்டன், எருக்கலை உடையார், மணிகண்டன், சேரவாதில், நீர் நிறை காவு கொண்டன், தென்கரை மகராசன் என்பன பெயர் கொண்ட சாத்தாக்கள்.

ஊரை விட்டு ஒதுங்கி, எக்கேடும் கெட்டுப் போங்கள் எனக்கென்ன எனும் பாவத்தில், காட்டின் விளிம்பில் கால் கொண்டிருக்கும் யோக முத்திரையுடன் ஆன சின்ன கற்சிலைகள் அல்லது வடிவ ஒழுங்கற்ற சிவலிங்கம் போன்ற அமைப்பில் சமைந்த உருளைக் கற்கள். ஆயிரக்கணக்கில் சமணர்களைக் கழுவேற்றித் தழைத்த சைவத்துக்கு அஞ்சி ஒடுங்கி, அடைக்கலம் தேடிச் சிற்றூர்களில் ஒதுங்கிய சமணரின் வழிபாட்டுத் தலங்கள் அவை என்பாரும், சமண முனிகளின் சமாதிகள் மேல் எழுப்பிய நடு கற்களின் வடிவம் என்பாரும் உளர். உளர் எனில் உளர், இலர் எனில் இலர். எவ்வாறாயினும் சமணத்தைக் கழுவிலேற்றியதன் பிராயச்சித்தமாக இன்று சைவத்தை சைவமே கழுவேற்றிக்கொண்டிருக்கிறது. சிவம் எனில் காத்தல், சிவம் எனில் அழித்தல். தன்னை ஆக்கல், தன்னை அளித்தல், தன்னைக் காத்தல், தன்னையே அழித்தல்.

வலுவும் வழிபாட்டுத் தீவிரமும் இழந்துபோன சாத்தாக்களுக்கு பூணூல் அணிந்த வேளார் அல்லது குலாலர் அல்லது குயவர் அல்லது கொசவர் என்பவர் பூசை செய்தனர். சில இடங்களில் நம்பியார் பூசை செய்தனர். நம்பியார் என்றதும் சினிமா வில்லன் நடிகர் என்றுதான் நமது புத்தி போகும். அது எம் பிழையன்று. நம்பியார் எனப்படும் பட்டர் ஆதி சைவர்களின் மருவு என்பாரும், பார்ப்பனர்களின் உட்பிரிவு என்பாரும் உளர். நம்பியார்களை பார்ப்பனர்கள் தங்கள் வகுப்புக்களோடு சேர்த்துக்கொள்வதாகவும் தெரியவில்லை. வடமர், வாத்திமார், பிரகச்சரணம், சோழியர்களில் சேர்த்தி இல்லை. கொள்வினை கொடுப்பினை இருக்கட்டும், தொட்டுச் சாப்பிடுவார்களா என்றுகூடத் தெரியாது. சவண்டிகளுக்கு மேலா, கீழா என்றும் தெரியாது. ஆனால், அவர்கள் இறை வழிபாட்டுச் சேவையில் இருந்தனர்.

அங்கு அக்ரகாரத்தை கிராமம் என்பார்கள், பிராமணச் சேரி என்றும் சொல்வதுண்டு. அந்தக் கிராமத்தில் இரண்டு நம்பியார் வீடுகள் இருந்தன. சிவன் கோயில், பிள்ளையார் கோயில், சாத்தாங்கோயில், பூவத்தான் கோயில் பூசைகளில் பொழுது புலர்ந்தும் சாய்ந்தும் கடந்து போயிற்று. பூவத்தான் என்பவரும் பூதத்தான் எனும் சாத்தாதான் என்பார்கள். பூவத்தான் உருவங்கள் கவிழ்த்துவைத்த மைசூர் சருவம் போன்ற கற்சிலைகள். பலி பீடங்களின் பெரிய வடிவம்.

வெள்ளாங்குடிக்கும் வைராவிக்குடிக்கும் சாம்பவர்குடிக்கும் இன்னபிற ஒற்றைப்புறம் கூட்டாளிகளுக்கும் பொதுவாக ஒரு பள்ளிக்கூடம் இருந்தது எங்களூரில். அன்றும், இன்றும் ஐந்தாம் வகுப்பு வரைதான். குடும்பக்கட்டுப்பாடும், வசதியுள்ளோர் வேன்களில் நகரத்துப் பள்ளிகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதுமாக மாணவர் எண்ணிக்கை குறைந்து குறைந்து தற்போது ஓராசிரியர் பள்ளியாக ஓய்ந்துகொண்டிருக்கிறது. ஐம்பதாண்டுகளுக்கு முன்பு அரிச்சுவடியும் எண்சுவடியும் கற்றுத் தந்த பாடசாலைக்கூடமும் ஓடிப்பிடித்து விளையாடி கல்வரித் தூணில் முன் மண்டை மோதிய வராந்தாவும். பின்பு ஊருக்கு மேற்கே இரண்டு மைல் நடந்து சென்ற நடுநிலைப் பள்ளி, ஆறு முதல் எட்டு வரை படித்தது.

எமது வகுப்பில் பக்கத்து ஊர் பிராம்மண கிராமத்தில் இருந்து மூன்று பெண் பிள்ளைகளும், வெள்ளாங்குடி, நாடாக்குடி, சாம்பவர்குடிகளில் இருந்து வரும் சிறுவர் சிறுமிகளாக நாற்பத்தெட்டுப் பேர். ஒருத்தி மட்டும் முக்கால் மைல் தூரத்தில் இருக்கும் தட்டட்டி போட்ட வீட்டில் இருந்து தினமும் வில்வண்டியில் வந்தாள். உள்ளூர்ப் பிள்ளைகள் மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போய் வருவார்கள் சுடு சோறு தின்ன. எமக்கு எப்போதும் சின்னப் பித்தளைத் தூக்குப் போணியில் பழையதும் உப்புப்பரலும் நாரத்தங்காய்த் துண்டும். ஓடியோடி வீட்டுக்குப் போனாலும் அதேதான் இருக்கும். அன்றெல்லாம் மதிய உணவு இடைவேளை ஒரு மணி நேரம். மணிக்கூர் கணக்கெல்லாம் ஒரு உத்தேசம்தான். தலைமையாசிரியரிடம் மட்டும்தான் பழைய ஃபேவர் லூபா கைக்கடிகாரம் இருந்தது.

வில்வண்டிக்காரியைச் சாப்பிடக் கூப்பிடவும், திரும்பக் கொண்டுவிடவும் வண்டி வரும். பூப்பட்டால் நோகும் பொன்னுந் திருமேனி. வகுப்பிலுள்ள கிராமத்துப் பெண் பிள்ளைகளில் சிவகாமியும் சீதையும் இரட்டை வண்டிக் காளைகள் போல. ஒன்று வலத்தை என்றால் மற்றொன்று இடத்தை. மற்றவள் பாலாம்பாள் தனியாக வந்து போவாள். ஏதும் சண்டை - பச்சம் சமாச்சாரமாக இருக்கும் என்று

நினைத்திருந்தோம். ஆனால், பயின்ற ஆறு, ஏழு, எட்டாவது வகுப்புகளில் ஒருமுறைகூட சகஜமாக அவர்கள் பேசியோ, சிரித்து விளையாடியோ பார்த்ததில்லை. பேசினாலும் அது பத்தியப் பேச்சாக இருக்கும். நட்பாக இல்லை என்பது வெளிப்படை. பகையாகவும் இல்லை. வெள்ளாடிச்சிகளிடமும் சாம்பாத்திகளிடமும் நாடாத்திகளிடமும் மறத்திகளிடமும் கம்மாளத்திகளிடமும் எப்போதாவது தமது ஒதுங்கல் ஒழித்து பருவ இயல்பின் எல்லை தொட்டும் தொடாமலும் உரையாடியவர்கள் ஏன் பாலாம்பாளிடம் பாராமுகம் என்று தோன்றும். தக்க தருணம் இன்னும் வரவில்லையோ நன்னு ஃப்ரோவ?

பாலாம்பாள் என்னிடம் பிரியம் கொண்டிருந்தாள். சிவகாமியையும், சீதையையும் முந்திக்கொண்டு வகுப்பில் வந்ததனால் இருக்கலாம். யாருக்கும் அந்த இடத்தை விட்டுத் தந்ததே இல்லை. ஒரு வகையில் பாலாம்பாள் தனது கர்வத்தை என் மூலம் நிலைநாட்டிக்கொண்டிருந்தாள் போலும். எனக்குப் பிறகு மூன்று பேரும் மற்ற இடங்களில் மாறி மாறி வந்து கொண்டிருப்பார்கள். பெரும்பாலும் பாலாம்பாள்தான் கடைசி. என்னிடம் அவள் மட்டும் ஐயங்கள் கேட்பாள். புத்தகங்கள் இரவல் வாங்குவாள். பத்து சொட்டு மை கடன் கேட்பாள். நானோ எப்போதும் எதற்கும் எல்லோரிடமும் இரந்து திரிபவன் என்பது கிளைக் கதை. மற்றபடி எனது முன் தள்ளிய சோவிப் பற்களும் சூம்பி ஒடுங்கிய நெஞ்சுக்கூடும், இளநரையும், கோரை முடியும் வாமன உருவும் வாலைப் பெண்கள் காமுறும் கிரியா ஊக்கிகள் அல்ல.

எட்டாம் வகுப்பு படிக்கும்போது, புத்தேரி பெரியம்மை வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்பிய ஒரு பள்ளி விடுமுறையில், காலை கடந்து முற்பகல் கூடி வரும் வேளையில், குளத்தங்கரை குறுக்குப் பாதை சாலையில் வந்து கூடும் இடத்தில் இருந்த பூதத்தான் கோயிலில் மணி கிலுங்கிக்கொண்டிருந்தது. சில சமயம் நெல்லுப் பொரி கிடைக்கும் எனும் யோசனையில் எட்டிப் பார்த்தேன். பாலாம்பாள் தொழுத கையுடன் நிற்க நம்பியார் கிலுக்கிக்கொண்டிருந்தார்.

கருவறை, உட் பிராகாரம், கொடிமரம், பலிபீடம், வெளிப் பிராகாரம் என்று தனித்தனியாகக் கிடையாது. மூன்று பக்கமும் கல்வரி நாட்டிய அளி போன்ற சுவர். முன் பக்கம் கம்பிக் கதவு. கல் உருவைக் கள்ளனா கொண்டு போவான்? காற்றும் மழையும் வெயிலும் கரைக்கவா முடியும்? மேற்கூரையும் கிடையாது. காற்றுக்கு ஒதுக்கமாக விளக்கு ஏற்ற என மாடக் குழி உண்டு. சிவராம நம்பியார் பூசை சாமான்களை ஒதுக்கிக்கொண்டிருக்க, நான் பாலாம்பாளிடம் பேச்சுக் கொடுத்தேன்.

அரையாண்டு பரீட்சை நெருங்கிக்கொண்டிருந்தது.

“எல்லாம் படிச்சாச்சா?”

“சமூகப் பாடம் மாத்திரம் பாக்கி”

“சிவகாமியும் சீதையும் படிச்சு முடிச்சிருப்பால்லா?”

“அவாளைப் பத்திக் கேக்காத... அவா என்னோட பேசமாட்டா.”

“அப்பிடி என்ன சண்டை?”

“சண்டையெல்லாம் ஒண்ணுமில்லே... அவா வேற ஜாதியோல்லியோ!”

எனக்குப் பள்ளிப் பருவத்தில் ஏற்பட்ட ஏகப்பட்ட வர்ம அடிகளில் அதுவும் ஒன்று.

“ஆனா நீங்கோ கிராமத்திலேதானே இரிக்கியோ?”

“ஆனா, எங்காத்துக்கு அவா வரமாட்டா... நாங்களும் போக மாட்டோம்!”

“உங்கப்பா பூணூல் போட்ருக்காரே!”

“அதெல்லாம் போட்டுப்பா... அவா எங்களைத் தொட மாட்டா, தொட்டுச் சாப்பிட மாட்டா!”

“அப்பம் நீங்க வெள்ளாங்குடித் தெருவுக்குப் போயிரலாம்லா?”

“அதெப்டிடா? நாங்க பிராமணாள் இல்லியோ?”

‘வெளங்கினாப்பிலதான்’ என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டேன்.

சாஸ்தா சைவம், அன்னதானப் பிரியன். அவருக்குப் பிடித்தமானது சர்க்கரை, பச்சரிசி, பொடித்த ஏலம், சுக்கு, திருவிய கருக்குத் தேங்காய் போட்டுவைத்த அரிசிப் பாயசம். கோளடித்தால் அரவணை. எனவே, பாலாம்பாளுக்கு மூன்று வேளையும் பாயசம்தான் என்று எண்ணியிருந்தேன்.

பூசைக்கு ஆள் கிடைப்பதும் பெரும்பாடுதான் என்று பேசிக்கொண்டார்கள். ஒன்று கடவுள் கைங்கர்யம் தீராத் தரித்திரியம் என்பது. இரண்டு கொத்த வேலைக்குக் கையாளாகப் போனால் ரூபாயில் கூலியும் மத்தியானம் கஞ்சியும் உண்டென்பது. எந்தப் பூசாரியும் மாடி வீட்டில் வசித்து, வில் வண்டியில் பயணம் போய்,

அறுத்தடித்து வைத்துக்கொண்டு சாப்பிடுவதாக எடுத்துக்காட்டுக்கள் இல்லை. பூசாரிகளின் பெண்டுகளைப் பார்த்தால் சொல்லிவிடலாம் எத்தனை காய்ந்துபோன வயிற்றுப் பாடு என்பது.

பூசை செய்யும் நம்பியார்கள் ஒற்றைத் திமில் ஒட்டகம் போல. குயவர்களிலும் எல்லோரும் கோயில் பூசைக்கு வருவதில்லை. கிடைக்காதபோது சைவப் பிள்ளைமார் பூசை செய்தார்கள். தொண்டைக் குழியில், திருமாங்கல்யம்போல அதைவிட இறுக்கமாகத் தொங்கும் ஒற்றை உருத்திராக்கம் ஓர் அடையாளம். பூசை செய்யும் பிள்ளைமாருக்கு குருக்கள் என்று பெயர். குருக்கள் மடம் என்றே ஓர் ஊர் இருக்கிறது. வேளாளரின் உப கிளைகள்தாம், பூக்கட்டிப் பண்டாரம், சங்கூதிப் பண்டாரம், குருக்கள், தீட்சிதர், சைவ முதலி, ஓதுவார், ஆதி சைவர் என்றொரு ஆய்வு சொல்கிறது. அது கிடக்க!

ஊருக்கு வட மேற்கே, வயற்காட்டின் நடுவே திரடொன்று இருந்தது. தோப்பு என்று சொல்லிவிட முடியாது. திட்டு, கரடு எனக் குறிக்கலாம். ஆங்கோர் சாத்தாங்கோயில், ஆவணங்களில் அவருக்கோர் பெயர் இருக்கலாம். அல்லது பெயரில் என்ன இருக்கிறது என்று விட்டேத்தியாகவும் இருக்கலாம். மேற்படி சாத்தா வடித்தெடுத்த வரி சிலை அல்ல, வடிவம் சிவலிங்கம் போல. ஆனால், ஆவுடை இல்லாமல், அகன்ற தூர் பாகத்துடன் இரண்டடி உயரத்தில் இருந்தார். கூரையும் இல்லை சுற்றுக்கட்டு மதிலும் கிடையாது. நான்கடிக்கு ஆறடி வரிக்கல் பாவிய தளத்தில் பூமி மட்டத்தில் இருந்து மூன்றடி உயரத்தில் இருந்தார். திரடு ஒரு நந்தவனம் போன்றும் இருந்தது. ஒரு கோட்டை விதைப்பாடு பரப்பளவு இருக்கும்.

நந்தவனம் என்றால் பெரும்பாலும் அரளி. அரளியில் செவ்வரளி, வெள்ளரளி, கழுநீர் அரளி, அவ்வந்த நிறங்களில் அடுக்கரளிகள், தங்கரளி. சில மூடுகள் நந்தியாவட்டை, வாடாமல்லி, பிச்சி, நாலைந்து வாழை மூடுகள், கூழைப்பலா, ஆள் ஏற முடியாத உயரத்தில் எட்டுப் பத்து தென்னை மரங்கள், மாமரம் ஒன்று. பச்சையாகத் தின்ன பச்சரிசி போல் இருக்கும். காய்கள் முகப்பில் ஓடைபோல் குழி கொண்டவை. எனவே ஓடைக் காய்ச்சி என்றும் பெயருண்டு. பழுத்தால் குழம்புக்கு ஆகும். திரட்டின் தென்கிழக்கு ஓரத்தில் சின்ன வாவி. அதை நீராவி என்றும் சொல்வார்கள்.

நந்தவனமும் நீராவியும் சாத்தாவும் வேங்கைக்காடு மூத்தபிள்ளையின் குடும்ப வகை. மூன்று தலைமுறைச் சொத்து. சாத்தாவின் தினப்படி பூசைக்கு என இரண்டு கோட்டை விதைப்பாடு

அகப்பத்தில் விட்டிருந்தனர் மூதாதையர்.

பாலாம்பாளின் அப்பா சிவராம நம்பியாருக்கு தினம் ஒருவேளை பூசைக்கென மூன்று கோயில்களில் முறை. அதில் சாயரட்சை பதிவு சாத்தாங்கோயில்.

மாதம் ஏழு மரக்கால் நெல் சம்பளம், விளக்கெரிக்க நல்லெண்ணெய், நைவேத்தியம் பொங்க பச்சரிசி, விசேட நாட்களில் பூசைக்காக - தேங்காய், பூ, பாளையங்கோட்டன் பழம், வெற்றிலை, பாக்கு, சூடம், சாம்பிராணி, சந்தனம் ஆகியவற்றுக்காக விபூதி, விறகு எனக் கணக்குப் பார்த்து இன்னொரு ஏழு மரக்கால் நெல். மற்றதெல்லாம் எப்பாடு பட்டாலும் அப்பாடு சாத்தா பாடு, நம்பியார் பாடு.

தோராயமான கணக்குப்படி, மூன்று கோயில்களுக்குமாக செலவு அடக்கம் மாதம் இரண்டு கோட்டை நெல் கிடைக்கும் நம்பியாருக்கு. அன்று உழ, வரப்பு வெட்ட, வெள்ளம் தண்ணீர் பார்க்க என பதிவு வேலைக்காரர்களுக்கு மாதம் ஒரு கோட்டை நெல்லும் மத்தியானக் கஞ்சியும் என்பது வழமை. அதில் பதிவு வேலை பண்ணைக்காரனுக்கு திருப்பிச் செய்யும் செலவுகள் இல்லை நம்பியார் போல. பூசைக்கான கூலி நெல்லை, பொலியளவு மரக்காலுக்கு அளப்பார்களா கொத்து அளவு மரக்காலுக்கு அளப்பார்களா என்றும் தெரியது. கடவுளுக்கு வஞ்சனை செய்வார்களா எனும் நம்பிக்கை உண்டு நம்பியாருக்கு. பொலியில் அளந்த நெல்லானால், காயப்போட்டு குத்தினால் கோட்டைக்கு பத்தரை மரக்கால் பச்சரிசி இருக்கும், குருணையும் சேர்த்து. சண்டு புடைத்த நெல்லானால் எட்டு மரக்கால் அரிசி. இதில் மூன்று கோயில் பூசைச் செலவுகள், சாப்பாடு, துணிமணி, பிள்ளைகளின் படிப்பு, வைத்தியம், நல்லது கெட்டது, நாள் கிழமை. நாளும் கிழமையும் நலிந்தவர்க்கு ஏது என்றாலும் கைத்தாங்கலாக நடந்துகொண்டிருந்தது குடித்தனம்.

பெருவெள்ளமாகப் பக்தர் வந்து கூடுவதற்கு நமது சாத்தாங்கோயில் என்ன திருப்பதியா, குருவாயூரா, கொல்லூரா, சபரிமலையா, திருவரங்கமா? தட்டு என்பதோ அதில் காலணா, அரையணா தட்சணை என்பதோ சாத்தியம் இல்லை. என்றாலும் எப்போதாவது வந்து நிற்கும், கை நீட்டும் பக்தனுக்கு நெற்றியிலும் மார்பிலும் தோள்பட்டையிலும் பூச தாராளமாகத் திருநீறு தர வேண்டும். எவராவது பங்குனி மாதம் பரணி நட்சத்திரத்தில் திருநீற்று முட்டம் நீற்றினால் கோயிலுக்கு என்றும் ஏழெட்டு தருவார்கள். சந்தனம் என்பது பச்சரிசி மாவும் மஞ்சளும் பன்னீரும் சேர்த்துக் குழைத்ததோர் சாந்தம். காய வைத்து

வில்லைகளாக உருட்டி பலசரக்குக் கடைகளில் விற்பார்கள்.

வயற்காட்டில் வேலை இருந்தால் பண்ணையார் வந்து கும்பிட்டு விபூதி எடுத்துப் பூசிவிட்டுப் போவார். மற்றபடி சாத்தாவுக்கு கொடை, சிறப்பு, ஊட்டு, நம்பிரான் விளையாட்டு, வேட்டை ஏதும் கிடையாது.

சாத்திரப்படி மூன்று கோயில்களுக்குமான பூசைக்கு முன்னால் நம்பியார் குளிக்க வேண்டும். அருகில் இருக்கும் ஆற்றிலோ தெப்பக்குளத்திலோ, நீராவியிலோ, ஊரணியிலோ குளித்து, ஈர சோமனுடன் சாமியைக் குளிப்பாட்டி, எவராது நேர்ச்சைக்கு எண்ணெய் கொடுத்தால் பாதியை அபிசேகத்துக்கும் கொஞ்சம் கல்விளக்குக்கும் மீதியை வீட்டில் தாளிதத்துக்கும் எடுத்துக்கொண்டு, அடுப்பு மூட்டி, சின்ன வெண்கல உருளியில் உழக்குப் பச்சரிசி பொங்கி, நைவேத்தியம் காட்டி, சூடம் கொளுத்தினால் தீர்ந்தது. மூன்று வேளை குளித்துத் தடுமன் பிடித்துத் தும்மிய பின்தான் நம்பியார் பட்டர் பொடி போடப் பழகினார் போலும்.

கோயிலின் இடமோ வலமோ நிற்கும் செடிகளில் எது பூத்திருந்தாலும் அதுதான் சாமிக்கும். எருக்கலையும் ஆகும் சாத்தாவுக்கு.

சிவபெருமானே வெள்ளெருக்கம் சடை முடியன்தானே!

யாவர்க்குமாம் இறைவர்க்கோர் பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கோர் வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதோர் கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே!

-என்பதுதானே திருமந்திரம்.

பூசை நேரங்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் அவர் பூசை செய்யும் மூன்று கிராமங்களிலும் குழந்தை பிறந்தால், பெண்பிள்ளை சமைந்தால், எவரும் உயிர் நீத்தால் நடக்கும் சடங்குகளில் புண்ணிய நீர் தெளிக்கக் கூப்பிடுவார்கள். தர்ப்பை, ஓமக்குச்சிகளுடன் போக வேண்டும். நாலணா தட்சிணையும், பக்கா பச்சரிசி, தேங்காய், உருண்டை சர்க்கரை, கால்பக்கா பருப்பு, சீப்பு வாழைப்பழம், ஆழாக்கு நெய், உழக்கு நல்லெண்ணெய், வாழைத் தண்டு, சேம்பந் தண்டு, நாலு கத்தரிக்காய், இரண்டு வாழைக்காய், சின்னப் பூசணி, இளவன், வெள்ளரி, புடலை, சேனை என அரைக் குட்டிச் சாக்கு தேறும். காரியங்கள் முடிந்து குட்டிச் சாக்கை தலையில் சுமந்து, சடங்கு நடந்த வீட்டைத் திரும்பிப் பார்க்காமல், எவரும் எதிர்ப்பு வராமல், படி இறங்கிப் போக வேண்டும்.

பின்னாலிருந்து வீட்டு மூதாட்டியின் குரல் கேட்கும்.

“திரும்பிப் பாக்காமப் போவும் ஓய்” என்று இளக்காரத்துடன். பாதையில் படுபவர் கேட்பார்கள் சற்றும் குறையாத கேலியுடன்.

“ஓய் நம்பியாரே! நல்ல கோளுதான் இன்னைக்கு! அம்புடையும் அவிச்சுச் திம்பேரா, விலைக்குக் குடுப்பேரா ஓய்?”

பூசாரி வாழ்க்கைக்கு ஆடையிலும் கோடையிலும் சினப்படக் கூடாது. ரௌத்திரமும் பழக இயலாது. சினம் என்பது சேர்ந்தாரைக் கொல்லி. எதற்கும் திளைத்துச் சிரிக்க வேண்டும். தொழில் தர்மம். ஊசியால் குத்தினாலும், கோடரியால் வெட்டினாலும், வெட்டாங்கல்லால் எறிந்தாலும். ‘கல்லால் ஒருவன் அடிக்க, காண்டீபம் எனும் வில்லால் ஒருவன் அடிக்க’ என்று என்.சி.வசந்தகோகிலம் பாடிய நிந்தாஸ்துதியைப் போல. மறு கன்னத்தையும் குதூகலத்துடன் காட்ட வேண்டும்.

தோப்பில் தேங்காய், வாழைக் குலை வெட்டிக்கொண்டிருந்தால், வெண்டை, கத்திரி, கீரைத்தண்டு, முருங்கைக்காய் பறித்துக்கொண்டிருந்தால் சற்று நின்று நிதானித்துப் பேச்சுக்கொடுப்பார் நம்பியார். தொண்ணாந்து நிற்பதுதான் பாவனை. ஆனால், தொண்ணாந்து நிற்பதாகத் தோன்றாமல். தோட்டுடன் ஒரு தேங்காயோ, இரண்டு வாழைக்காயோ, பூவோ, தண்டோ, இரண்டு கைநிறையக் காய்கறிகளோ, நாலு முருங்கைக்காயோ, பிடி கீரைத் தண்டோ கிடைக்கும்.

வயலறுத்து, சூடடித்து, பொலியளக்கும் களங்களுக்கு நம்பியார் போவதில்லை. அது யாசகம். இறைப் பணி செய்பவன் யாசகம் செய்யலாகாது. பூசை தவிர, மழை வருமா - வராதா எனக் குறி சொல்வது, அக்னி நட்சத்திரம் எப்போது, மாசி மகம், வைகாசி விசாகம், பங்குனி உத்திரம், ஆடிப் பூரம், ஆடி அமாவாசை, ஆவணி அவிட்டம், திருக்கார்த்திகை, தைப்பூசம் என்றெல்லாம் பஞ்சாங்கம் பார்த்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமி, நவமி, கரிநாள், முகூர்த்த நாள், கிருத்திகை, சஷ்டி, ராகு காலம், எமகண்டம், மேற்கில் கிழக்கில் வடக்கில் தெற்கில் சூலம் எல்லாம் மனப்பாடமாக இருக்க வேண்டும்.

இடது கையில் உயர்த்திப் பிடித்த சின்ன வெண்கல உருளி, அதில் நீட்டிக்கொண்டிருக்கும் அகப்பைத் தண்டு, மூடிய வாழை இலைத்துண்டுமாக, வலது கையில் வேட்டி நுனியைத் தூக்கிப்

பிடித்தபடி நம்பியார் மூன்று காலங்களிலும் அஞ்சலோட்டத்தில் இருப்பார். பார்த்தால் வாழ்க்கையை சதா ஓடித் தொலைத்துக்கொண்டிருப்பதாகவும் ஏதோ தீராத நேர்ச்சை போலவும் தோன்றும்.

நைவேத்திய சாதம், உழக்கரிசி பொங்கியது, ஒரு வயிற்றுக்குப் போதாது. சிலசமயம் காலை வேளையில் மிகவும் பசியாக இருக்கும் போலும். தேங்காய் சில்லும் சர்க்கரைத் துண்டும் காலணாவுக்கு கடையில் வாங்கி, கடித்துக்கொண்டு, சுடு சோற்றை வழித்து வாயில் போட்டுக்கொள்வார். வீட்டில் போய் அதற்கும் உத்தரம் சொல்ல வேண்டியது இருக்கும்.

சில சமயம் வெறும் கையை வீசிக்கொண்டு வந்து இரண்டு பேயன் பழமோ பாளையங்கோட்டன் பழமோ கடையில் வாங்கி சாமிக்கு நைவேத்தியம் செய்வார்.

வயற்காட்டு நந்தவனத்து சாத்தாவுக்கு சாயரட்சை பூசை. வறுமை வாய்விட்டுச் சிரிக்கும், ஆனி ஆடிச் சாரல் மாதங்கள். வீட்டில் அரிசிப் பானையில் சாத்திரத்துக்குக் கிடந்த கைப்பிடி அரிசியையும் கஞ்சி வைத்துக் குடித்தாயிற்று. யாரிடம் முன்னறுப்பு கடன் கேட்கலாம் என்றால் அறுவங்கொறுவா அறுக்க இன்னும் பத்து நாட்கள் ஆகும்.

சகல சீவராசிகளுக்கும், கல்லினுள் இருக்கும் தேரைக்கும் படியளப்பவனுக்கு நம்பியார் படியளக்க வேண்டும். பூசைக்கு நெல் தரும் வீடுகளில் போய்க் கடன் கேட்டால் ஏச்சு மட்டும் கிடைக்கும். “தந்ததை வித்துத் திண்ணுட்டீரா?” என்பார்கள். தீராத் தரித்திரமும் தாங்கொணா இறையருளும்.

நாளையப்பாடு இருக்கட்டும், இன்று சாத்தாவுக்கு என்ன பதில்?

பூசையை முடித்து, மணியடித்து சூடம் காட்டும்போது, பண்ணையார் படியேறி வந்தார். பவ்யமாக தீபம் காட்டி, விபூதி கொடுத்தார் நம்பியார். திருநீற்றை கொஞ்சம் நாக்கில் போட்டு, கொஞ்சம் நெற்றியிலும் தொண்டைக் குழியிலும் வைத்து சிரசிலும் போட்டுக்கொண்டார்.

“நம்பியாரே… பிரசாதமாக நைவேத்தியச் சாதம் கொஞ்சம் தாரும் ஓய்!” என்றார் பண்ணையார்.

நம்பியாருக்கு அன்னமய கோசமும் பிராணமய கோசமும் பதறிச் சிதறியது போலிருந்தது. இடுப்புச் சோமனை யாரோ உருவிவிட்டது போல… கௌபீனம்கூட இல்லாமல் நின்றுகொண்டிருப்பதைப் போல…

“பிள்ளைவாள்... வெறும் பச்சரிசிச் சாதம். வெல்லம், தேங்காய் முறிகூட இல்ல...”

“ஒரு நுள்ளுப் போல தாரும் வே. சாத்தா பிரசாதம்லா...”

“வேண்டாம் பிள்ளைவாள்...”

“நீரு தாறேரா, நான் எடுத்துக்கிடவா?”

வாழை இலைத் துண்டு கொண்டு மூடியிருந்த வெண்கலச் சிற்றுருளியை கையில் தூக்கி, இலையை நீக்கிக் காட்டினார்.

பால் வடிந்தபடி சின்ன மாம்பிஞ்சு ஒன்று கிடந்தது உருளியின் நடுவில், பாதரச மணிபோல் உருண்டபடி. நந்தவனத்து மாவில் பறித்தது.

நம்பியார் வியர்த்து மறுபடியும் குளித்தார்.

“என்ன வே? வெளையாட்டுக் காட்டுகேரா? சாமிக்கு நைவேத்தியம் மாவடுவா வே? கடவுளை ஏமாத்தலாமா? நல்லாருக்கா ஓய்? நீங்களே இப்பிடிச் செய்தா கடவுளுக்குப் பொறுக்குமா ஓய்?”

தடாலென நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார் நம்பியார்.

குரல் கம்மி, விம்மி உடைந்து, கசிந்து ஒழுகியது.

“தப்புத்தாம்யா... தாரித்திரியம்யா... இனி இப்பிடி நடக்காதுய்யா.”

நம்பியாருக்கு எழுந்திருக்க மனதில்லை.

அந்த நந்தவனத்தில்தான் அவர் தலைப்பிள்ளை, பன்னிரண்டு வயதில் சாமிக்கு பிச்சிப்பூ பறிக்கையில், வல்லரவம் தீண்டி இறந்துபோனான் எட்டு ஆண்டுகள் முன்பு. இன்றிருந்தால் அவன் பங்குக்கு மூன்று கோயில்கள் பூசை வைப்பான். வயிற்றின் சுமைக்கு மாற்றுத் தோள் ஒன்று வாய்த்திருக்கும்.

விழுந்துகிடந்த மண்ணிலிருந்து அவன் திரேகத்தின் மணம் வீசுவதாகவும் தோன்றியது அவருக்கு. எழுந்துகொள்ள மனமின்றிக்கிடந்தார் நெடுநேரம்.

-விகடன் தீபாவளி மலர், **2006**

# 6

## தன்ராம் சிங்

சிங் எனும் துணைப் பெயர் கொண்டவர் எல்லாம் பஞ்சாபி என எண்ணிக்கொள்ள வேண்டாம். தன்ராம் சிங் பஞ்சாபி அல்ல. கேட்டால், அவன் தன்னை நேபாளி என்பான். நேபாளிகளுக்குள்ளும் சிங் என்று துணைப் பெயர் உண்டு. ஆனால், உண்மையில் தன்ராம் சிங், திபேத்துக்காரன்.

நேபாளிகளுக்குச் சற்று மேலான தோற்றப் பொலிவு, தன்மையில் கூரான நிறம் உண்டு. திபேத்துக்காரர்களும் வெள்ளை நிறம்தான்; கண்கள் இறுக்கமானவைதான்; முகத்திலும் உடலிலும் நிரப்பாக மயிர் வளர்வதில்லைதான்; எனினும், நேபாளிகள் வேறு, திபேத்தியர் வேறு. நேபாளி என்று சொன்னால், வடநாட்டில் சமூக அங்கீகாரம் சற்று அதிகம். எனவே, கூர்க்கா வேலை செய்யும் யாரைக் கேட்டாலும், நேபாளி என்பார்கள். நேபாளிகளுக்கு அதில் சற்று மனவருத்தம் உண்டு. தன்ராம் சிங்கைத் துளைத்துக் கேட்டால், 'திபேக்' என்பான். அவனுக்கு 'திபேத்' என்று சொல்ல வராது.

எனக்கு மும்பையில்தான் கூர்க்காக்கள் முதலில் அறிமுகம். நாற்பது பேர் வேலை செய்த எங்கள் தொழிற்சாலையில், முதலில் மகேந்திர சிங் என்றொரு கூர்க்கா இருந்தான். அவன் அசல் நேபாளி. தொழிலாளர்கள்

யாரும் அவனைச் சீண்ட முடியாது. தலையில் ஜெனரல் மானெக்ஷா பாணி தொப்பி அணிந்திருப்பான். முழுக்கைச் சட்டையும், காலில் சாக்ஸும் பூட்ஸும், காக்கி கால்சட்டையும், இடையில் பெல்ட்டில் செருகிய சற்றே வளைந்து கூரான ‘குக்ரி’யும் என்று தோரணையாக இருப்பான். வேறு பெரிய கம்பெனி ஒன்றில், அதிக சம்பளத்தில் வேலை கிடைத்து மகேந்திர சிங் சென்ற பின், அவன் இடத்துக்கு வந்தவன்தான் தன்ராம் சிங்.

தன்ராம் சிங்கிடம் அவ்வளவு மிடுக்கு போதாது. அச்சுறுத்தும் உடல் மொழியோ பார்வையோ கிடையாது. கடுமையாகத் திட்டினாலும் இளித்துக்கொண்டு நிற்பான். அவனுக்கு ஊரில் ஒரு குடும்பம் இருந்தது. இருக்கத்தானே செய்யும்? பெண்ணும் இரண்டு பையன்களும். இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே ஊருக்குப் போய்வரும் அபாக்யவான் அவன்.

பதினைந்து, இருபது பேர் சேர்ந்துதான் பயணமாவார்கள். ரயிலில் முன்பதிவெல்லாம் பழக்கமில்லை. ஜெனரல் கோச்சில் சேர்ந்தாற்போல தடுப்புகளில் இடம்பிடித்துக்கொள்வார்கள். மும்பையில் இருந்து வாரணாசி வரை ஒரு ரயில். இறங்கி வண்டி மாறி பாட்னா, பரூணி, மன்சி. மறுபடியும் வண்டி மாறி மீட்டர் கேஜில் சிலிகுரி. அங்கிருந்து மலைப் பாதையில் மங்கன் வழி சிக்கிம் எல்லை வரை கிழட்டு டப்பா பஸ். பிறகு, மலைப் பாதையில் தலைச் சுமடாகவும் மட்டக் குதிரைகளிலும் பாரம் ஏற்றிக்கொண்டு, எட்டு முதல் பத்து நாட்கள் வரை நடை. காலை எட்டு மணிக்கு மேல் ஆரம்பித்து பிற்பகல் நாலு மணி வரை மலைப் பயணம். இரவு மலைக் கிராமம் ஒன்றில் கிடை. உணவுக்குச் சுட்டு எடுத்துப்போகும் ரொட்டி. வண்டி மாறி, அடுத்த ரயிலுக்குக் காத்திருக்கும்போது, தேவைக்கு மறுபடியும் ரொட்டி தட்டிக்கொள்வார்கள். மலை ஏறும்போது இரவில் சுடும் ரொட்டிகள் பகலுக்கு. வர்ண டிரங்குப் பெட்டிகளில் இரண்டு ஆண்டுகளாகச் சேகரித்த துணிமணிகள், வெள்ளி ஆபரணங்கள் இருக்கும். இந்திய நாணயம் அவர்கள் ஊரில் செல்லுபடி ஆகாது.

கூர்க்காக்கள் அவ்வளவாகச் சிறு விடுப்புகள் எடுப்பதில்லை. நிர்வாகம் காருண்ய அடிப்படையில் கூர்க்காவுக்கு மாத்திரம் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை எல்லா விடுப்புகளையும் சேர்த்து மொத்தமாக வழங்கும். ஊருக்குப் போகும்போது தற்காலிக மாற்று ஏற்பாடு செய்துவிட்டுப் போவார்கள். போக வர பாதி லீவு போய்விடும். ஈராண்டுக்கு ஒரு முறை ஒரு மாதம் தாம்பத்யம். தன்ராம் சிங் விடுப்பில் போனதையே மறந்திருக்கும்போது, ஒருநாள் காலையில் சிரித்தபடி

சல்யூட் அடிப்பான். ‘சேஞ்ச் ஆஃப் கார்ட்’ எப்போது நடந்தது என்றே நமக்குத் தெரியாது.

அலுவலக நேரம் முடிந்து, அதிகாரிகளும் சிப்பந்திகளும் போன பிறகு, அவனது இன்னொரு உலகு மெள்ளக் கண் அவிழ்த்துப் பார்க்கும். தொழிற்சாலை மேலாளர் காலையில் அரை நாள் மட்டும் வந்துவிட்டுப் போவார். மற்றபடி அலுவலகம் எனது கட்டுப்பாட்டில் இருந்தது. ஸ்டோர் சாவி, அலுவலகச் சாவி, மெயின் டோர் சாவி எல்லாம் என் கைவசம். எனவே, சாவதானமாகக் கடைசி ஆளாகக் கிளம்புவேன். சில சமயம் எதற்கடா வீட்டுக்குப் போகிறோம் என்றிருக்கும். ரயிலில் சற்று தள்ளல் குறையட்டும் என்று சில நாட்களில் தாமதமாகக் கிளம்புவேன். சில சமயம் தொழிற்சாலையிலேயே தங்கிவிடுவதும் உண்டு. வளைவினுள் நாலைந்து தொழிற்கூடங்கள். எல்லோருக்கும் பொதுவாக கண்ணூர்ப் பக்கம். கக்காடு ஊரைச் சேர்ந்த தாவூத் மூசாவின் கேன்டீன். மாதக் கணக்கு உண்டு எனக்கு. இரவுக்கு சொல்லி வைத்தால் சப்ஜி செய்து, ரொட்டி சுட்டுத் தருவான்.

“ஷாப், கர் நை ஜாத்தா?” என்பான் தன்ராம் சிங்.

மாலை அவனது வேலை ஆரம்பமாகி இருக்கும். துவைத்துக் குளித்துவிட்டு, ரொட்டி போட ஆரம்பிப்பான். ஆறரை மணிக்கு மேல் அக்கம்பக்கம் வேலை பார்க்கும் அவனது கூட்டாளிகள் சிலர் எட்டிப் பார்ப்பார்கள். கசா முசா என்று உரையாடல் கேட்கும். இரண்டு பேர் அவனுடனேயே தங்குபவர்கள். அலுமினிய டப்பாவில் எப்போதும் ரொட்டி மாவும் பச்சரிசியும் இருக்கும். மஜ்ஜித் பந்தரில் வாங்கிய பருப்பு, கொண்டைக் கடலை, உப்பு - புளி சமாசாரங்கள், கடுகு எண்ணெய், மண்ணெண்ணெய் பம்ப் ஸ்டவ். இரவுக்கும் காலைக்குமாக, வேளைக்கு தலைக்கு நான்கு ரொட்டிகள். கடைசியில் காதடைக்காமல் இருக்க கொஞ்சம் போல சோறு. அவர்களுக்கு காலை, இரவு என இரு வேளை உணவுதான். மதியம் எதுவும் உண்பதில்லை.

“தோ ரொட்டி காவ் ஷாப்” என்பான் தன்ராம் சிங். சிலசமயம் சுடச்சுட இரண்டு தின்றிருக்கிறேன். பூண்டு சதைத்துப்போட்டுக் கடுகெண்ணையில் தாளித்த டால், மணமாக இருக்கும். சில சமயம் மூசாக் கடை சப்ஜியும் சப்பாத்தியும் இல்லையேல் டால் - சாவல். சாப்பிட்ட பின் சற்று நேரம் கதை பேசிக்கொண்டு இருப்பார்கள். ஞாயிறுகளில் ஆட்டுக் கறி சமைப்பார்கள். ஆட்டுக் கறி என்பது தலைக் கறி. தலை வாங்கக் காசில்லை என்றால், ஆட்டுக் காதுகள் வாங்கிக்கொண்டு வருவான் மலிவாக. தீயில் ரோமத்தைச் சுட்டுப்

பொசுக்கி, கழுவி, துண்டு துண்டாக நறுக்கிச் சமைப்பார்கள். காசிருந்தால் குடல், அது விருந்து.

எப்போதாவது தன்ராம் சிங்குக்கு கடிதம் வரும். முகவரி எனது கையெழுத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும். புதிய கடித உறைகளில் மொத்தமாக மும்பை முகவரி எழுதி வாங்கி, இரண்டு ஆண்டுகளுக்கு வரும்விதத்தில், ஊருக்குப் போகும்போது கொடுத்துவிட்டு வருவான். யாரிடம் கொடுத்து, இந்திய எல்லைக்குள் கொண்டுவந்து, எந்த ஊரில் போஸ்ட் செய்வார்கள் என்று தெரியாது. தந்தியும் தொலைபேசியும் உதவாத மலைப் பிரதேசங்கள். தாய், தகப்பன், பெண்டு பிள்ளைகள், உடன்பிறப்புகள் இறந்துபோனாலும் தபால் உறைதான். பத்துப் பதினைந்து நாட்கள் சென்று கிடைக்கும் தபால் பார்த்து, நேரில் செல்ல மேலும் பத்துப் பன்னிரண்டு நாட்கள் என்றாலும், உயிரின் பிரிவல்லவா?

மாலையில் கூடும் கூட்டாளிகள் மூலம் செய்திபோகும், ஒவ்வொரு உறவுக்கார கூர்க்காவுக்கும். ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு சௌபாத்தி கடற்கரையில் கூடுவார்கள். மர நிழல் பார்த்து வட்டமாக உட்கார்ந்து, கண்கள் கலங்க நினைவுகளைக் கூறுவைத்து, சடங்குகள் செய்து, தீ வளர்த்து, அதில் தகவல் வந்த கடிதத்தை உறையுடன் சேர்த்து எரித்து, பின்பு நெருப்பை ஆற்றி, சாம்பலைக் கொண்டுபோய் அரபிக்கடலில் கரைத்து, மொட்டை அடித்து, சமுத்திரத்தில் குளித்து, அவரவர் நினைவு சுமந்து பிரிந்துபோவார்கள்.

கடிதம் வந்த மறு ஞாயிறுக்குள் தன்ராம் சிங் மொட்டை போட்டிருந்தால் தெரிந்துகொள்ளலாம். எப்படியும் அவனுக்கு ஆண்டுக்கு மூன்று, நான்கு மொட்டைக்கு பிழை வராது. மொட்டை போட்டிருந்தால், சக தொழிலாளர்கள் எப்போதும் தன்ராம் சிங்கை கலாட்டா செய்வார்கள். சாவு பரிகாசத்துக்குரியதா? எளியதோர் சிரிப்பில் அவன் துக்கம் உறைந்து இருக்கும்.

தன்ராம் சிங் மாத்திரமல்ல, எந்த கூர்க்காவையும் கடுகடுத்த முகத்துடன் நான் கண்டதில்லை. முகம் ஏறிட்டுப் பார்த்த உடன், மலரும் சிரிப்பு; உன் ஆதரவில் என் வாழ்க்கை என்பது போல.

தொழிற்சாலையில் இருந்து நடந்து போகும் தூரத்தில் சினிமா தியேட்டர் ஒன்றிருந்தது. இரண்டே ரூபாய் டிக்கெட். வகுப்பு பேதமில்லாமல் கிடைத்த இடத்தில் உட்காரலாம். காற்றாடி சுழலாது, மூட்டைப் பூச்சி ரத்தம் உறிஞ்சும், வெற்றிலைப் பாக்கு குளம் எங்கு வேண்டுமானாலும் உமிழப்பட்டிருக்கும், புழுங்கிய வாடை அடிக்கும்.

தன்ராம் சிங்குக்கு சத்ருகன் சின்ஹா படங்கள் பிடிக்கும். சினிமா பார்க்க சில சமயம் வாரக் கடைசியில் இரண்டு ரூபாய் கடன் கேட்பான். ஏழாம் தேதி சம்பளம் வாங்கிய கையோடு சில்லறை மாற்றி வைத்துக் கொண்டு, நிறைய பேருக்கு தன்ராம் சிங் இரண்டிரண்டு ரூபாயாகக் கடன் தீர்த்துக்கொண்டு இருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

ஒருமுறை விடுமுறையில் ஊர் சென்று திரும்பியபோது, வளைந்து கூரான, கைப்பிடியில் கைத்திறன் கொண்ட ‘குக்ரி’ ஒன்று கொணர்ந்து தந்தான். சிலிகுரி சந்தையில் வாங்கியதாகச் சொன்னான். அவனது ஊருக்குப் பக்கத்தில் பாயும் ஆறொன்று உண்டென்றும், அதன் பெயர் இன்னதென்றும் பலமுறை சொல்லி இருக்கிறான். எத்தனை யோசித்தும் எனக்கு அதன் பெயர் நினைவுக்கு வரவில்லை.

பதினெட்டு ஆண்டுகள் முன்பு, என் மும்பை வாழ்க்கையின் கடைசி ஆண்டில், கோடை விடுமுறைக்கு ஊருக்குச் சென்று திரும்பியவன், கூடவே ஒருவனைக் கூட்டி வந்தான். காக்கிச் சீருடையும், தொப்பியும், பூட்ஸும், பெல்ட்டும், கத்தியுமாக கூர்க்கா உடையில் இருந்தான். திபேத்திய சிற்றரசொன்றுக்கு இளவரசனாக இருக்கும் எல்லா அங்க லட்சணங்களும் இருந்தன. முகம் வசீகரமாக இருந்தது. “அமாரா ஜமாய் ஷாப்” என்றான் தன்ராம் சிங். “மகனுக்கு எப்போது திருமணம் செய்தாய்” என்றேன். “விடுமுறையில் போயிருந்தபோது” என்றான்.

அதே ஆண்டில் நான் கோவைக்குக் குடி பெயர்ந்தேன். அதன் பிறகு, அலுவல் நிமித்தம் மும்பை சென்றாலும் எனக்கு அந்த தொழிற்சாலைக்குப் போக வாய்க்கவில்லை. தொழிற்சாலையும் மூடப்பட்டு, அந்த இடம் கம்பெனி குடோன் ஆயிற்று. தன்ராம் சிங் இருப்பானோ, இல்லை என்னைப் போல ஓய்வு பெற்றுவிட்டானோ? ஓய்வுபெற்றாலும் ஊருக்குத் திரும்ப இயலாது. என்னால் திரும்ப முடிந்ததா?

எனக்கு இன்று தன்ராம் சிங்கைப் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது; பார்ப்பது சாத்தியமில்லை எனத் தெரிந்தும். ஒரு வேளை புலம் பெயர்ந்து, தன்ராம் சிங் தென்னாட்டுத் தெருக்களில், இரவில் மூங்கில் கழி தட்டிக்கொண்டு, நீண்ட விசில் ஊதிக் கொண்டு, கண் விழித்து நடந்துகொண்டு இருக்கக்கூடும். கூலியாக மாதம் ஐந்தோ, பத்தோ வீட்டுக்கு வீடு யாசித்துப் பெறுவானாக இருக்கும். மாதத்தின் முதல் வாரத்தில், உங்கள் வீட்டின் முன் வந்து சிரித்தபடி நின்றால், அருள் கூர்ந்து அவனுக்கு ஐந்து ரூபாய் தாருங்கள், கனவான்களே!

-ஆனந்த விகடன், **15.8.2007**

# 7

## பேச்சியம்மை

மூன்று நாட்களாக விடாத அடைமழை. வானம் வெளிவாங்காமல் மூடாக்குடன் இருந்தது. நடுப்பகலில் இரவு ஏழு மணி ஆனது போல இருள் மயக்கம். வீடுகள், கோயில்கள், மண்டபங்கள் யாவும் கழுவிவிட்டது போல் ஈரத் துலக்கம். மழைத் தண்ணீர் புழுதி அரித்து ஓடி, தெரு மணல் மினுங்கக்கிடந்தது. தெருவில் பள்ளம் நோக்கி ஓடும் தண்ணீர் இரண்டு கை அள்ளிக் குடிக்கலாம் போலத் தெளிந்து ஓடியது. பெருமழையின் காரணமாக இரண்டு நாட்கள் உள்ளூர்ப் பள்ளி விடுமுறை. பகலில் வழக்கமாக காய்கறி, கீரை, கோலப்பொடி மாவு விற்கும் கூவியர் நடமாட்டம் இல்லை.

பகலிலேயே ஆள் நடமாட்டம் இல்லாதபோது ஒன்பது மணி தாண்டிய இரவில் யார் நடமாடுவார்? கழுதைகள்கூட மரத்து அடிவாரங்களில் ஒதுங்கி, நின்றவாக்கில் தூங்கின. மாட்டுத் தொழுவங்களில் எருமை மாடுகளின் வாலடி. மழை நின்று பெய்தது. மழைக்கும் அதன் அடர்வு பொறுத்துப் பெயர்கள் உண்டு. தூற்றல், தூறல், தூவானம், சர மழை, அடை மழை, பெரு மழை. சிறு தூறலை, நெசவாளர் நூறாம் நம்பர் மழை என்பார்கள். நூலின் சன்ன ரகம் போல என்ற பொருளில், சீராக ஓசையுடன் பெய்துகொண்டே இருந்தது.

மழைக்கு மணம் மாத்திரமல்ல, ஒலியும் உண்டு.

மழை கிழக்கில் இருந்து அடித்தது, சாய்வாக. நல்லவேளையாகக் காற்று அலைக்கழிக்கவில்லை. சுவரோரம் எத்தனை ஒட்டிப் படுத்தாலும் லேசாகக் கச்சான் தெறித்தது. காலடியில் விரித்திருந்த கோணிச் சாக்கில் ஈரம் நயத்திருந்தது. எப்போதும் கீழே விரிக்க இரண்டு கோணிச் சாக்குகள். தலைக்கு மாற்றுடை திணிக்கப்பட்ட துணிப்பை. போர்த்திக்கொள்ள பன்னப் பழசான முரட்டு சமுக்காளம். தலைமாட்டில் சாப்பாட்டுத் தட்டு, டம்ளர், தண்ணீர்ச் செம்பு.

கிழக்குப் பார்த்த வாசல்கொண்ட சைவ மடத்தின் வடக்குப் படிப்புரை அது. இரு வசமும் சாய்வாகத் திண்டுகள். அப்பர் மடம் என்பார்கள் கிராமத்து மக்கள். மானிப்பாரின்றிக்கிடந்த மடம். உள் முற்றத்தில் எருக்கு, மஞ்சணத்தி, ஊமத்தை காடடைய வளர்ந்துகிடந்தன. திருவிழாக் காலங்களில் மடத்தைத் திறந்து, மராமத்துப் பார்த்து, சுத்தம் செய்து, அப்பர் சிலைக்கு சூடம், சாம்பிராணி காட்டுவார்கள். வெற்றிலை, பாக்கு, மூன்று பாளையங்கோட்டன்பழம் வைத்துக் கும்பிட்டுப் போவார்கள்.

மற்ற நாட்களில் வவ்வால், பெருச்சாளி வாழும். பூனை, குட்டி போட்டுப் பெருகும். பாம்பினங்கள் உண்டு. மடத்தின் பின்புறத் தோப்புக்கு வேலியும் காவலும் கிடையாது. வாசல் பக்கம் ஆடுகள் வெயிலுக்கு ஒதுங்கிப் புழுக்கை போடும். நாய்கள் படுப்பதுண்டு. சுற்றுச் சுவரோரம் நின்ற வேப்ப மரம் ஏறி உள்ளே குதித்துச் சிறுவர் ஒளிந்து விளையாடுவது உண்டு. திருநாவுக்கரசரே ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கியவர்தான்.

பேச்சியம்மை ஒருமுறை சொன்னாள், “வெளி வாசல் சாவி கொடுத்தா, அடித்து வாரி, குப்பை செத்தை மாற்றி, செடி கொடிகள் வெட்டித் துப்புரவாக்கித் தினமும் வாசல் தெளித்துக் கோலம் போட்டுவைக்கிறேன்” என. பெரிய தம்புரான் உத்தரவு வேண்டும் எனச் சொல்லிவிட்டனர். என்றாலும், வாசல் கூட்டித் தெளிக்க பேச்சியம்மை மறப்பது இல்லை.

வாசல் தெளிக்க, கோலம் போட, சாயரட்சைக்கு மாடக்குழியில் விளக்கேற்றிவைக்க, வெள்ளி, செவ்வாய்களில் பசுஞ்சாணம் இட்டு மெழுக, அவளுக்கும் வீடு ஒன்று இருந்தது முன்பு. பெருமாள் கோயில் தெருவில் வீடும், நடுப்பத்தில் 18 மரக்கால் விதைப்பாடும், வீட்டின் பின்புறம் கிடந்த காலி மனையில் நான்கு தென்னம்பிள்ளைகளும்.

மதுசூதனன் என்று திருத்தமாகவும் மசூனன் என வழக்கிலும் விளிபட்ட மகனுக்கு மூன்று வயது இருக்கையில், பேச்சியம்மையின் கணவன் காணாமல் போனான். ஓடிப் போனானா, எவரும் கடத்திப் போயினரா, உளனா, இலனா என எவரும் கண்டு சொன்னதும் இல்லை, கூட்டிக் கொண்டுவிடவும் இல்லை. உடல் கிட்டாதவரை மரணம் யாண்டு ஊர்ஜிதமாகும்? இன்றும் பேச்சியம்மைக்கு மஞ்சள் கயிற்றில் ஊசலாடும் தாலியும், நெற்றியில் மஞ்சள், குங்குமமும் மவுசாக இருந்தன.

ஒற்றைத் தனி மனுஷி. காரும் பாசனமும் பயிரிட்டு, வெள்ளப் பெருக்கும் வறட்சியும் எதிர்கொண்டு, நோயும், எலி வெட்டும், களையும், காற்றடியும் தாங்கி, 18 மரக்கால் விதைப்பாட்டில் நடுக் கடலில் துடுப்பின்றி, பாய்மரமும் இன்றிப் படகோட்டிப் போனாள்.

உள்ளூரில் சின்னப் பள்ளிக்கூடம், செலவு இல்லை. பக்கத்து ஊரில் பெரிய பள்ளிக்கூடம், இழுக்கக்கூடிய பாரம். மதுசூதனன் நன்கு படிக்கிற பையன். தகப்பன் இல்லாவிட்டால் என்ன? பருவகாலம் தரும் வருமானம் சோற்றுப்பாட்டுக்குத்தான் போதும் என்றால் என்ன? அரசு ஆணைகளின் அனுகூலங்கள் அற்றவன் என்றால் என்ன? பேச்சியம்மை மனதிடம் உற்றவள். சலிப்புற்ற நாட்களில் புலம்புவாள்... ‘சீமான் வீட்ல பொறந்திருக்க வேண்டிய பய, என் வயித்துல பொறந்து சீரழியான்.’

கணவன் கானகத்தே காரிருளில் கைவிட்டுப் போனாலும், வைராக்கியம் என்பதோர் எஃகு ஆயுதம். எனில் இரு முனையும் கூர்கொண்டது. பேச்சியம்மை நாள், கிழமை எதுவும் கொண்டாடுவதில்லை. அசைவம் உண்டு பழகியவள் எனினும் ‘அப்பிடி என்ன நாக்குக்கு நறுவிசு வேண்டிக்கெடக்கு?’ எனத் துறந்தவள். துறந்தது மாத்திரம் அல்ல, சின்னப் பயலுக்கு என இரக்கப்பட்டு அண்டை அசல், மதனி, சம்பந்தி எதைக் கொண்டுவந்தாலும் மூர்க்கமாக மறுப்பவள். சொந்தக்காரர்கள் சொல்வார்கள், “பூணூல் போட்டு, பெருமாள் திருமண்ணும் தரித்தால் மதுசூதனன் பாப்பாரப் பிள்ளை போலிருப்பான்” என்று.

கூடப் பிறப்புக்களுக்கும் சொந்தக்காரர்களுக்கும் சம்மதம் இல்லை, மதுசூதனன் மதிப்பெண்களில் முன்னுரிமை பெற்றுப் பொறியியல் படிக்கப்போனது.

வெளியூர்க் கல்வி, விடுதித் தங்கல், கல்லூரிக் கட்டணம், உபகரணங்கள், உடை என முதல் வருடச் செலவுக்கு இரண்டு கொத்துச் சங்கிலி, உள் கழுத்து அட்டியல், தாலிக் கொடி போயின. இரண்டாம் ஆண்டில் கையில் கிடந்த காப்புகள், காதின் கம்மல்கள், ஆசையாய்ச்

செல்ல மகனுக்கு செய்து போட்டு அழகு பார்த்த கழுத்துச் செயின், பொன்னரைஞாண், சாப்பிடும் வெள்ளித் தட்டு, பன்னீர்ச் செம்பு, சந்தனக் கும்பா, கொலுசு, தண்டை, சிவப்புக் கல் கடுக்கன், யானை முடிக் காப்பு போயின. மூன்றாம் ஆண்டு வயல் ஒத்தி, நான்காம் ஆண்டு விலை ஆதாரம்.

இன்று விற்றால், நாளை வாங்க மாட்டானா? பொன்னும், முத்தும், பவளமும், மணியுமாய் அடித்து உருட்டிப் போட மாட்டானா? தினமும் கொடுப்பைக் கீரையும், அகத்திக் கீரையும், முருங்கைக் கீரையும், பப்பாளிக் காயும், வாழைத்தண்டும் சாசுவதமா? 100-ம் நம்பர் நூல் புடவை இடுப்பில் நிற்காதா? மருமகளும் பேரக் குட்டிகளும் வீடு நிறைய விளையாட மாட்டார்களா? குலுக்கையில் நெல்லும், பானைகளில் உளுந்தும், பயறும், கருப்பட்டியும் நிறைந்து வழியாதா?

பம்பாய் கம்பெனி ஒன்றில் பணி ஏற்றான் மதுசூதனன். மழை பொழிந்து, நுங்கும் நுரையுமாகச் செங்காவிக் கொப்பளித்துக் குமிழியிட்டுப் பாய்ந்த ஆற்று வெள்ளம் மழை வெறித்ததும் தெளிந்து வருவதைப் போல, பேச்சியம்மை தெளிந்தாள். வீடு சற்று வெளிச்சமானது. ஆதரவான தோழிகளிடம் வாங்கிய வட்டிக் கடன்கள் தூர்ந்தன.

பேச்சியம்மைக்குச் சில கனவுகள் இருந்தன. ஓடிப்போன கணவன் திரும்பி வந்து புதுக் குடித்தனம் நடத்துவான் என்பது அவற்றில் ஒன்றல்ல. முக லட்சணமுள்ள, நாலைந்து பெற்றுப் போடுகிற இடுப்புத் திறனுள்ள மருமகள் வாய்க்க வேண்டும். பேர் துலங்க, பெருமாள் கோயிலுக்குக் கணிசமாகக் காரியமாய் ஏதும் திருப்பணி செய்ய வேண்டும்.

மேலும், ஓர் ஆண்டில் மதுசூதனன் அமெரிக்க நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்து கலிஃபோர்னியா போனான். பேச்சியம்மை பெருமையாகக் கலிபோனி என்றாள். வெளிநாடு புறப்படும்போது கடைசியாக அவனைப் பார்த்தது.

முதல் ஆறு ஆண்டுகள் விடுப்பு இல்லை, வேலை நெருக்கடி எனக் கடிதங்கள் வந்தன. காத்திருந்து காய்ப்பேறிப்போன மனம். மாதா மாதம் பெரிய தெருவில் இருந்த வங்கிக்குப் பணம் வந்தது. தொடர்ந்து ஒரு கடிதமும். ஏர் மெயில் வாங்கி 10-வது படிக்கும் பாண்டுரங்கனின் ஒழிந்த நேரம் யாசித்து, பதில் எழுதிப் போடுவாள். மறு மாதக் கடிதத்துக்கான காத்திருப்பன்றி வேறு தொழில் இல்லை. மகன் அனுப்பும் பணம்... வெள்ளம்.

தீவிரமாகப் பெண் தேடலானாள் பேச்சியம்மை. எதுவானாலும் மதுசூதனன் நாட்டுக்கு வர வேண்டும். பெண் பார்த்துச் சம்மதிக்க வேண்டும். நாள் குறிக்க வேண்டும். கல்யாணம் நடத்த வேண்டும். தென்னை மரங்களில் பழுத்த மட்டைகள் கழன்றன, குருத்து ஓலைகள் விரிந்தன. பேசிவைத்த பெண் பிள்ளைகளுக்குத் திருமணம் ஆகிக் குழந்தைகள் பிறந்தன. பணம் வந்தது. கடிதம் வந்தது. மாதம் தவறாமல், தேதி தவறாது. 'என்று? என்று?' என ஓங்கிற்று பித்தம் முற்றிய தாய் மனது.

'நீ எழுது மக்கா பாண்டு... பிள்ளையார் சுழி போட்டுக்கோ. என் அன்புச் செல்லத்துக்கு. அம்மா சொகமாட்டு இருக்கேன். நீ சொகமாட்டு இருக்கியா? அனுப்புன பணம், காயிதம் எல்லாம் தவறாம வருது. பணத்தை வெச்சுக்கிட்டு நான் என்ன செய்யட்டும்? இன்னும் ரெண்டு மாசத்துக்குள்ள லீவு எடுத்துக்கிட்டு நீ வரணும். உம் மொகத்தைப் பாத்து இன்னா அன்னான்னு 10 வருஷம் ஓடிப்போச்சு. மொகமே மறந்திரும் போலிருக்கு. அம்மையை இனி நீ உசிரோடு பாக்கணும்னா, உடனே வந்து ஒரு கலியாணத்தை முடிச்சுக்கிட்டுப் போ... உடம்பைப் பாத்துக்கோ.'

10-வது படிக்கும்போது எழுத ஆரம்பித்த பாண்டுரங்கனுக்கே கல்யாணம் ஆகிக் குழந்தைகள் உள்ளன. தழுதழுத்த தாய்ப் புலம்பல் அவனைச் சங்கடப்படுத்தியது. களை இழந்த முகமும், கன்னத்து ஒடுங்கலும், குரலின் தளர்ச்சியுமாக, மேலும் கழிந்தன சில மாதங்கள்.

ஒரு நாள் காலை பத்தரை மணிவாக்கில் மேலத் தெரு சங்கரமூர்த்தி வீடு வரைக்கும் போனாள் பேச்சியம்மை. அவன் மதுசூதனன் வகுப்புத் தோழன், நெருங்கிய சேக்காளி.

"வாருங்க சித்தி! என்னத்துக்கு இந்த வெயில்லே! கூப்பிட்டு அனுப்பி இருந்தா நானே வருவன்லா?"

"ஆமா, நீ ரெண்டாக்கினே! ஆறு மாசமா நானும் சொல்லிவிடுகேன், நீயும் வந்துக்கிட்டே இருக்க. ஒரு காரியம் சொல்லத்தான் வந்தேன். உன் கூட்டாளிக்கு ஒரு காயிதம் போட்டிரு... இனி எனக்குப் பணம் அனுப்பாண்டாம். அவனையும் இங்க வராண்டாம்னு சொல்லிப் போடு!" சொல்லும்போது பேச்சியம்மையின் குரல் கம்மி, உடைந்து, கரகரத்து, கண்கள் சிந்தி...

"பொறுங்க சித்தி... நான் கண்டிசனா எழுதுறேன்...'

"ஆமாமா... ரெண்டு பேரும் கூட்டுக் களவாணிய... மாப்பிளை

போனான், 28 வருசம் ஆச்சு. இருக்கானா, செத்தானாத் தெரியாது. மகன் போனான், இப்பம் 10 வருசமாச்சு. இப்பம் பிள்ளை எனக்கு இருந்தும் செத்தவன்தான்.”

கண்டாங்கியில் கண்களைத் துடைத்து மூக்கையும் சிந்தி நடந்த பேச்சியம்மை நேராக வங்கிக்குப் போனாள். பார்த்துப் பழகிய முகம். மேலாளர் அவளைக் காக்கவைப்பதில்லை.

“வாங்கம்மா! பணம் எடுக்கணுமா?”

“இல்ல தம்பி! எனக்கொரு காரியம் செய்து தரணும்!”

“என்ன? ஏதாம் லோன் வேணுமா?”

“அது ஒண்ணுதான் கொறச்ச எனக்கு... மாசா மாசம் என் மகன் அனுப்பப்பட்ட பணம் இனி எனக்கு வேண்டாம். இனிமேல் வந்தா, அதைத் திருப்பி அனுப்பணும்.”

“எதுக்கும்மா? உங்களுக்குச் செலவு இல்லேன்னா, அதுபாட்லே ஒரு ஓரமாகக் கெடக்கட்டும். எஃப்டிக்கு மாத்திவிட்டிர்றேன்... வட்டியாவது வரும்.”

“வட்டியை வாங்கி நான் என்ன செய்யட்டு? எங்கின ஒப்புப் போடணும்னு சொல்லு. எனக்கு அந்தப் பணம் வேண்டாம்.”

“யோசிச்சுச் செய்யலாம்... சொந்தக்காரங்க யாரையாம் கூட்டீட்டு வாங்க. அவாளையும் கலந்துக்கிடுவோம்.”

“எனக்கு ஒருத்தன்ட்டயும் கேக்காண்டாம். எனக்கு அவன் பணம் வேண்டாம். உங்களால முடியாதுன்னா சொல்லீருங்க.”

“என்ன செய்வீங்கம்மா? மேலே போய் புகார் கொடுப்பீங்களா?”

“அதெல்லாம் போ மாட்டேன். நாளைக்கு நீ பேங்கு தொறக்க வரச்சிலே, எம் பொணம் வாசல்லே கெடக்கும். செத்துப்போனவ கணக்கிலே பணம் வரவுவைக்க முடியாதுல்லா?”

கிளை மேலாளர் சற்று ஆடிப்போய்விட்டார். எவ்வளவு பெரிய சட்ட நுணுக்கச் சிக்கல்கள்? கிளை விடுமுறைவிட வேண்டியது வருமோ? முன்னுதாரணங்கள் உண்டா? உதவியாளரைக் கூப்பிட்டு, விண்ணப்பம் அடிக்கச் சொல்லி, பேச்சியம்மை கையொப்பம் வாங்கி... “இனி உங்க கணக்குக்கு வரப்பட்ட பணம் ரிடர்ன் ஆயிரும்மா... நிம்மதியாப் போங்க.”

தொடர்ந்து கடிதங்கள் வந்தன சில காலம். படித்தும் பாராமல் கிழித்துப்போட்டாள். பாண்டுரங்கனுக்கும் வேலை இல்லாமல் ஆகியது. சங்கரமூர்த்தி வலிய வந்து செய்ய முயன்ற உதவிகளை பேச்சியம்மை காட்டமாக மறுத்தாள். காலம் ஒவ்வொன்றாக விற்றுத் தின்றது.

எவர் எது கொடுத்தாலும் வாங்குவதில்லை. எவர் வீட்டுச் சேவகத்துக்கும் போவதில்லை. நல்லது கெட்டது இல்லை. முடிகிறபோது கோயிலைப் பெருக்குவாள். நந்தவனத்துக்குத் தண்ணீர் சுமப்பாள். மந்திரம் போல் அவள் உதடுகள் சில சமயம் முணுமுணுக்கும் ‘தந்தை போயினன், தாதன் போயினன், தனயனும் போயினன்’. பூப்பறித்துக் கொடுப்பாள். மடப்பள்ளிப் பாத்திரங்கள் தேய்த்துக் கொடுப்பாள். எண்ணெய்ப் பிசுக்கேறிய பிராகாரச் சிலைகளைத் துடைப்பாள். விளக்குகளுக்குத் திரி திரித்துப் போடுவாள். எண்ணெய் ஊற்றுவாள்.

ஆண்டாள், வட பத்ர சாயிக்கு சூடிக் கொடுத்த சுடர்க் கொடி ஆம் எனில், பேச்சியம்மை மதுசூதனப் பெருமாளுக்குப் பெருக்கியும் கூட்டியும் விளக்கியும் துடைத்தும் கொடுத்த கிழக் கொடி.

பெருமாள் கோயில் பட்டத்திரி ஒரு நாள் கேட்டார். “எல்லாம் வித்துத் தீந்த பிறகு என்ன செய்வே பேச்சியம்மா?”

“மத்தியானம் நைவேத்தியம் ஆனதும் நீரு ஒரு கை ததியோன்னமோ, புளியோதரையோ தாரேருல்லா, அது போதும். இந்த உசிரை வெச்சுக்கிட்டு யாருக்கு என்ன பிரயோசனம்?”

வீட்டின் மேல் கடன் வாங்கி, தின்று முடிந்தது. முன் சொன்ன ஆஸ்திகளுடன் பேச்சியம்மை அப்பர் மடத்துப் படிப்புரைக்குக் குடி பெயர்ந்தாள். யாரும் எதுவும் கேட்கத் துணியவில்லை.

அதிகாலையில் துவைத்துக் குளித்துக் கோயிலுக்குப் போனால், உச்சைக்காலம் கழிந்து நடையடைக்கும் வரை அவளுக்கு வேலைகள் இருந்தன. நான்கு மணிக்கு நடை திறந்தால், இரவு எட்டு மணி வரைக்கும். வேலை இல்லாப் பொழுதுகளில் சக்கரத்தாழ்வான் சந்நிதித் தூணோரம் சாய்ந்திருப்பாள். ஊர்க் கதை பேசுவது இல்லை, கேட்பதும் இல்லை காண். காப்பி, தேநீர் குடிப்பதில்லை. கிணற்றுத் தண்ணீருக்குப் பஞ்சமும் இல்லை. இரண்டு வேளைகள் பெருமாள் படி அளந்தார்.

பட்டர் ஒரு நாள் யாரிடமோ சொல்லியவாறிருந்தார்... “இத்தனைக்கும் அந்தப் பய வந்து எட்டிப்பாக்கல. புருசன் ஓடிப் போயி, பச்சப்புள்ளைய வெச்சுக்கிட்டு என்ன பாடுபட்டிருப்பா? 21 வயசுப்

பொம்மனாட்டிய ஊரு சின்னப் பாடா படுத்தி இருக்கும்? எல்லாம் பெருமாள் பாத்துக்கிட்டிருக்கார்.”

ஆம். பெருமாள் பார்த்துக்கொண்டு இருந்தார், ஸ்தூலமாயும் சூட்சுமமாயும்.

“நாளை செத்துப்போனா, பேச்சியம்மைக்கு யார் கொள்ளி போடுவா?”

கேட்டுக்கொண்டே வந்த பேச்சியம்மை சொன்னாள்… “பெருமாள் போடுவார்… அவர் சார்பா நீரு போடும்.”

கச்சான் சற்று வலுத்து அடித்தது. அடைமழையுடன் காற்று கலகலத்துப் பேசியது.

நனைந்துவிடாமல், சுவரும் திண்டும் கூடும் இடத்தில் குறுகி உட்கார்ந்து, வலுக்கும் மழையை ஊடுருவிப் பார்த்தவாறு இருந்தாள் பேச்சியம்மை!

**-ஆனந்த விகடன், 16.9.2009**

# 8

## நீலவேணி டீச்சர்

சமையல் அம்மாதான் என்றாலும் கூடமாடச் செய்யாமல் தீராது. ஐந்து மணிக்கு அலாரம் வைத்து எழுந்தாலும் குளித்து, உடுத்தி, ஒப்பனைகள் செய்து, இரண்டு தோசையோ, மூன்று இட்லியோ பிட்டுப்போட்டு, கைப்பைக்குள் மதிய உணவுப் பாத்திரம் நுழைத்து, அப்பாவைச் சத்தம் காட்டினால், அவர் சாரத்தை மடித்துக்கட்டி, வண்டியை இறக்கித் தெருவில் நிறுத்தி, ஸ்டாண்ட் போட்டு, ஸ்டார்ட் செய்வார். பின்னால் ஏறி அமர்ந்து ஏழே காலுக்கு சிங்கநல்லூர் கரும்புக் கடை நிறுத்தத்தில் நின்றால், சுல்தான்பேட்டை பேருந்து கிடைக்கும். 67 நெருங்கும் அப்பாவுக்கும் முன்போல் முடிவது இல்லை. அவரது டி.வி.எஸ். 50-க்கும் முதுமைதான். சின்ன வண்டி ஒன்று வாங்கி, சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் நிறுத்திவிட்டு நெடிய வழி போகலாம். காலையிலும் மாலையிலும் அப்பாவை அலையவைக்க வேண்டியது இல்லை.

ஏது காரணம் பற்றியோ, மாதத்தில் இரண்டு மூன்று நாட்கள் பேருந்து தவறிவிடும். சூலூர் போய் இறங்கி, வண்டி மாறி, பாடசாலை போவதற்குள் பெரும்பாலும் முதல் மணி அடித்துவிடும். தெரிந்தே முகப்பில் காத்து நிற்பார் தலைமை ஆசிரியர், புழுப்போல் பாவித்துப்

பார்த்துக்கொண்டு. முன்பெல்லாம் தாமதங்களைப் பொருட்படுத்தாமல்தான் இருந்தார். ஒருநாள் முறுக்கிக்கொண்டாயிற்று.

எல்லோருக்கும் ஒரு நினைப்பு. 39 வயதிலும் திருமணமாகவில்லை. பாலுறவுக்குக் கொதித்துக்கொண்டுகிடப்பாள் என. கனிந்த ரஸ்தாளிப் பழம்போல தொடப் பொறுக்காமல் கையோடு அடர்ந்து வந்துவிடும் என்று. அவரது மனைவியும் சில ஆண்டுகள் செஞ்சேரிமலையில் உடன் பணிபுரிந்தவர்தான். மிகக் கனிவான டீச்சர். தலைமை ஆசிரியரிடம் கேட்டதுதான் தப்பாகிப்போயிற்று. ‘ஏன் சார்? கமலம் டீச்சரை அவங்க பள்ளித் தலைமை ஆசிரியர் கூப்பிட்டா விடுவீங்களா?’ என்று.

பொதுவாகவே, தமிழாசிரியை என்றால் யாவர்க்கும் இளப்பம்தான். மாணவர்தாம், ‘அன்னா தமிள் போகுது’ என்றால், உடன் பணிபுரிபவரும், ‘என்னா, தமிள் இன்னைக்கு விடுப்பா?’ என்கிறார்கள்.

தமிழ், ஆண் பாலா, பெண் பாலா, பலவின் பாலா? இல்லை, பெண் கருப் பறித்தெடுக்கும் கள்ளிப் பாலா? எல்லாக் கள்ள கனவான்களுக்கும்தான் ஆளுயுர ஃப்ளெக்ஸ் போர்டு வைத்து கன்னித் தமிழே, அன்னைத் தமிழே, முத்தமிழே, சங்கத் தமிழே என அவமானம் செய்கிறார்கள்.

எட்டாவது பயிலும் பெண், சக மாணவன் எழுதிய காதல் கடிதத்தைக் கொண்டுவந்து நீட்டினாள் ஒரு நாள். பயிற்சிப் புத்தகத்தில் கிழிக்கப்பட்ட அரைத் துண்டுக் காகிதத்தில், ‘வன்சளா நான் உண்னைக் கதளிக்கிறேன்’ எனச் செம்மொழி வன்புன்னகை காட்டிற்று. கூப்பிட்டு இரண்டு அடி போட்டாள். காதலித்ததற்காக அல்ல. பையைச் சோதித்துப்பார்த்ததில் வழவழப்புக் காகிதங்களில் வண்ணங்களில் அச்சிடப்பட்ட குட்டைப் பாவாடையும் கச்சையும் மட்டும் அணிந்த வெளிநாட்டுப் படங்கள் நிறைந்த கோடம்பாக்கக் குறும் பாக்கள். அதில் ஒரு வரி, ‘உன் முத்தம் என்னுதட்டில் அக்கினித் திராவகமாக எரிந்தது.’ உதட்டையே அரித்துத் தின்னும் முத்தங்கள்போலும்!

அன்று வண்டி போய்விட்டது. 19 சி பேருந்து பிடித்து, கவிந்துகிடந்த வாதநாராயண மர நிழலில், சுல்தான்பேட்டைக்குத் திரும்பும் இடத்தில் நின்றாள் நீலவேணி.

முன் தலை வழுக்கையும் இனி எந்தக் காலத்திலும் எப்பாடு பட்டாலும் கரைக்க முடியாத மகோதரமும் அரசு ஊழியருக்கேயான கைப்பையுமாக ஒருவன் உற்றுப்பார்த்தவாறு நின்றான். கருவாட்டை பூனை பார்ப்பதுபோல, பைக்குள் கைவிட்டு ஒரு ரூபாய் நாணயமா...

இரண்டு ரூபாய் நாணயமா என விரல்களால் தடவி உணர முற்படுவதைப்போல. அவள் பேருந்து வந்ததும் ஏறி அமர்ந்துகொண்டாலும், அந்த முகம் எங்கோ கண்டு அயர்த்ததுபோலத் தட்டுப்பட்டது.

முகங்கள் புதுப் பொருள் எதனையும் புலப்படுத்துவது இல்லை. அலுப்பு, ஆயாசம், ஆசை, அலப்பு எனக் குறிப்பான சில பொருட்கள் தவிர்த்து உற்சாகமான முகங்கள் இளைஞருக்கும் மாணவருக்கும் மட்டுமே வாய்க்கின்றன.

என்றாலும், சிந்தனை அவன் குறுகுறு நோக்கை ஒட்டி ஒழுகிக்கொண்டு இருந்தது. தெரிந்து பார்த்தானோ, தெரிவதற்கான நோட்டமா, இல்லை, வாழ்க்கையைத் தொலைத்துவிட்டுத் தேடுகிறானோ? எங்கென்று தேடுவான் காண்?

குப்பைக் கூளங்கள் நிறைந்த, வர்ணம் மங்கிய, அரவம் பரப்பிய, ஓட்டை உடைசல் பேருந்து. கறட்டுக் கம்புக்கு முரட்டுக் கோடரியாக ஒப்புரவுத் துறந்த சாலை. அடுத்தவன் கலத்தில் கைவிட்டு அள்ளித் தன் பக்கறை நிறைக்கும் சீலர்கள் நிறைந்த காலம்.

என்றாலும் அவன் யாவன்? தூர்த்து வாரிப் புடைத்துப் பார்த்தது மனம். முதல் பத்துப் பேருக்குள் வந்து பார்த்துவிட்டுப் போன, பிரகாசமான வாய்ப்புக்கொண்ட, சுயம்வர மண்டபத்து இளவரசுகளின் முகங்களில் ஒன்றாக இருக்கலாம். தீப சிகை உபமானப் பிரசித்த காளிதாசன் என்ன சொல்வான்?

42 என்பது தற்போதைய வரிசை எண். எத்தனை எத்தனை காரணங்கள் நிராகரிப்புக்கு?

ஐந்து பவுன் பேரத்தில் தட்டியது, மாற்றல் கிடைக்காது என வழுகியது, நிறக் குறைவு என நிராகரிப்பானது, மூங்கில் கழி போல் என்றும், முன் பல் தூக்கல் என்றும், வக்கை நாடி என்றும், ஏறு நெற்றி என்றும், கொக்குக் கழுத்து என்றும், கூனல் முதுகு என்றும், மூல நட்சத்திரம் என்றும், என்ன ‘உம்’ கொட்டுகிறீர்கள்? நாற்பத்து இரண்டையுமா சொல்லவியலும்?

கண்ணாடி பார்த்து நரை மயிர் பறிக்கும் பருவம். இன்னும் ஓராண்டு போனால், தெரிவை கடந்த இறுதிப் பருவம், பேரிளம் பெண். நாற்பதுக்கு மேல் நாடி ஒடுங்குவது வரை. ஒப்பனைகள் சில காலம் முகத்தில் பொய் எழுதும். பின்பு ஒப்பனைகளும் சண்டையில் தோற்றதாயின் இளிப்புக் காட்டும். காசுடையவர் காதின் பின்பக்கம்,

நாடியின் கீழ்ப் பக்கம் கீறித் தோலிழுத்துக் கட்டி சுருக்கங்கள், தொய்வுகள் அகற்றி முகத்தை விறைப்பாக்கலாம். மத்தளத்துக்கு வார் பிடிப்பதைப்போல, தொய்ந்து தளர்ந்த தனங்களை எடுத்துக் கட்டலாம். அளகம் கறுத்து மினுங்க சாயம் தோய்க்கலாம். வாரந்தோறும் எண்ணெய் தேய்க்கும்போது தோலும் சடைத்துக்கொள்கிறது.

ஏன் இப்படி யோசனை செம்போத்துப்போலப் பாய்கிறது, கதிக்கத் தாழ்ந்து?

தூங்கிவிட்டாள் என்றெண்ணி அப்பா, அம்மாவிடம் கவன்றுகொண்டு இருந்தார்.

“எல்லாம் சரியா இருக்கு... பொருத்தமும் இருக்கு! பையன் தரமாட்டும் இருக்கான். நல்ல ஆளுகள். ஆனா, ஒரு காரியந்தான் யோசிக்கணும். பையனுக்கு ரெண்டாங் கெட்டு.”

“அது எப்படி?” என்றாள் அம்மா.

39 முடிந்து 40 நடந்துகொண்டு இருப்பவளுக்கு, ரிஷ்ய சிருங்கர் போலப் பெண் வாசம் முகராத ஆண் மகன் கிடைப்பான் என எதிர்பார்க்கிறாள் போலும்!

எல்லாம் கூடி வந்தது. வெற்றிலை கைமாற நாள் குறித்தார்கள். குறித்த பின் மாமியாராக வரும் பேறுடைத்தவள் மாரடைத்து இறந்துபோனாள். ‘அக்கியானியம்’ வந்துவிட்டது மாப்பிள்ளை வீட்டாருக்கு.

36-வதாக வந்தவன் பார்த்துப்போன மறுநாள் குறுஞ்செய்தி அனுப்பினான் - ஆடையற்ற பால் தருவாளா என்று. அம்மாவிடம் குடித்தே இருக்க மாட்டான்போலும்.

பெற்றோர் பெரிதாகக் கவல்வதாயும் இல்லை. தீபாவளி வந்தது, திருக்கார்த்திகை வந்தது, பொங்கல் வந்தது, சித்திரை பிறந்தது, கோகுலாஷ்டமி, திருவாதிரை, தைப்பூசம், சிவராத்திரி, வைகாசி விசாகம், சூரன்பாடு எல்லாம் வந்தன வந்தன, வந்தனம் தந்தன தந்தன...

23-ம் வயதில் பி.எட்., படிக்கும்போது ஒருவன் கேட்டான், ‘ஓடிப் போய்ப் பதிவுத் திருமணம் செய்துகொள்ளலாமா?’ தற்செயலாக சக மாணவி சொன்னாள், ‘அவன் ஏற்கெனவே மூன்று முறை ஓடிப்போனவன்’ என.

கூடப் படித்தவள் மகள் சடங்குக்கு வந்து சொல்லிப் போனாள். பக்கத்துத் தெரு, எங்ஙனம் ஒழிந்து மாறுவது? அந்தரங்கக் காட்டில் வழி

தவறி நடந்ததில் பேருந்து நின்றது, பள்ளியின் வாசலில்.

மறுநாள் காலையில் அம்மா கேட்டாள், “டப்பாவுக்கு கொழுக்கட்டை வைக்கவா, தயிர்சாதம் கொண்டுபோறயா?”

தயிர் சாதம் வைக்கச் சொன்னால், “தொட்டுக்கிட நெல்லிக்காயா, நார்த்தங்காயா?” என்பாள்.

எல்லோருக்கும் காலம் போய்க்கொண்டு இருந்தது. எல்லோரும் காலம் போக்கிக்கொண்டு இருந்தனர். அல்லது காலம் என்பதுவே ஓர் கற்பனையோ? நாகணவாய்ப் புள்கள் இரண்டு சுற்றுச் சுவரில் நடந்துகொண்டு இருந்தன. நாகணவாய்ப் புள் என்றதும் மகேந்திரவர்மப் பல்லவன் காலத்துக்குத் தாவ வேண்டும் என்றில்லை. நம்மூர் மைனாக்கள்தான்.

நெருக்கமான நட்பெனப் பழகினார் ஆங்கிலம் பயிற்றிய தங்கசாமி. கைமாற்றுக் கேட்பார், ஊறுகாயில் பங்கு கேட்பார், சொந்தச் சங்கடங்கள் சொல்வார், ஆலோசனைகள் கேட்பார். பண்டிகை நாளொன்றின் மறு தினம் பலர் விடுப்பு எடுத்து, ஆசிரியர் அறையில் ஆட் கூட்டம் இல்லாதபோது, தனித்து இருக்கையில் தன்னின்பம் துய்த்தல் பயிற்ற முனைந்தார், சாதுர்யமாக. ஒழிந்தால் செய்துகாட்டுவார்போல. தோழி ஒருத்தி அடிக்கடி சொல்வதுண்டு, பர புருடர் யாவர்க்குமே மறைவான நிகழ்நிரல் உண்டென. ஆடை கழற்றினால் யாவும் நிர்வாணம் என்பதுபோல, ஆண் மனத் தோலைச் சுரண்டினால், அரிப்பெடுக்கும் சேனைக் கிழங்கின் சிவப்புத் தெரிகிறது. புளிவிட்டு அவித்தாலும் தணியாத அரிப்பு, ஊரல், நாக்குத் தடிப்பு.

புரண்டு புரண்டு படுத்தும் தூக்கம்கூட மறுத்தது. பயணத்தின் சாலைத் தூசி. வெயிலின் வியர்வைக் கசகசப்பு. உடல் நாறியது. சற்றே சோம்பல் தவிர்த்திருந்தால், குளித்திருக்கலாம். எதைப் புதுக்கி எவர்க்குக் கொலுவிருக்க? அறிகுறிகள் சாற்றின, ஆண்டுகள் ஒன்றிரண்டில் ஈஸ்ட்ரோஜன் அரணும் அழிந்துவிடும் என.

கனவுகளிலும், திருத்தப்பட வேண்டிய கட்டுரை நோட்டுக்களே வந்தன, கட்டுக்கட்டாக. அங்ஙனம் கனவு வந்தால் பலன் என்ன என்று ஃப்ராய்டு கூறிச் சென்றாரா எனத் தெரியவில்லை.

ஒழிந்த மாலையில் வாசற்படியில் உட்கார்ந்து வழமை பேசிக்கொண்டு இருந்தபோது, பக்கத்து வீட்டு மார்வாரி சேட்டு அம்மா சொன்னாள். ‘தான் தான் மே லிக்கா ஹுவா ஹை, கானே வாலேக்கா நாம்’ என்று.

உண்ணப் போகிறவனின் பெயர் ஒவ்வொரு தானிய மணியிலும் எழுதப்பட்டு இருக்குமாம். கேள்வியொன்று எங்கு பொறிக்கப்பட்டு இருக்கும்? கிளைக் கேள்வி ஒன்று கூடவே எழுந்தது - பெண் என்பவள் உண்ணப்படும் பொருளா என. ஆனால், அந்தத் தாய்க்கு அதெல்லாம் புரியாது.

அன்று பள்ளி விடுமுறை. எல்லா அர்த்தங்களும் இழந்துபோன நினைவு நாட்களில் ஒன்று. காலையில் எழுந்ததும் சிற்றுண்டி அருந்தி அப்பா புறப்பட்டாயிற்று. கையில் புரோகிதர்கள் வைத்திருப்பதைப் போன்றதொரு ரெக்சின் பை. சாதகக் குறிப்புகள் குப்பைபோலக் கிடந்தன அவற்றுள். சிலருக்கு ஏற்கெனவே திருமணம் ஆகி இருக்கலாம். கடவுள் பொறுக்கட்டும் - சிலர் செத்துக்கூடப் போயிருக்கலாம். எண்ணற்ற சாதகக் குறிப்புக்களை ஒன்றுக்கு மூன்று சோதிடர்கள் சோதிக்க உடன் இருந்து, சோதிடமும் செவிப் பழகி, அவரே முக்காலே அரைக்கால் சோதிடராகவும் ஆகிப்போனார்.

நீலவேணிக்கு, நீலமேக சியாமள வண்ணனான 43-வது வருகைக்குக் காத்திருப்பு. பெண் பார்க்கும் படலத்துக்கு எனச் செய்து, மீந்த பலகாரங்கள் தின்னக் கூசுகிறது. நீத்தாருக்குப் படைத்த பின்பு அது பிரசாதம் எனில், இந்தப் படையல் மிச்சத்துக்கு என்ன பெயர்? 42 முறை எச்சில் தட்டுக்கள், காபி டம்ளர்கள்... வாய்த்திருந்தால் இந்த 42-ல் ஒன்றின் நிரந்தரமாக வாழ்நாள் பூரா எச்சில் தின்றிருக்க வேண்டும். விருந்தென வேண்டாவாம் மனைவிக்குக் கணவனின் எச்சில் புசித்து வாழின்.

தின்ற தட்டுக்களே எச்சில் எனில், திரும்பத் திரும்பத் துய்க்க என மொய்த்த கண்ணெச்சில் பெண்ணா? மொய்த்து, நிராகரித்து, சலித்து, ஊசி நூலிழுத்து, புளித்து, நுரைத்துப் புழு தெறித்து விழும் மெய்யா எனப் புலம்பும் பட்டினத்துப்பிள்ளை இதை யோசித்துப்பார்த்திருப்பாரோ?

நேற்றுப் புலர் காலையில் வெளிநாட்டுத் தொலைபேசி மணி அடித்தது. ஓராண்டுக்குப் பிறகு, போராடி விடுமுறை வாங்கி, பயணச் சீட்டுக்கள் சமாளித்து, அண்ணன் குடும்பம் டெக்சாஸில் இருந்து, அடுத்த வாரம் ஊருக்கு வருகிறது. பேசப்படாத உண்மைக் காரணம், சென்ற ஆண்டில் தனது 52 வயதில் புற்றுநோயில் செத்த மாமியார் திவசம் என்பது யாருக்கும் தெரியாது.

அண்ணனுக்குப் பிடிக்கும் என அதிரச மாவு திரட்ட, இனிப்பு மனகாவலம் பிழிய, பொரி உருண்டை பிடிக்க யத்தனங்கள் கூட்டுவாள் அம்மா. எள் என்பதற்குள் எண்ணெயும் பிண்ணாக்குமாக நிற்பார்

அப்பா. வீடெங்கும் எண்ணெயில் முறுகும். சர்க்கரைப் பாகு, பச்சரிசி மாவு எனக் கலந்து புகை மண்டும். வேலைக்காரன் வைத்து வீடு துப்புரவு ஆகிக்கொண்டு இருந்தது. அவள் படுக்கும் அறையை ஒழித்துக்கொடுக்க வேண்டும் அண்ணனுக்கும் மதினிக்கும். அவனுக்கு இரவுறங்க மனைவியின் ஷாம்பு வாசம் வீசும், நக்கீரன் மறுப்புச் சொல்லத் தேவையற்ற, கூந்தல் நறும்புனல் தெளித்த மேனி வேண்டும்.

குழந்தைகள் தனியறையில் படுத்துப் பழகியவை. அம்மா- அப்பா அறையை ஒழித்து, துப்புரவு ஆக்கி, தூசிகள் தட்டி, விரிப்புகள், உறைகள் மாற்றி, கொசு வலைகள் பொருத்தி, நறும்புகை காட்டித் தயாராக்கிக்கொண்டு இருந்தனர்.

கூடத்தில் பாய் விரித்து அப்பா, அம்மா, நீலவேணி எனும் வரிசைக் கிரமத்தில், ஈழப் போர்க்களத்தில் அடுக்கிய பிணங்கள்போல, தலையோடு பொதிந்து மூடி உறங்க என்பது நியதி.

அவள் மணமாகிப் போகாமல் இருப்பது அண்ணனுக்கு ஆறுதல் பெருமூச்சு. பெற்றோர் தனிமை, முதியோர் இல்லம், உடல்நலக் குறைவு, அகாலத் தொலைபேசி அழைப்பு என நேரத்தையும் நிம்மதியையும் கொலைக்குக் கொடுக்க வேண்டாம்.

நீலவேணியைவிட நான்கு வயது இளையவள் மதினி. சுற்றி வளைத்து, மிகைச் சொற்கள் தவிர்த்துக் கேட்க முனைந்ததை விளம்ப இவண் விசனமுண்டு. எனினும் விளம்பாமல் கதையும் முடியாது.

மிகக் கரிசனத்துடன் நீலவேணியை முன்னால் முதுகு காட்டி உட்காரவைத்து, சீப்பெடுத்துத் தலைவாரிச் சிக்கெடுக்கும் பாவனையில் பேச்சுக் கொடுத்தாள்.

“தலைமுடி நீளம் இல்லாவிட்டாலும் நல்ல அடர்த்தி உங்களுக்கு. பாப் கட் பண்ணிவிட்டா, உங்க முக அமைப்புக்குப் பிரமாதமா இருக்கும்.”

“ஆமா, அது ஒண்ணுதான் எனக்குக் கொறச்சல்?”

“ஏன்... உங்களுக்கென்ன? வயசு தோணிக்காத உடம்பு. பெரம்பு மாதிரி இருக்கு. பின்னே, நீங்க அக்கறையா உடம்பைப் பராமரிக்கிறதில்லே!”

“இனி கெவுனிச்சுக்கிடுகேன்.”

“எங்க அப்பாவும் அப்பிடித்தான். அம்மை போன பிறகும் வாக்கிங், டயட் எல்லாம் செய்து உடம்பை நல்லாவெச்சிருக்கா... யாரும் 50

வயசுக்குத்தான் மதிப்பா.”

“.... .... ...”

“ஒரு வருசமாட்டு மாசம் 18 ஆயிரம் பென்சன் வருது. எண்ணாலும் சும்மா இருப்பாளா? தினசரி ரெண்டு மட்டம் தென்னந் தோப்பைச் சுத்திப் பாத்துத் தீரும்... காலையிலே குளிச்சு கோயிலுக்குப் போயித் தீரும்.”

“சாப்பாட்டுக்கு என்ன செய்யா?”

“சோழபுரத்துப் பெரியம்மைதான் பொங்கிக் குடுக்கா. அவுகளுக்கும் முடிய மாட்டங்குன்னு பொலம்புகா. எத்தனை நாளைக்கு நிப்பாளோ?”

“நீங்க ஒத்தைக்கு ஒரு மகதானே! கூடக் கூட்டீட்டுப் போங்க.”

“நானா மாட்டங்கேன்? வரணும்லா?”

“பின்னே, ரெண்டாந் தாரமா யாரையும் பாத்துக் கெட்டி வைக்கலாம்லா? குறை காலத்துக்கும் தனியாட்டா இருப்பா?”

“அதைத்தான் சொல்ல வந்தேன். மதினி தப்பாட்டு எடுத்துக்கிட மாட்டேள்னா, ஒரு காரியம் கேக்கட்டா?”

“என்னா?”

“அப்பாவுக்கு விருப்பம் இருக்கு... உங்களுக்கும் சம்மதம்னா சிம்பிளா முடிச்சிரலாம்...”

நீலவேணிக்குச் சிரிப்பு வந்தது. கூடவே, கண்கள் சிவந்து பொங்கின.

“என்ன ஒண்ணுமே சொல்ல மாட்டங்கியோ?”

“அண்ணனுக்குத் தெரியுமா?”

“பேசீட்டேன்...”

“அவனுக்குச் சம்மதமா?” எனக் கேட்க, குரல் கம்மியது.

மதினி விரல்கள், சீவி முடித்துக் கூந்தலைப் பின்னல் போடுவதில் இருந்தன. சற்றுப் பொறுத்துச் சொன்னாள். “அவங்க சம்மதம் இல்லாட்டா கேப்பனா?”

காலமெனும் கொதிக்கும் எண்ணெய் உருளியில் முறுகிச் சிவக்கின்றன உறவுகள்.

மழையில் நனைந்த மத்தளம் கொட்ட, கீறி உடைந்த வரிசங்கம் நின்றூத, அண்ணன் மாமனார் வந்து கைத்தலம் பற்றக் கனாக் காணும் நேரம்தான்.

43.... நல்ல வரிசை எண்ணா?

**-ஆனந்த விகடன், 10.3.2010**

# 9

## கான் சாகிப்

கான் எனத் துணைப் பெயர்கொண்ட சில மேதைகள் நினைவில் நின்றனர். எல்லை காந்தி என்று அழைக்கப்பட்ட கான் அப்துல் கஃபார் கான், எப்போது கேட்டாலும் கண்கள் நிறைந்து சொட்ட ஷெனாய் வாசித்த உஸ்தாத் பிஸ்மில்லா கான், 'பாபா ஹாஜி அலி' எனத் தொடங்கிப் பரவசத்தில் ஆடச் செய்யும் பாகிஸ்தானி சூஃபி பாடகர் நுஸ்ரத் ஃபதே அலிகான், இந்திய இசை மேதைகள் அலி அக்பர் கான், ரஷீத் கான், அம்ஜத் அலி கான், யாவர்க்கும் மேலான உஸ்தாத் படேகுலாம் அலிகான்.

உங்கள் விருப்பமாக, சினிமா நடிகர்கள் சஞ்சய் கான், அம்ஜத் கான், அமீர் கான், ஷாரூக் கான், சல்மான் கான் எனப் பட்டியலை நீட்டிக்கொள்ளலாம். எமக்கு எதிர்ப்பு இல்லை.

இவ்வனைத்து கான்களையும் மீறி, என் சொந்த வாழ்வில் குறுக்கிட்டு, பாதித்து, கடந்தும் போனதோர் கான் பற்றி இவண் பேசலானேன். ஈண்டு அவரது இயற்பெயரைப் பயன்படுத்தப்போவது இல்லை. இதுவோர் தன் வரலாற்றுக் குறிப்பா எனில் ஆம்... என்றும், இதுவோர் சிறுகதைப் புனைவா எனில்.... ஆம் ஆம் என்றும் அறையும் பம்பாயின் அலை கடற்காற்று.

சாதத் ஹசன் மண்டோ வாசித்த ஞாபகம் இருப்போர்க்கு இந்த வடிவம் ஆச்சர்யம் ஊட்டாது எனும் உறுதியுண்டு எனக்கு.

1972-ம் ஆண்டு நவம்பர் மாதம் தீபாவளி முடிந்த மூன்றாம் நாள், வரலாற்று முக்கியத்துவம் உள்ள நாளென்று இந்திய வரலாற்று ஆசிரியர்களால் கொளப்படவில்லை. அன்றுதான் பம்பாய் விக்டோரியா டெர்மினஸ் தொடர்வண்டி நிலையத்தில் இந்தக் கதாசிரியன் கால் குத்திய நாள்.

கவிஞர் தில்லை வேலன் எமக்கு நண்பர். சிதம்பரத்துக் கவி என்று சொல்ல வேண்டியது இல்லை. தில்லை வேலனை அறிந்திராத நீங்கள் அவர்க்கும் மூத்த தில்லை வில்லாளனை எங்கே நினைவு வைத்திருக்கப் போகிறீர்கள்? பம்பாயில் நடந்ததோர் தமிழ் நாடக விழாவின்போது, தில்லை வேலன் எனக்கு கான் சாகிபை அறிமுகம் செய்வித்தார்.

“ஜப்பானுக்கு தோல் ஏற்றுமதி செய்றாரு... உருதுல கவிதை எல்லாம் எழுதுவாரு!”

எனக்கு இரண்டாவது தகவல் கவர்ச்சியாக இருந்தது. பின்னர் தெரிந்துகொண்டேன். இந்தியாவில் இருந்து தோல் இறக்குமதி செய்கிற ஜப்பான் நிறுவனம் ஒன்றுக்கு பம்பாய் முகவர் என்றும் தீவிர உருதுக் கவிதை வாசகர், ஆனால், கவிஞர் அல்ல என்றும்.

அப்போது கான் சாகிப் கார் வைத்திருந்தார். நாடகக் காவலர் ஆர்.எஸ்.மனோகரின் ‘இலங்கேஸ்வரன்’ நாடகம் முடிந்த பிறகு காரில் புறப்பட்டோம். கான் சாகிப் சயான் ரயில் நிலையம் அருகில் ஹோட்டல் கம்ஃபர்ட்டில் மாத வாடகைக்குத் தங்கி இருந்தார். எனக்கு அங்கிருந்து தாக்குர்லிக்கு ரயில் பிடிக்கலாம். இரவு ஒன்றரை மணி முதல் அதிகாலை மூன்றரை மணி வரைக்கும் ரயில் போக்குவரத்துக்கு இடைவெளி. இது 1972-ன் நிலைமை.

எனக்குக் கட்டுப்படியாகிற வாடகைக்கு நான் வேலை பார்த்த இடத்தில் இருந்து 50 கி.மீ. வெளியே குடி இருந்தேன். தாக்குர்லியில் இறங்கி, குறுக்கு வழியாக ஒற்றையடிப் பாதையில் நடந்தால், 20 நிமிட நடை. கள்ளர் பயம் கிடையாது, காட்டு வழி ஆனாலும். காலாண்டு சீஸன் ரயில் பயணச்சீட்டும், ஏழாண்டு பழகிய கைக்கடிகாரமும், 10 ரூபாய்க்கும் குறைவான கையிருப்பும். மாதம் 210 ரூபாய் சம்பளக்காரனுக்கு அதுவே பெரிய காரியம். கண்மணி குணசேகரனின் சொல்லாட்சியை இரவல் வாங்கினால் - ‘இதுல பயப்பட என்ன கெடக்கு?’

கான் சாகிப் காரோட்டிய விதம் கவலைக்கிடமானது. தவளைபோல் காரோட்ட முடியும் என்பது அன்றுதான் எனக்குத் தெளிவானது. சயான் சர்க்கிளில், இரவு 10 மணி தொடங்கி, அதிகாலை இரண்டரை மணி வரை இயங்கிய தட்டுக்கடைகள் உண்டு. அல்லது செம்மொழியில் மொழிமாற்றம் செய்தால், 'கையேந்தி பவன்'. தாராவி, கோலிவாடா, கோவான்டி வாழ் தமிழர்கள் நடத்திய கடைகள். ஆம்லெட்-பாவ், பாவ்-புர்ஜி, வடா-பாவ், இட்லி, தோசை கிடைக்கும். எப்படியும் உருதுக் கவிஞர் பணம் தருவார் எனும் நம்பிக்கையில் சுடச்சுட இட்லி-சாம்பார்-சட்னி-ஆம்லெட் குலுக்கிக் கட்டினேன்.

நேரம் கடந்துகொண்டு இருந்தது. வி.டி. ஸ்டேஷனில் இரவு 01-35-க்குப் புறப்படும் அன்றைய கடைசி கர்ஜத் லோக்கல், 01-50-க்கு சயான் வரும். புறப்பட யத்தனித்தேன்.

"எத்தனை மணிக்குப் போய்ச் சேருவே, பாய்?" என்றார் கான் சாகிப்.

"தாக்குர்லி ஸ்டேஷனுக்கு ரெண்டு நாற்பதுக்குப் போகும். பொடி நடையாப் போனா 20 நிமிஷங்கள்."

"பேசாம என் ரூமிலே படு... காலம்பற ஸ்நான் கரோ, தஸ்தர் சலோ..."

"இல்ல பாய், போயிருவேன்."

"அரே, சலோனா சாலா... மை துஜே காண்ட் நை மாரேகா."

1972-லேயே பழைய காலத்து விடுதி. எனினும் விசாலமான, காற்றோட்டமான அறை. பத்துக்கு இருபது அடி. ஒரு பீரோ, ஒற்றைக் கட்டில், மேஜை, நாற்காலி, துணி கிடக்கும் கொடி, தண்ணீர்ப் பானை, துவைக்கும் குளிக்கும் பித்தளை வாளி, மக், நாளிதழ்கள், வாராந்தரிகள், புத்தகங்கள், சோனி, மோனோ கேசட் பிளேயர் எனக் கிடந்தது அறை. பாத்ரூம், சண்டாஸ் வெளியே. பொது.

பீரோவுக்குப் பின்னால் மறைவாக இருந்த வர்ணக் கோரைப் பாயும் தலையணையும் போர்வையும் எடுத்துப் போட்டார். பீரோவைத் திறந்து மூடிய சங்கு மார்க் லுங்கியும் வர்ணத் துண்டும் தந்தார். விரித்துப் படுத்தேன். இரா முழுக்கப் பேசிக்கொண்டு இருந்தார். அவர் பேசினால் சிரித்துச் சிரித்துக் குடலறுந்துபோகும். காலை 5 மணிக்கு, சோக்ராவைக் கூப்பிட்டு சாய் சொன்னார். அப்போதுதான் அவருக்கு கான் சாகிப் என செல்லப் பெயர் வைத்தேன்.

அப்படித்தான் தொடங்கியது. 'நஞ்சும் நா நாழியா வேணும்?'

என்பார்கள் எதிர்மறையில். ஒரு சேக்காளி, சகா, தோஸ்த், நண்பன் எனப் பாய்ந்து போயிற்று காலம். என்னைவிட நாலைந்து ஆண்டுகள் இளையவர். எனினும், எமக்குள் பேதங்கள் இல்லை. வாரம் ஒருநாள் என ஆரம்பித்து, பெரும்பாலும் தினமும் எனும் ரீதியில்.

அவர் தாய் மொழி உருது. பயஸ் அகமது பயஸ் கவிதைகளை கான் சாகிப் சொல்லிக் கேட்க வேண்டும். அல்லா மா இக்பால் அவருக்குப் பிரியமான இன்னொரு கவிஞர். உமர் கய்யாம் பெருவிருப்பு, ஆனால், அவர் பாரசீகக் கவி. அவர் போன்று மிர்தாத், காலிப், கலீல் கிப்ரான்.

எப்போதும் கேசட் பிளேயரில் மன்னாடே, கிஷோர் குமார், மொகம்மது ரஃபி, பேகம் அக்தர், சம்ஷாத் அலி பேகம், நூர்ஜஹான், சுரையா பாடல்கள் ஒலித்துக்கொண்டு இருக்கும். இடையிடையே மலபாரின் மாப்பிள்ளைப் பாட்டுகள். ‘முழுவன் கோழி பொரிச்சு வச்சு’ என்று தொடங்கும் ஒரு பாடல், இன்னும் என் உட்செவியில் ஒலிக்கும்.

அவரது அறையின் துணிக் கொடியில் நான் பயன்படுத்தும் சாரமும் துண்டும் தொங்கிக்கிடக்கும். டூத் பிரஷ்ஷும் நாக்கு வழிப்பானும் என் செலவில் வாங்கி வைத்திருந்தேன். சோப்பு, பவுடர், எண்ணெய், பற்பசை எல்லாம் பொதுக் கணக்கு.

கான் சாகிபின் அம்மா, அவருடைய அப்பாவுக்கு இரண்டாம் தாரம். ஆம்பூரிலும், ராணிப்பேட்டையிலும், சென்னையிலும் வர்த்தகம். நல்ல செல்வந்தர். எதிர்பாராத தகப்பன் மரணம். சொத்துகள் யாவும் முதல் தாரத்து மக்களுக்குப் போய்விட்டன. பி.காம்., படித்திருந்த கான் சாகிப், தோல் மண்டிக்கு வேலைக்குப் போனார். ஆட்டுத் தோல், உப்பிட்டது, பதப்படுத்தியது எனத் தொழில் கற்றுக்கொண்டார். இது முன்கதைச் சுருக்கம்.

கிட்டத்தட்ட ஹோட்டல் கம்ஃபர்ட் எனது இரண்டாவது வீடு. பின்னாளில், நான் மேலாளராகப் பணியாற்றிய நிறுவனத்தின் எம்.டி., லண்டனைத் தனது செகண்ட் ஹோம் என்பார், ஒவ்வொரு மீட்டிங்கிலும் இரு முறை. அதுபோல் அல்ல இது. எனது பிற நண்பர்கள் கேலி பேசுவார்கள் - சீக்கிரம் சுன்னத் கல்யாணம் செய்து மார்க்கத்துக்கு மாறிவிடு என்று. பாபா சாகேப் அம்பேத்கருக்கும் பெரியார் ஈ.வே.ராமசாமி நாயக்கருக்கும் அந்த எண்ணம் இருந்தது. அது பெரியார்தாசனுக்காவது நிறைவேறி இருக் கிறது.

வழக்கம்போல, மாலை ஹோட்டல் கம்ஃபர்ட் சென்று சேர்ந்தபோது, கான் சாகிப் மக்ரீப் தொழுது முடிக்கும் தறுவாயில் இருந்தார். தொழுகை

முடிந்து, என்னைப் பார்த்தபோது முகத்தில் நல்ல மலர்ச்சி இருந்தது, எப்போதும்போல. அஃதோர் வியப்பூட்டும் அனுபவம் எனக்கு. அடுத்தது, “சாய் பீயெங்கே?” என விசாரிப்பார், அத்தனை அன்பு பூசிய வார்த்தைகளில்!

நகரில் எந்த மூலை முடுக்கில் ஆனாலும் நெரிசலான, சந்தடியான, தூசு தும்பான சூழல் ஆனாலும், அங்கிருந்த முஸ்லிம் உணவு விடுதிகளின் சுவை குறித்து என்னையும் அலைக்கழித்து நடப்பார். சுக்கா ரொட்டி, டால் ஃப்ரை, வெங்காய, எலுமிச்சைத் துண்டுகளே ஆனாலும், அவற்றில் தனித்துவம் இருக்கும். கோஷ் சாப்பிடுவதானால் அவர் இந்து, கிறிஸ்துவக் கடைகளில் உண்பது இல்லை. ஹலால் செய்திருக்க மாட்டார்கள் என்று.

அவருக்கு 22 வயதிலேயே திருமணம் ஆகிவிட்டிருந்தது. ஆங்கிலம் போதிக்கும் மனைவியும் இரு மக்களும். எனக்கோ, பம்பாய்க்குப் பெண் தரத் துணியாத வெள்ளாளக் குடும்பங்களில் தப்பிக்கொண்டு இருந்தனர். எட்டு வருடங்கள் காதலித்துத் திருமணம் செய்தவர் கான் சாகிப். அதாவது 14 வயதில் இருந்து. எனினும் தான் பட்டாணிய இனம் என்றும் மனைவி லெப்பை வகுப்பு என்றும் அவருக்கு ஒரு கர்வம் இருந்தது.

ஒரு சந்தர்ப்பத்தில், வாடகைக்கு ஒரு ஃப்ளாட் பார்த்து, ஹோட்டல் கம்ஃபர்ட் அறையைக் காலி செய்யலாம் எனும் உத்தேசத்தில் வீடு தேட ஆரம்பித்தோம், மாலை நேரங்களில். சயான், கிங் சர்க்கிள், மாதுங்கா, வடாலா என. வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பெயர் கேட்டதுமே முகம் கறுத்தனர். “விடுயா, தர மாட்டானுவோ!” என்றார் சலிப்பின் உச்சத்தில். எனது நண்பர் வட்டத்திலும் பலர், கான் சாகிபுடன் இயல்பாகப் பழக மறுத்ததில், அவருக்கு வருத்தம் உண்டு. தமிழ்ச் சங்க விழா ஒன்றில் மனைவியுடன் வந்த நண்பருக்கு, கான் சாகிபை அறிமுகம் செய்து வைத்தவுடன், அந்த சீரங்கத்துப் பெண்ணின் முகம் காட்டிய மருட்சியும் ‘துலுக்கனா?’ எனும் கேள்வியும் என்னால் ஆயுளுக்கும் மறக்க முடியாதது.

அன்றிரவு நெடுநேரம் கான் சாகிப் சமாதானம் ஆகவில்லை.

பள்ளி விடுமுறைகளில் ஒரு மாதம் அவரது மனைவியும் குழந்தைகளும் பம்பாயில் வந்து தங்கிப் போவார்கள். ஒரு முறை அவர்கள் திரும்பியபோது, திருவனந்தபுரம் வழியாக ஊருக்குப் போகும் நான், துணையாகப் பயணம் செய்தேன். பம்பாயில் இருந்து ஆம்பூர் வரை 30 மணி நேரம்.

திரும்பி வந்த முதல் சந்திப்பில், கான் சாகிப் சொன்னார் காட்டமாக-

“ஓ மாகி சூத் பூஸ்த்தா ஹை... எப்பிடி உன்னோட என் குடும்பத்தை அனுப்பினேன்னு?”

“யாரு?”

“துமாரா தோஸ்த் சகாபுதீன்...”

உண்மையில் சகாபுதீன் அவருக்குத்தான் நண்பர். எனக்கு அறிமுகம், பழக்கம்.

நான் கேட்டேன். “ஆப் கியா போலே?”

“அவுர் கியா? என் நண்பன் பேர்லயும் நம்பிக்கை இருக்கு, என் பீவி மேலயும் நம்பிக்கை இருக்குன்னேன்!”

“ஃபிர் கியா, சோடோ!”

கான் சாகிப் கையில் காசிருந்தால், என் பைக்குள் என் கை போகாது. அவர் கையில் காசில்லை எனில், என் சீஸன் டிக்கெட் முதற்கொண்டு அடமானம்தான். ஜப்பான் போய் வந்தபோது எனக்கு ‘சாக்கே’ வாங்கி வந்தார். அரிசியில் செய்த மது அது. ஆரம்பத்தில் எனக்கு அதை எப்படிக் குடிக்க வேண்டும் என்று தெரியாது. சோடாவா, தண்ணீரா, லைம் கார்டியலா, ‘ஆன் த ராக்ஸ்’ஸா என. பின்பு தெளிவாயிற்று, பீர் போல அப்படியே குடிக்க வேண்டும் என்று.

அவர் அறை மூலையில், சாம்பிளுக்காக வந்த பதப்படுத்தப்பட்ட, பல வகை ஆட்டுத் தோல்கள் கிடக்கும். வெள்ளாடா, செம்மறியா, குரும்பை ஆடா, கம்பளி ஆடா என்றெல்லாம் எனக்கு பேதம் தெரியாது. பதப்படுத்தப்பட்டு, தவிட்டு கலரில் சாயம் ஏற்றப்பட்டு இருந்தாலும் அதற்கென ஒரு வாசம் உண்டு.

அந்தக் காலத்தில் அலுவலகம் போகும்போது, என் கையில் எப்போதும் ஒரு ரெக்சின் பை இருக்கும். பம்பாயில் தமிழ் பார்ப்பனப் புரோகிதர் பலரும் வைத்திருந்ததுபோல. ரெக்சினுக்கு தீட்டுக் கிடையாதாம். விளையாட்டாக கான் சாகிப் அதைத் தூக்கி விசிறுவார். அதனுள் பெரும்பாலும் ஒரு புத்தகம், ஒரு பருவ இதழ், டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ், மதியம் சாப்பிட என ஏதும் கொண்டுபோனால் அலுமினிய கன செவ்வக டப்பா.

ஒருநாள் ஹோட்டல் அறைக்குப் போனபோது, தோளில் தொங்கப்போடும் விதத்தில், 14-க்கு 10 அங்குல அளவில், தோல் பை

ஒன்று எடுத்து முன்னால் எறிந்தார்.

“சுத்தமான பக்ரி கா சம்டா! எக்ஸ்போர்ட் குவாலிட்டி. தையல் கூலி மாத்திரம் 150 கொடுத்தேன். பிக்காரி ஸாலா, இனி அந்த ரெக்சின் பையக் கடாசு!”

என் தோளுக்கு அந்தப் பை வந்து 30 ஆண்டுகளுக்கும் மேலாயிற்று. தருமமிகு சென்னையில் பையின் வலப்பக்க விலாவில் நீளமாக பிளேடு போட்டான் ஒருவன். அண்ணன் அதைத் தைத்துக் கொடுத்தார். கோவை வந்த பிறகு ஒரு முறை மராமத்து செய்தேன். என்னுடன் அந்தத் தோல்பை மராத்தியம், குஜராத், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், சோனார் பங்களா, ஆந்திரம், கர்நாடகம், கோவா, தேனிருந்து மழை பொழியும் தீந்தமிழ் நாடு, கடவுளின் சொந்த தேசம் கேரளம், பாண்டிச்சேரி எனப் பல்லாயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்திருக்கிறது. சுக்காகக் காய்ந்த முரல் கருவாடு, காஜு ஃபென்னி, சத்யஜித் ரேயின் ‘பதேர் பாஞ்சாலி’ வீடியோ கேசட் எனப் பலவும் சுமந்திருக்கிறது. கண்டக்டர் பை என நண்பர்கள் பகடி செய்திருக்கிறார்கள்.

காலம் என்பது கறங்கு, காட்டு ஓடை, மழைப் புயல், கோடைக் கானல். காலி செய்துவிட்டு சென்னை வந்தார் கான் சாகிப். நான் கோவைக்குப் பெயர்ந்தேன். தோல் மண்டிகளும் அலுவலகங்களும் தட்சண மாற நாடார் மகமைக் கட்டடங்களும் இருந்த பெரியமேடு குறுக்குச் சந்து ஒன்றில், முதல் மாடியில் அவர் அலுவலகம். ஆள் நடக்க இடம்விட்டு தோல் மூட்டைகள் அடுக்கப்பட்டு இருக்கும். ஆளுக்கு ஒரு பாய் விரித்து, தலைமாட்டின் தோல் வாசனை காற்றாட... விடிய விடியப் பேசிக்கொண்டு இருப்போம். ஈண்டு பகிர்ந்து அளிக்க இயலாத ஒரு சுவை ஊற்று அது.

எப்போதாவது மேலும் ஒரு குப்பி பீர் கேட்டால், “ஸாலா, பீவோ, பீக்கே மரோ” என்பவர் சுத்தமாகக் குடியை நிறுத்தி இருந்தார். ரோத்மான்ஸ், ஸ்டேட் எக்ஸ்பிரஸ் புகைப்பதும் இல்லை. வெள்ளிக்கிழமை ஜமாத் முடித்து, ரயில் பிடித்து ஆம்பூர் புறப்பட்டுச் சென்று, திங்கள் முற்பகலில் திரும்புவார். நீண்ட காலம் குடி இருந்த நீரிழிவின் தாக்கம் முகத்தில், உடலில், நடையில் தோன்ற ஆரம்பித்தது. இன்சுலின் போட்டுக்கொண்டு இருந்தார். எனினும், சிறுநீரகங்கள் தோற்றுக்கொண்டு இருந்தன.

பம்பாயில் இருந்தபோது ஒரு முறை சொன்னேன்.

“கான் சாகிப், ஒரு முறை கிராண்ட் ரோடு போகணும்.”

“தெனமுந்தானே வெஸ்டர்ன் ரயில்வே போய்க்கிட்டு இருக்கே?”

“அதைச் சொல்லலே நான்.”

“ஓ! ஐக்மார்னே கேலியே! கந்தா ஹை ஸாலா தும்.”

“எனக்கு அந்த இடங்களைப் பார்க்கணும். போதும், வேற ஒண்ணும் வேண்டாம்.”

“அதுக்கு தில் வேண்டாமா? ஓ, துமாரா பாஸ் கஹாங்?”

பல்லாண்டு பம்பாய் வாழ்க்கையில் கேள்விப்பட்டு இருந்தேன். ஃபால்க் லேண்ட் ரோடு, நவால்கர் லேன், பீதாம்பர் கல்லி எனச் சிவப்பு விளக்குப் பகுதிகளை. ஆந்திராக்காரிகள் சாட்டின் பாவாடையும் பாடியும் மட்டும் போட்டுக்கொண்டு, தத்தம் குடிசை வாசல்களில் நிற்பார்கள். அழைப்பு இருக்கும். ஆனால், அடாவடி இருக்காது. சயானில் இருந்து 66 பிடித்து லேமிங்டன் ரோட்டுக்குப் பயணமானோம். மாடி பஸ், முன் ஸீட்டில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தவாறு, டிக் டிக் என ஒலி எழுப்பிக்கொண்டு கண்டக்டர் வந்தார்.

“ஒனக்குத் தெரியுமாய்யா? பெஸ்ட் கண்டக்டர் ஒரு நாளைக்கு பஸ்ஸுக்கு உள்ளேயே 16 கி.மீ. நடக்கான். 1,300 பயணிகளைப் பாக்கான்.”

டெல்லி தர்பார் ஹோட்டலுக்குப் பின்புறம் நாலைந்து நான்கு மாடிக் கட்டடங்கள். டெல்லி தர்பார், நகரின் முக்கியமான உணவு விடுதி. தினமும் நாலாயிரம் கோழிகள் அறுபடுவதாகச் சொல்வார்கள்.

கான் சாகிபுக்கு ஓர் ஆளுமை உண்டு. நடக்கும் தோரணை, பார்க்கும் விதம், கண்ணாடியினுள் உருளும் பெரிய கண்கள், ‘கியா ஹை?’ என்ற அதட்டல், பார்க்கும் ஆசை எனக்குத்தான் என்றாலும், நான் கூசிக் கூசி நடந்தேன். கறுப்பு, புதுநிறம், சிவப்பு, வெளுப்பு என எல்லா நிறங்களிலும் நின்றுகொண்டு இருந்தனர். ஏற்றிக் கட்டப்பட்ட முன்னழகுகளும் தொப்பூழுக்குக் கீழே இறக்கிக் கட்டப்பட்ட பாவாடையும் அடிவயிற்றுப் பரப்பு ஆலிலைபோல் பரந்திருந்தது. தோள் தெரியும் சோளி அல்லது பாடி. கண்ணுக்கு அஞ்சனம், கன்னத்தில் செம்மினுக்கம், கொண்டையில் பூ, வாயில் மிட்டா பான், உதட்டுச் சாயம்.

‘தில்லானா தில்லானா, நீ தித்திக்கின்ற தேனா’ என்றொரு சாய்வு இடுப்பு நிலை. எனக்கு நெஞ்சில் ‘திக்திக்’ என்று அடித்தது. இரண்டு

கட்டடங்கள், எட்டுத் தளங்களையும் சுற்றி வந்தோம்.

"காய் சேட், பைட் தூஸ் கா?"

"பஸ் கியா?"

"சலோனா அண்ணா... பைட்டோ!"

என ஆந்திர, மராத்தி, உ.பி, நேபாளிக் கொஞ்சல்கள். நெஞ்சு படபடப்பாக இருந்தது.

"என்னய்யா? ஆத்மா சாந்தி ஆச்சா?" என்றார் கான் சாகிப். முன்னிரவு 8 மணி ஆகிவிட்டது. டெல்லி தர்பாரில் முழுக் கோழி தந்தூரி, பியாஸ் ரைத்தா, ரொட்டி, சலன்.

கடைசியாக, கடைசி என்று தெரிந்திராமலேயே பெரியமேடு போனபோது, அவர் குடும்பமும் இருந்தது. பி.காம்., படிக்கிற மகள், பத்தாவதில் மகன். வாரம் இரண்டு டயாலிசிஸ், உப்பில்லாமல் உணவு, அளந்து குடிநீர். நொந்து போய்விட்டது மனது.

வழக்கமாக, பம்பாயில், ஹோட்டல் அறையில் பாய் விரித்து, சுற்றி அமர்ந்து நாங்கள் சாப்பிடுவது நினைவு வந்தது. தலையில் கர்ச்சீப் போட்டு, தண்ணீர் டம்ளரைப் பிடித்திருந்த இடது கையை வலது கையால் தாங்கிக் குடித்து...

"நீ நமக் போட்டுக்கையா!" என்றார்.

"வேண்டாம் கான் சாகிப். இன்னிக்கு நீ சாப்பிடுவதை நானும் சாப்பிடுகிறேன்!"

இருவருக்கும் கண்கள் கலங்கின. குடும் பத்தினருக்கும். நாட்கள் எண்ணப்பட்டுவிட்டனவா என உள் மனம் ஓங்கி ஒலித்தது. அவர் அடிக்கடி சொல்லும் கவிதை வரி ஒன்று - யாவர் வீட்டு முற்றத்து நின்றும் கண்ணுக்குத் தெரியாத தடம் ஒன்று ஓடுகிறது கப்ருஸ்தானுக்கு.

சாப்பிட்டு முடிந்ததும் உள் அலுவலக அறையில் கதவைச் சாத்திக்கொண்டு பேசிக்கொண்டு இருந்தோம்.

"உங்ககிட்டே சொல்லலே... ரொம்ப நாளா மத்தவனுக்கு தம் இல்லே! முட்டுக் கொடுக்கதுக்கு கண்ட கண்ட மாத்திரை. ரெண்டு கிட்னியும் போச்சு... பாய் ஒரு விளம்பரத்தையும் நம்பாதே! எந் தப்புத்தான்!"

அவரது பெரிய கண்கள் கலங்கிப் பாய்ந்தன. பெரிய கனத்த

சோடாபுட்டிக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்தார். பம்பாயில் எனக்கு முதலில் அறிமுகமான கான் சாகிப் அல்ல இது. கொடுங் கூற்றுக்கு இரையெனப் பின் மாய ஒதுக்கம்கொண்ட வேறேதோ மானுடன்!

‘திப்பு சுல்தான்’, சஞ்சய் கான் படம் பார்க்க அன்று 200 ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்கியவர் அல்ல. என்னைவிட கணக்குக்கு ஒரு குப்பி பீராவது அதிகம் குடிக்க வேண்டும் என வாசிக்கு விரல் உயர்த்தியவர் அல்ல. இரண்டு டால் ஃபிரை வாங்கி மொத்தமாகப் பீங்கான் தட்டில் கவிழ்த்து, தலைக்கு ஒரு லோஃப் பிரட் பிரித்துவைத்து, வெங்காயம், பச்சை மிளகாய் கடித்துத் தின்றவரும் அல்ல. முங்கக் குடித்துவிட்டு உறங்கியவனைப் பாயோடு கரகரவெனச் சேர்த்து இழுத்துச் சுவரோரம் போட்டவரல்ல. பம்பாயின் நவீன நாடக முயற்சிகளில் நடித்துப் பங்காற்றியவரல்ல. தமிழ்ச் சங்கக் கவியரங்கில் எழுதி வாசித்தவரல்ல. ஃப்ளோரா ஃபவுன்டன் பக்கம் வேலை இருந்தால், நான் வேலை முடித்து வரும் வரை, வரவேற்பறையில் காத்துக்கிடந்தவர் அல்ல.

கையறு நிலையில் இரு கையும் நீட்டி, குதாவிடம் வாழ்நாள் யாசித்து நின்ற ஜீவன்.

வழக்கம்போல் தோள் தழுவி, ‘குதா ஹாஃபீஸ்’ சொல்லி விடை கொடுத்தார். இருவர் புற முதுகிலும் சொட்டி நனைத்த சோகத் துளிகள். திரும்பிப் பார்க்காமல் நடந்தேன்.

புறப்படும் முன், வெள்ளையில் இள நீல ஒற்றைக் கோடுகள் போட்ட சங்கு மார்க் லுங்கியொன்று தந்தார் புதியதாக. அண்மையில் கோலாலம்பூரில் கிராண்ட் சீஸன்ஸ் ஹோட்டலில் ஒரே அறையில் தங்கி இருந்தபோது கட்டி இருந்தேன், கவனித்தீர்களா ஜெயமோகன்?

அதன் பிறகு கான் சாகிபை நான் பார்க்கவில்லை, உயிருடனோ, மையத்தாகவோ!

அந்தத் தோல் பைக்கும் 32 வயது ஆகிறது. ஓரங்கள் வெளிறி, நைந்து, தையல்விட்டு, உள்ளே நட்டக் குத்தற போடுகிற பேனா ஒழுகிக் கீழே விழுந்துவிடுகிற அளவுக்கு நான்கு மூலைகளிலும் ஓட்டைகளுடன்.

எல்லோரும் எறிந்துவிடச் சொல்கிறார்கள். ஆனால், புறத்தே, ஸ்தூலமாய் நான் சுமக்கும் கான் சாகிப் அது. போன வாரம், கோவை ராஜ வீதி அஞ்சு முக்கில் தோல் பைகள், பெட்டிகள் சீர்திருத்தும் கடையொன்றின் முன் நின்றிருந்தேன். தோள் பையைக் காட்டி, அதைப் பிரித்து வெட்டி, சின்னதாகவேனும் ஒரு பவுச் செய்து தர முடியுமா எனக்

கேட்டேன். அடுத்த வாரம் வரச்சொல்லி இருக்கிறான்!

**-விகடன் தீபாவளி மலர், 2010**

# 10

## ஆத்மா

**ஆ**வணங்களில் அவர் பெயர் பீதாம்பர் பாண்டுரங்க் நாத்ரே. இதில் பீதாம்பர் அவர் பெயர், பாண்டுரங்க் என்பது தகப்பனார். நாத்ரே என்பது குலப் பெயர். குலப் பெயரைவைத்து சாதியைத் தெரிந்துகொள்ளலாம் எனினும், குலப் பெயர் சாதிப் பெயர் அல்ல. சர் நேம் என்பர் வடவர் புலங்களில். நம்மில் நாடார், செட்டியார், தேவர், கவுண்டர்போல் அல்ல; மராத்தியத்தில் குல்கர்னி, ஷிண்டே, பாட்டில், பவார், காம்ப்ளி, சவான் போன்றவை.

பாபா சாகேப் அம்பேத்கர் இந்தக் குலப் பெயரை யாவரும் அணிந்து கொள்ள ஊக்குவித்தார். 50 ஆண்டுகளுக்கு மேலாக இதைச் சமூகம் பயிலும் காரணத்தால், குலப் பெயரைக்கொண்டு காயஸ்த், மராட்டா, இன்ன பிற இனம் என வரையறுத்துச் சொல்ல இயலாது.

பீதாம்பர் பாண்டுரங்க் நாத்ரே ஆதிக்க சாதியா, அடிமை சாதியா என்பது இங்கே அநாவசியம். வண்டியும் படகில் ஏறும், படகும் வண்டியில் ஏறும் இன்று. மேலும், நாத்ரே சவம் ஆகிப் போன பின்பே யாம் அவரை அறிமுகம் ஆக்குகிறோம். 'பெயரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு' எனும் திருமூலர் வாக்கு ஆதாரம். இன்னொரு சித்தன் சிவ வாக்கியன் 'என்பு தோல் இறைச்சியில் இலக்கம் இட்டிருக்குதோ' என்றான், யாரும் கூட்டாக்கவில்லை.

தத்துவ விசாரம் எமக்கு நோக்கம் இல்லை; அதற்கு ஆற்றலும் இல்லை. அன்ன விசாரம், அதுவே நமது விசாரம். ஈண்டு பேச்சு பீதாம்பர் பாண்டுரங்க் நாத்ரேயின் பிணத்தைப் பற்றியது. அவர் பிணமான சில நொடிகளே ஆன நிலையில், இந்தத் தகவல் வாசகருக்குத் தரப்படுகிறது. ‘முக்தி நய்யா’ எனும் பெயர்கொண்ட, மொழிபெயர்த்துச் சொன்னால், ‘முக்தி நாவாய்’ எனப் பொருள் தரும், அப்படியும் அர்த்தமாகவில்லை என்றால், ‘மோட்சப் படகு’ என்று வழங்கப்படும் அடுக்கு மாடிக் குடியிருப்பின் ஒன்பதாவது நிலையில், சி ஃப்ளாட்டில் வசிக்கும் எலி, கண்டாங்கிப் பாச்சை, பல்லி தவிர, வேறொரு குருவிக்கும் இந்தத் தகவல் இன்னும் சென்று அடையவில்லை.

‘பிறகெப்படி உமக்குத் தெரியும் வேய்?’ எனும் வினா நியாயமானதுதான். அதுதான் கதாசிரியனின் வசதி. ஒளியும், ஒலியும், வளியும் நுழைய இயலாத இடத்தையும் உற்று நோக்கும் வசதி.

நாத்ரே அப்போதுதான் உயிர் நீத்திருந்தார். உடம்புச் சூடு இன்னும் ஆறி இருக்கவில்லை. வழக்கம்போல 6 மணிக்கு எழுந்து சண்டாஸ் போய், பல் துலக்கி, ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் ஃபிரிஜ்ஜில் இருந்து எடுத்துப் பருகியபோது தலை கிர்ரென்றது. அது அவருக்குப் புதிய அனுபவமாக இருந்தது.

வழக்கமாக, வலது கையில் கைத்தடி ஊன்றியவாறு, லிஃப்ட்டில் கீழிறங்கி, குடியிருப்பின் பக்கம் இருந்த உத்யான் போய், நடைபாதையில் 40 நிமிடங்கள் அவசரம் இல்லாமல் நடப்பார். ஜூன் முதல் அக்டோபர் வரை மும்பையில் பருவ மழைக் காலம். மழை வெறித்திருந்த காலையில் அல்லது மாலையில் மட்டுமே நடக்க இயலும்.

காலையில் நடந்து திரும்பும்போது ‘வார்ணா’ பால் அரை லிட்டர் பாக்கெட், மராத்தி தினசரி லோக் சத்தா, ஆங்கிலத் தினசரி டைம்ஸ் ஆஃப் இண்டியா கடையில் வாங்கி வந்து மறுபடியும் லிஃப்ட்டில் ஏறி, கதவைத் திறப்பார்.

முதலில் கடக் சாய் போட்டுப் பருகிவிட்டு, செய்தித்தாள்கள். பின்பு சவரம், குளியல். 87 வயதானாலும் தினசரி சவரம் செய்ய அலுப்பது இல்லை.

அன்று எதற்கும் அவசியம் இல்லாமல் போயிற்று.

கிர்ரென்று தலை சுழன்றதோடு மட்டுமன்றி, சளசளவென வியர்த்தது. மேலும் மேலும் எடையேற்றியதுபோல் இறுகி மார் வலித்தது. மூச்சுவிடச் சிரமமாக இருந்தது. நாத்ரேக்குப்

புரிந்துபோயிற்று, கிடக்கப் படுத்தால் கிடந்து ஒழிந்துவிடலாம் என. எதற்கும் வாயிற் கதவைத் திறந்துவைத்துவிடலாம் என்று எண்ணி, எழுந்து நின்று சிற்றடிவைக்கும் முன் சோபாவில் சரிந்து விழுந்தார். சொர்க்கம் அல்லது நரகத்தை நோக்கிய கடைசிக் காலடி.

சரி, சுபம்... கதை முடிந்தது, ‘இந்தக் கதாசிரியன் எழுதிய மிகச் சிறிய கதை இது’ எனத் தாண்டிப் போக எண்ணாதீர். இனிதான் கதையே துவங்குகிறது.

நாத்ரேயின் பூர்வீகம் கொங்கண் என்று அழைக்கப்படும் மராத்திய மாநிலத்தின் தெற்குக் கடற்கரைப் பிரதேசம். மத்தியப் பகுதியும் வடக்குப் பகுதியும் மராத்வாடா, விதர்பா என அழைக்கப்பெற்றன. மேற்குத் தொடர்ச்சி மலை சரிந்து, அரபிக் கடலை ஆரத் தழுவும் ரத்னகிரி பிரதேசத்தில், சத்ரபதி சிவாஜியின் கடற் படைத் தளபதி... மாவீரன் கனோஜி ஆங்கரே கட்டிய கடற் கோட்டைக்குப் போகும் வழியில் அமைந்த சின்னஞ்சிறு கிராமம். மதியச் சமையலுக்கு என, காலை எட்டரை மணிக்கே போம்பில், மாந்தேலி எனச் சிறு மீன்கள் வரும். சற்று நேரம் சென்றால் பாங்கடா, பாம்லெட் என நடுத்தர மீன்கள் வரும். காத்திருந்தால், சிங்காடா, சுர்மாயி எனும் பெரு மீன்கள் வரும். தேங்காய் அரைத்த குழம்பும் அரிசிச் சோறும்.

பண்ருட்டிப் பலாப் பழமே, சேலத்து மாங்கனியே என சினிமாவுக்குப் பாட்டு எழுதுபவர், ரத்னகிரிப் பிரதேசத்துப் பலாப் பழமும் ஆப்புஸ் மாங்கனியும் தின்று இருக்க வாய்ப்பு இல்லை.

நாத்ரே குடும்பம் மிகச் சாதாரணமானது. காட்டு விவசாயம். அவரது தாதா பிரிட்டிஷ் நிலப் படையில் குதிரைப் பராமரிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றவர். அன்று கையூட்டு, இன்றைய வங்கி வைப்பு நிதி வட்டி விகிதம் போல் இருந்தது. மந்திரிமாருக்குப் பாயும் வெள்ளத்தின் சிற்றோடை அதிகாரிகளுக்கும் கவர் பிரிந்தது. நாத்ரே குடும்பம் பசை பிடித்தது.

ரத்னகிரியில் அவர் பிறந்து வளர்ந்த ஊரை அடுத்து பண்ணை வீடு ஒன்று வாய்த்தது. 15.36 ஏக்கர். மேற்கும் கிழக்கும் நிலப் பகுதி. வடக்கில் மன்னும் மேற்குத் தொடர்ச்சி மலைச் சரிவு. தெற்கில் அரபிக்கடலில் கால் நனைக்கலாம். நாத்ரேயின் தோட்ட வீட்டின் தட்டட்டியில் நின்று பார்த்தால், ரத்னகிரிக் கோட்டையைக் காணலாம். அரபிக்கடலினுள் பல கோட்டைகள் சமைத்த கப்பற் படைத் தலைவன் கனோஜி ஆங்கரேயை, கடற்கொள்ளைக்காரன் என்று வரலாற்று ஏடுகளில் ஆங்கிலேயர் பொறித்துவைத்தனர். விடுதலைக்குப் பிறகு, அவன்

பெயரில் மும்பையில் கப்பற் படைப் பயிற்சித் தளம் உள்ளது.

அடர் நீலக் கடல் சூழ்ந்த கோட்டை அது. கயிறு கட்டிய பலூன்போலக் கடலில் கிடப்பது. கயிறு என்பது நிலத்தில் இருந்து கோட்டைக்குப் போகும் தார் சாலை. தோன்றும்போது காரை எடுத்துக்கொண்டு போய் கோட்டையுள் இருக்கும் துர்கா தேவி மந்திரில் தொழுது, நெற்றியில் செஞ்சாந்து தீட்டி வருவார் நாத்ரே. நாத்ரேவுக்கு சற்றே ‘அம்ச்சி மும்பாய், அம்ச்சி மானுஸ்’ சாய்வு உண்டு. எனினும் சிவசேனைக்காரர் அல்ல.

தோட்டம் பூராவும் ஆப்புஸ் என்று அழைக்கப்படும் அல்போன்சா மாமரங்கள், வருக்கைப் பலா, கொல்லா மா, வாழை, தென்னை, பிற தோட்டப் பயிர்கள். கொல்லா மா எனும் முந்திரி அல்லது காஜு, பழுத்து உதிரும் காலங்களில் கோவா, மட்காவ்வில் இருந்து ஆள் கொணர்ந்து முந்திரி ஃபென்னி வாற்றி எடுத்து ஆண்டுக்கும் வைத்துக்கொள்வார் நாத்ரே. நண்பர்களுக்கும் பரிசாகச் சில போத்தல்கள் போகும். விடுமுறைக் காலங்களில் சென்று தங்கும் ஓய்விடமாகவும் இருந்தது அந்தப் பண்ணை வீடு.

பொய்யாய், பழங்கதையாய் போனது காலம். பெண் மக்கள் இருவரும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிரந்தரக் குடிமக்கள். பச்சை அட்டை. தேர்தல் வருவதுபோல் வந்து போவார்கள். மகன் மும்பை மாநகரின் தென் கோடியில் கொலாபா தாண்டி, சசூன் டாக் தாண்டி, 5 கோடி பெறுமதி உள்ள அடுக்கு மாடிக் குடியிருப்பில். 1,500 சதுர அடிகொண்ட மூன்று படுக்கை அறை ஃபிளாட்டில், கடல் பார்த்த பால்கனி வீட்டில். தேசிய வங்கி ஒன்றில் பொது மேலாளர்.

நாத்ரே தனது சொந்தக் குடியிருப்பில் மனைவியுடன் வாழ்ந்தார். ஓய்வு பெற்று 12 ஆண்டுகள் வரை அல்கா பாயி, நாத்ரேயைத் தங்கத் தாம்பாளத்தில் தாங்கினாள். பூரண் போளி, ஆலு வடி, சாபுதானா கிச்சடி, ஆம்ரஸ் பூரி, பாக்ரி-லசூன் சட்னி, கோக்கம் ரஸ், பொட்டாட்டோ போஹா எனத் தினந்தோறும் தேரோட்டம்.

வல்வினைபோல் வந்து வாய்த்தது அல்கா பாயிக்கு பார்க்கின்சன் நோய். கை கால் நடுக்கம், நினைவு அடுக்குகளில் சரிவு, நினைவு பிறழ்தல்... கிடந்த கிடையாக ஆயிற்று. குழந்தையைப்போலப் பராமரித்தார் நாத்ரே. தன்னுடன் வைத்துக்கொள்ள இயலாமற் போனதற்கு மகன் சின்ன நாத்ரே, ஒரு பாடு காரணங்கள் சொன்னான். மகனையும் சொல்லித் தப்பில்லை. வேலை பார்க்கும் கணவன், மனைவியர், கல்லூரியில் படிக்கும் இரு பெண்கள். மேலும், முதுமையும்

நோயும் தோள் மாற்றிச் சுமக்க வல்லதா?

பகலில் ஒரு நர்ஸ் வந்து போவாள். காலை 9 முதல் மாலை 5 வரை வேலை நேரம். 30 நிமிடங்கள் உணவு இடைவெளி. காலையில் வந்ததும் டயாபர் மாற்றி, பல் தேய்த்துவிட்டு, குளிப்பித்து, உடை மாற்றி, உணவு ஊட்டி, வாய் துடைத்து, மாத்திரைகள் கொடுத்து, தலை வாரி, செந்தூர் வைத்து...

அவளுக்கும் வார விடுமுறை உண்டு. சில நாட்கள் வராமலும் இருப்பாள். சில நாட்கள் தாமதமாக வருவாள். சில நாட்கள் சீக்கிரமாகப் போக வேண்டியது இருக்கும். நாத்ரே பத்திரமாகப் பார்த்துக்கொண்டார். நர்ஸ் சமைப்பாளா என்ன? காலையில் சாய், காரி பிஸ்கட் அல்லது பிரட் டோஸ்ட். பட்டர்... கொழுப்பு, ஜாம்... சர்க்கரை, ஆம்லெட்... கொலஸ்ட்ரால். ஆகாது. சில நாட்கள் மதியத்துக்கு ரொட்டியும் தாலும் செய்து பார்த்தார் நாத்ரே. 75 வயதில் சமையல் கற்றுக்கொள்ளும் நிர்ப்பந்தம்.

நாத்ரேயின் குடியிருப்பு, மும்பை சத்ரபதி சிவாஜி டெர்மினஸில் இருந்து தாணே போகும் சென்ட்ரல் ரயில்வே மெயின் லைன் இருப்புப் பாதையில், மூலண்ட் ஸ்டேஷனில் இருந்தது. ரயில் நிலையத்தில் இருந்து மேற்குப் பக்கம் வெளியே வந்ததும் இரு வசமும் உணவுக் கடைகள் உண்டு. உணவுக் கடை எனில், ஹோட்டல் அல்ல. வீட்டில் தயாரித்துக் கொணர்ந்து விற்பனைக்கு வைத்திருக்கும் உணவுப் பண்டங்கள் விற்கும் ஸ்டால்கள். ஹாட் பேக்குகளில் சேமிக்கப்பட்டவை.

சப்பாத்தி, பாக்ரி எனில் எண்ணத்துக்கு விலை. தால், கடி எனில் முகத்தல் அளவு. சோறு எனில் வாட்டி அளவு. தினமும் பொடி நடையாகப் போய், தலைக்கு மூன்று சப்பாத்தி, ஒரு கிண்ணம் சோறு, அரை லிட்டர் பருப்பு, கால் கிலோ சப்ஜி வாங்கிக்கொள்வார். ஒரு நாள் கத்தரிக்காய் - உருளைக் கிழங்கு, மறுநாள் உருளைக் கிழங்கு - வெந்தயக் கீரை, மூன்றாவது நாள் வெண்டைக்காய் என மாற்றி மாற்றி. சில சமயம், ஒரு வாட்டி தயிர். இரவுக்கு பிரட் டோஸ்ட், சுடு பால்.

மிகவும் ஆசைப்படும் நாளில் காமத் ஹோட்டலில் இரவு இட்லி, வடா-சாம்பார் சாப்பிட்டுவிட்டு, பாத்திரத்தில் அல்கா பாயிக்கும் வாங்கி வந்து ஊட்டிவிடுவார்.

வாரந்தோறும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வாழும் மகள்கள் பேசுவார்கள், சரியாக முன்னிரவில். ஞாயிறுதோறும் அல்லது ஞாயிறு

விட்டு ஞாயிறில் மகன் நேரில் வந்து போவான். சந்த்ரி, மொசம்பி, சிக்கு, அனார், ஆம், சபர்ஜலி, கேலா எனும் ஏதோ ஒரு பருவ காலக் கனி வர்க்கத்துடன். இதெல்லாம் அமாவாசை அல்லது பௌர்ணமிபோல் அதன் பாட்டுக்கு நிகழும்.

“காய், தாதா? கஸ காய்?” எனத் துவங்கும் அன்பு கசியும் உசாவல். மருமகளோ எனில், “காய் ஆயி? கஸ காய் தூமி?” எனத் தன் பங்குக்கும் சொரிவாள். சரியாக ஒரு மணி நேரம் ஸ்லாட். மருமகளே சாய் போட்டு யாவரும் பருகுவார்கள். பிறகென்ன? “சலோ, அமி நிக்லா… போன் கரோ… தபேத் சமாலோ!” என்றொரு விடைபெறல்.

நாத்ரேக்குச் சொந்த வீடு. பராமரிப்பு, சௌகிதார் சம்பளப் பங்கு, பால், தினசரிகள், பிரட், காரி பிஸ்கட், தால் - ரொட்டி, பற்பசை முதலாய டாய்லெட் சாமான்கள், மருந்துகள், நர்ஸ் சம்பளம், செல்போன் பில், கரன்ட் செலவு யாவும் சேர்ந்து மொத்தமாக 20,000 பக்கம் ஆகிவிடும். பவிஷ்ய நிதி, ஓய்வுத் தொகை யாவுமாக 36 லட்சங்கள் மூத்த குடிமகனுக்கான அரை சதவிகித அதிக வட்டி தேக்கி வைப்பு நிதியாக வங்கியில் கிடந்தது. ஓய்வு ஊதியத்திலேயே ஒரு பங்கு மிச்சம் தான்.

ஆண்டுக்கு ஒரு முறை வரும் கண்பதி பாப்பா பண்டிகைக்குத் தாராளமாக நன் கொடை கொடுப்பார். மொத்த காலனிக் குழந்தைகள், சிறுவர் சிறுமியருக்கு அவர் தாதா. பிறருக்கு காக்கா. அபூர்வமாகச் சிலருக்கு மாமா அல்லது அண்ணா.

தீபாவளிக்கும் குடிபட்வாவுக்கும் மகன் குடும்பம் வந்து போகும் பலகாரத் தினுசுகளுடன். அந்த நாட்களில் சக்ளியும் கரஞ்சியும் பேசின் லாடுவும் அண்டை அயலிலும் மலிந்து கிடக்கும். சென்ற முறை நாத்ரே மக்களிடம் சொன்னார், “இருக்கும் துணிமணிகள் காலத்துக்கும் காணும். இனி, புதுசு எடுத்து அநாவசியத்துக்குச் செலவிட வேணாம்” என்று.

அல்கா பாயிக்கு மரணம் பையப் பைய, ஆரவாரம் இல்லாமல், முக்கல் முனகல் வலி வேதனையுடன் வந்தது. நாத்ரே கடைசிச் சொட்டு கங்கை தீர்த்தம் ஒழுக்கினார். 78 வயது என்பது பெருவாழ்வுதான். நோய் ஒன்றே கரும்புள்ளி. எவருக்கும் வஞ்சனை செய்யாமல், வாரிச் சுருட்டாமல், வயிற்றில் அடிக்காமல் 60 வாழ்ந்தாலே பெருவாழ்வு.

அன்று நாத்ரேக்கு 81 கடந்த காலம்.

ஆயி மரணத்துக்குப் பெண்கள் வரவில்லை. மகன் இருந்தான், கொள்ளி போட்டு முழங்கை மயிர் மட்டும் மழித்துக்கொள்ள. அல்கா பாயின் உருப்படிகளை மூன்று பங்குகளாக்கி தனித் தனியே நகைப்

பெட்டிகளில் போட்டு, மருமகளிடம் ஒப்படைத்தார்.

இனியாவது உடன் வந்து இருக்கும்படி ஒப்புக்குக்கூட மகனோ, மருமகளோ கூப்பிட வில்லை. மூன்று படுக்கையறைக் குடியிருப்பே ஆனாலும் ஒன்று தம்பதியினருக்கு, மற்ற இரண்டும் மகள்களுக்குப் போனாலும் நாத்ரே வரவேற்பறையில்தான் படுக்க வேண்டும். அல்லது பால்கனியை மூடி, அதில் ஒரு கட்டில் போட வேண்டும். என்றாலும் எவரது கக்கூஸ் - குளிமுறியை அவர் உபயோகிப்பார்? அல்லது இப்போதுதான் ஆயி இல்லையே, வடீல் தனியாக சமாளித்துக்கொள்வார் என சின்ன நாத்ரே எண்ணி இருக்கலாம். அல்லது, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சகோதரிகள் வந்தால், தாதா தனியாக இருந்தால்தான் தங்கத் தோதாக இருக்கும் என்று எண்ணி இருக்கலாம். அன்றியும் ஒரே நகரில்தானே வாழ்கிறார்கள். நினைத்தால் வந்து எய்திவிட இயலாதா?

திருமணம் அன்று எடுத்துக்கொண்ட, பெரிதுபடுத்தப்பட்ட, சட்டம் கட்டி சுவரில் மாட்டப்பட்ட, கறுப்பு - வெள்ளைப் புகைப் படத்தில் இருந்த அல்கா பாயியைச் சில நாட்கள் நெடு நேரம் பார்த்துக்கொண்டு இருப்பார் புட்டா நாத்ரே. மூக்கில் முத்துக்கள் கோத்த நத்து, பெரிய தோடுகள் செவியில், வட்டப் பொட்டு, மராத்திப் பெண்களுக்கேயான தார் பாய்ச்சிய புடவைக் கட்டு.

சில ஒழுங்குகள் செய்தார் நாத்ரே. தன் காலத்துக்குப் பிறகு, தோட்ட வீடு மகனுக்கு. தான் குடியிருக்கும் வீடும் அந்தேரியில் வாடகைக்கு விட்டிருக்கும் வீடும் இரண்டு மகள்களுக்கும். வங்கியில் கிடக்கும் வைப்பு நிதி முழுக்க இரு மகன் வழிப் பேத்திகளுக்கும் என்று உயில் எழுதிப் பதிவு செய்தார்.

ஆயிற்று, அல்கா பாயி இறந்துபோய் ஆறு ஆண்டுகள். தினமும் எத்தனை சினிமா, சீரியல் பார்ப்பது? எத்தனை மணி நேரம் தூங்கி எழுவது? ஓய்வூதியம் வாங்க ஆரம்பித்து 27 ஆண்டுகள் ஆகிவிட்டன. எத்தனை உழைத்து இருந்தாலும் அரசுக்குப் பொருள் இழப்புதான். சோற்றுக்குச் செலவு, பூமிக்கும் பாரம்.

நாத்ரே உடல் குளிர ஆரம்பித்தது... ஒன்பதாவது நிலை என்றால் என்ன, ஈக்கள் வராதா? ஒழுகி இருந்த கடைவாயில் ஈக்கள் அமர்ந்து எழுந்தன. அந்தத் தளத்தில் இருந்த மற்ற மூன்று வீட்டுக்காரர்களுக்கும் பொதுச் சொத்தாக இருக்கலாம் அவை. அவரவர் அலுவலகம், தொழிற்கூடம், பள்ளி, கல்லூரி என விரைய ஆரம்பிக்கும் காலைப் பொழுது. இன்றோ, நாளையோ தாதாவை, காக்காவை, மாமாவை,

அண்ணாவைக் காணோமே என எவருக்கோ தோன்றலாம்.

மகன் வீட்டுக்கோ, ரத்னகிரிக்கோ போய் இருப்பார் என நினைக்கவும் ஆகலாம். ஒரு நாள் பொறுத்து காற்றில் துழாவும் மெல்லிய துர்நாற்றத்தின் மூலத்தைத் தமது இல்லங்களுக்கு உள்ளே இண்டு இடுக்குகளில் தேடலாம். கனத்த பிண நாற்றம் காற்றில் பரவ மூன்று நாட்கள் ஆகலாம். இறந்த கிழ நாத்ரேயின் பிணம் அழுக ஆரம்பிக்கும். நாற்றம் வரும் திசை அறிய வரும். மூலம் உணர்ந்து, போலீஸுக்குச் சொல்லி, கதவை உடைக்கலாம்.

அவரது ஆத்மாவுக்கு அதன் பின் சாந்தியும் கிடைக்கலாம்!

**-ஆனந்த விகடன், 23.2.2011**

# 11

## பெருந்தவம்

மேல மலை இறங்கிக் கொண்டு இருந்தான் சிவனாண்டி உச்சி சாய்ந்து. மேற்கில் படிய ஆரம்பித்த பகலவன், அவன் முதுகில் உப்புக் காய்ச்சிக்கொண்டு இருந்தான். மணி மூன்று கடந்திருக்கும். தலையில் மரச் சீனிக் கிழங்கு நிரப்பாகத் திணித்து அடுக்கப்பட்ட சாக்கு. ஓடி இறங்கி ஊருக்குள் போனால்தான் நாலு மணிக்காவது தராசும் படியுமாக யாவாரம் தொடங்க முடியும்.

எப்படிப் பார்த்தாலும் நூற்றிருபது, நூற்று முப்பது ராத்தல் இருக்கும். சிவனாண்டி நல்ல சுமட்டுக்காரன். இருபத்தைந்து ஆண்டுகளாக மலை ஏறுகிறான். மலைக் கூப்புகளில் மரச் சீனிக் கிழங்கு நிறுவை கிடையாது. ஓரடி இடைவெளியில், இரண்டு கைகளுக்கு இடையிலும் சேர்த்து எடுக்க முடிகிற கிழங்கு ஒரு பூட்டு எனப்படும். விலையைக் கூப்புக்காரர் தீர்மானிப்பார். ஒரு பூட்டுக் கிழங்கு என்பது நாலு ராத்தலுக்குக் குறையாது. அன்றைய விலை பூட்டு ஓரணா.

நல்ல கிழங்கு, பிடுங்கும்போதே தெரிந்தது. கன்னங்கரிய மேல் தோல். வெள்ளை வெளேர் என உள் தோல். அடி பெருத்து, நுனி குறுகி, கூம்பு வடிவத்தில் ஓரடி நீளத்தில் தெறிப்பான கிழங்குகள். கிழங்கின் தூர் கைப்பிடிக் கனம் இருக்கும். சாக்கில் அடுக்கி, சுமந்து கீழே இறக்கி எடை போட்டு விற்கும் வரை கிழங்கு உடையாது. தொடையில் அடித்து

உடைத்துப் பார்த்தால், பால் வெள்ளையாகக் கிழங்கு வெகுளியாகச் சிரிக்கும்.

மரச் சீனியில், அந்த நாட்களில் நாலைந்து ரகங்கள் இருந்தன. செடிக்கே ஊருக்கு ஒரு பெயர். மரச் சீனி, மர வள்ளி, ஏழிலைக் கிழங்கு, குச்சிக் கிழங்கு, டேப்பியோக்கா என்றெல்லாம் கூப்புக்காரர்களின் வர்த்தமானம் கேட்டுக் கேட்டு, சிவனாண்டிக்குக் கிழங்குகளின் பெயர் தெரியும். பார்த்தால் அடையாளம் தெரிந்துகொள்வான். நீங்கள் பார்த்ததும் இது இட்லி, கொழுக்கட்டை, இடியாப்பம், புட்டு என அடையாளம் தெரிந்து கொள்வது இல்லையா?

செங்கொம்பன் என்றோர் இனம் உண்டு. செடியின் தண்டு, இலைக் காம்பு எல்லாம் சிவப்பாக இருக்கும். கிழங்கில் சித்துக் கசப்பு உண்டு. அடுப்பில் போட்டால் வேகவே வேகாது. இது, மாவுக்கு அடிக்கத்தான் லாயக்கு.

கோயில் வெள்ளை என ஒன்று உண்டு. இந்தக் கிழங்கின் மேல் தோல் தவிட்டு நிறத்திலும் உள் தோல் வெள்ளை நிறத்திலும் இருக்கும். இதிலும் கொஞ்சம் கடுப்பு உண்டு. வேகலாமா, வேண்டாமா என நீண்ட நேரம் யோசிக்கும். மாவுக்குத்தான் இதையும் பயிர் செய்வார்கள். தீத்திக் கிழங்கு என்ற பெயரே தீவனத்தை நினைவுபடுத்துவது. தீனி, தீற்றி, தீத்தி என்று போகிறது சொல். ‘தானும் திம்பான்... கூட இருக்கப்பட்டவனையும் தீத்திப்பான்’ என்பது வழக்கு. உள் தோலும் ஆகாரத்துக்கு உகந்தது. அடுப்புக் கங்கில் ஐந்து நிமிடங்கள் வைத்து எடுத்தால் புட்டு மாவுபோல வெந்து உதிரும்.

நான்காமவன் கரிகாலன். பெயர் சொல்லாமல், முன்பே இந்தக் கிழங்குபற்றிச் சொன்னோம். தீ என்று சொன்ன உடனேயே வேக ஆரம்பித்துவிடும். சிவனாண்டிக்குத் தெரியாமல் வேறு சிலவும் இருக்கலாம். எதிர்காலத்தில் வளர்த்து எடுக்கப்படலாம். எதுவானாலும் பச்சையாகத் தின்பது உகந்தது அல்ல. ஆசைக்கு ஒரு துண்டு தான் அளவு. மீறினால் பித்தம் பிரட்டும். ஆகவே, வேகவைத்துத் தண்ணீர் இறுத்துவிடுவார்கள். காயவைத்து மாவடிக்கும்போதும், கண்டம் வெட்டிப் பாறையில் உலர்த்தி, வாங்கி வந்து வீட்டில் நனையப்போட்டு புட்டுக்கு இடிக்கும்போதும் இந்தப் பித்தம் எங்கே போகும் என்றே தெரியவில்லை. ஒருவேளை உலர்வதால் மாயுமாக இருக்கும்.

கிழங்கு பிடுங்குகிறார்கள் கூப்பில் என்கிற சேதி, எந்தக் கூப்பு என்ற தகவலுடன் காற்றில் மிதந்து வரும். காற்று வதந்திகளை மட்டுமே பரப்புவது இல்லை. விதையை, நோயை, தட்பத்தை, வெப்பத்தை,

கானத்தைப் பரப்பும். மழையைக் கொணரும், மாரியைத் துரத்தும், பருவமான பயிர்கள் கதிர் தள்ள உதவும், கதிரான பயிரின் பால் குடித்துப்போகும், காதலியாகக் கொஞ்சும், பகைபோல் வெருட்டும். ஆனி ஆடிக் காற்றுக்கு அம்மியும் குழவியும் பறக்கும்.

காற்றில் சேதி வந்ததும் சிவனாண்டி பெரிய சாக்கு ஓட்டைகளைத் தைத்து, சீர் பார்த்து, வாய்க்கட்டும் சணலால் சுருட்டிக் கட்டி வைப்பான். சேவல் கூப்பிட எழுந்து, உமிக் கரியால் பல் துலக்கி, முகம் கழுவி, உப்புப் போட்டு ஆற்றிய பழஞ்சித் தண்ணி இரண்டு போணி குடித்து, சாரத்தை மடித்துக் கட்டி, துவர்த்தை தலையில் சுற்றி, கூப்புக்கு மலை ஏறத் துவங்குவான்.

தடம் தெரியும்போதே ஊர் தாண்டி, வயற்காடுகள் தாண்டி, ஓடைக்கரை தாண்டி, பனை விளைகள் பல கடந்து, சுடலை மாடன் காவல் காக்கும் மயான பூமிகள் போக்குவிட்டு, அனந்தனாற்றுப் பாலம் ஏறி இறங்கி மலையடிவாரம் வந்து மலை ஏறணும். சூரியோதயம் ஆகி ஏழெட்டு நாழிகை ஆகிவிடும் மரச் சீனிக் காடு கிடக்கும் கூப்பு சேர. கிட்டத்தட்ட பாதி மலை ஏறணும் கிழங்கு பயிராகும் சமதளம் அடைய. அப்படி முற்று முழுதாகச் சமதளம் என்றும் சொல்லிவிட இயலாது. மேடும் பள்ளமுமான சிறு பாறைகள் குறுக்கிடும் மண் பரப்பு.

கிழங்கு வாங்கப் போகும் அவனைப் போன்றோர் போய்ச் சேரும் முன்பே கூப்புக்காரர் இரண்டு மூன்று பேர் வந்து சேர்ந்திருப்பார்கள். அனந்தனாற்றுப் பாலம் கடக்கும்போதே புறம்போக்குக் காட்டு விளையோரம் படுக்கப்போட்டிருக்கும் சைக்கிள்களைக் காணலாம். எவராயினும் அந்த ஈட்டானில் இருந்து ஏறித் தான் ஆக வேண்டும்.

மரச் சீனி விளையை அடைந்ததும் பாறை மேல் குத்தவைத்து உட்கார்ந்து ஓய்வெடுக்க இயலாது. கிழங்கு பிடுங்க வேண்டும். மரச் சீனி பயிரிடும்போது, நாலு மண்வெட்டி மண்ணை இரண்டடி உயரத்தில் அணைத்துக்கொண்டு குவிப்பார்கள். மண்ணும் சரளைக் கற்களுமாகக் கிடக்கும் மண்கொவர்ந்து பொங்கி, கீழே இருக்கும் கிழங்குகளின் தடிப்பால் வெடித் துக் கிடக்கும். சற்று மூச்சுப் பிடித்து, மரச் சீனிச் செடியில் தூரைப் பிடித்து நட்டுக் குத்தறத் தூக்க வேண்டும். ஏழெட்டு ராத்தல் எடை இருக்கும் பெரிய, சிறிய கிழங்குகளுடன் செடி மூட்டோடு மேலே வரும். கீழே சாய்த்துவிட்டு அடுத்த மூடு. தனது தேவைக்குப் போதும் என்கிற தீர்மானம் வரும் வரை மரச் சீனி மூடு களைக் கிழங்குகளுடன் பிடுங்கிச் சாய்த்த பின், செடிகளில் இருந்து கிழங்குகளைப் பறித்துக் குவிக்க வேண்டும்.

சிவனாண்டியைப் போல, பத்துப் பன்னிரண்டு பேர் வந்து மரச் சீனிக் கிழங்குகளைப் பறித்துக்கொண்டு இருப்பார்கள். சைக்கிள் பாரம் அடிப்பவர், சுமட்டுக்காரர், பனை ஓலைக் கடவப் பெட்டி கொண்டுவரும் தாய்மார், ஒன்றிரண்டு சிறுவர், பதினைந்து பதினாறு வயதுப் பிராயத்தே.

பெரிய கிழங்கு, சின்னக் கிழங்கு என்று கழித்து வாங்க ஏலாது. கலந்துதான் பூட்டும் போடுவார்கள். அவரவர் பிடுங்கிப் பறித்த குவியல் முன் நின்றுகொள்ள வேண்டும். காசு வாங்கிக்கொண்டு பூட்டு எண்ணிப் போடுவார்கள். சில கிழங்குகளை ‘லாபம்’ என்று சொல்லிப் போட்டாலும், ‘வீட்டுக்கு அவிச்சுத் திங்க’ என்றும் சில எடுத்துக்கொள்ளலாம். ஒன்றும் சொல்ல மாட்டார்கள். சுமக்கு மட்டும்; காசு இருப்பது போலவும் வாங்கலாம்.

கிழங்குகள் சாக்கினுள் புன்னைக் காய்கள்போல் இடம் தேடித் தானாகச் சென்று அமர்ந்து கொள்ளாது. நீள வாக்கில், நிப்பாட்டிய கோலத்தில் நேராகவும் தலைகீழாகவும் இண்டு இடுக்குப் பார்த்துச் செருக வேண்டும். வெளி பார்த்து, இடம் பார்த்துச் செருக வேண்டும். வாங்கியதை மூடையாக நிரப்பாக அடுக்கி முடித்ததும், கிழங்கு பிடுங்கிய மண் குவியல்களில் கூர்க் கொம்புகள் கொண்டு கிளைத்துப் பார்த்தால் தப்புக் கிழங்குகள் கிடைக்கும். தானாகத் தப்பியவை; வேண்டும் என்றே தப்பவிடப்பட்டவை அல்ல. பொறுக்கப்பட்ட தப்புக் கிழங்குகளைப் பார்த்தே கூப்புக்காரர், கள்ளத்தனம் கண்டுபிடித்துவிடுவார். தப்புக் கிழங்குகளை இலவசமாகவே எடுத்துக்கொள்ளலாம். எப்படியும் நாலைந்து ராத்தல் கிடைக்கும்.

கடவம் ஆனாலும் மூடையானாலும் காட்டில் சுமை எடுக்கும்போது மட்டும்தான் தூக்கிவிட இரு கைகள் இருக்கும். பிறகு, எல்லாம் விதிப் பலன்.

கிழங்கு அடுக்கி, சாக்கு முழுத்து, வாய்ப்பூட்டுப் போட்டுக் கட்டி, குறுக்கு நிமிரும்போது, சுட்ட கிழங்கின் மணம் கிளர்ந்து வீசும். முதலில் பிடுங்கப்பட்ட செடிகளில் இருந்து பறிக்கப்பட்ட கிழங்குகளில் கூப்புக்காரர் ஒருவர் தலை எண்ணி, நல்ல பருத்துத் திரண்டு விம்மியவற்றைப் பொறுக்கிப்போவார். பாறை மீது காட்டு விறகுகள் சேர்த்துத் தீ மூட்டி, தீக்கங்குகள் விழுந்ததும் கிழங்குகளை அடுக்கி, அதன் மேல் ஆழப் பறித்த தீக் கங்குகளால் மூடி, கிழங்கு சுடுவார்.

மேல் தோல் கருகி, உள் கட்டி வெண்தோலும் கருகி, கிழங்கு வெந்து வெடித்து மலர்ந்திருக்கும். தீக்கங்கு மூட்டத்தைக் கலைத்துவிட்டு,

கிழங்குகளைச் சூடு பொறுக்கப் பொறுக்கி, கரிந்த தோல்களைத் தட்டி, வாழை இலையில் அடுக்கிவைப்பார். மரச் சீனிச் செடிகளின் வெளி வட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கத்திரிச் செடிகளும் காந்தாரி மிளகாய்ச் செடிகளும் காய்த்துக் கிடக்கும். காந்தாரி மிளகாய் என்பது மிளகாயில் சின்ன ஊசி ரகம். காரம் பத்து மடங்கு. இரண்டு கை கத்திரிக்காய்களைப் பறித்து தீக்கங்கில் போட்டுச் சுட்டு எடுப்பார். பாறை மேல் சற்று நிரப்பான பகுதி ஏற்கெனவே கழுவப்பட்டுக் கிடக்கும். சிவலிங்கம்போல் வடிவுள்ள பாறைத் துண்டு ஒன்று குழவி. பிறகென்ன, கீழே இருந்து கொண்டுவந்த பரல் உப்பு, புளிச் சுளைகளுடன் காந்தாரி மிளகாய், சுட்ட கத்திரிக்காய் சேர்த்து நொய்ய நொறுங்கச் சதைத்து, குப்பியில் கொண்டுவந்த தேங்காய் எண்ணெயைக் கணிசமாக விட்டுக் குச்சியில் கிளறினால் தீர்ந்தது சோலி.

சுட்ட கிழங்குக்குச் சுள்ளென்று இருக்கும். கூப்புக்காரரும் அவரது வேலைக்காரர்களும் கிழங்கு வாங்க வந்தவர்களுமாக சமபந்தி போஜனம். கால் துண்டு இலையில் சுட்ட கிழங்கும் சம்மந்தியும் எடுத்துப் போடுவார் கூப்புக்காரர். கூடி இருந்து தின்பது ஏதோ மதச் சடங்கு போலிருக்கும். பக்கத்திலேயே சலசலத்து ஓடி இறங்கும் காட்டு நீரோடை. கொள்ளுமட்டும் இரு கைகளாலும் கோரிக் குடித்து, முழங்கால், முழங்கை, கழுத்து, முகம், நெஞ்சு என நீர் அறைந்து வியர்வை உப்புப் போகக் கழுவிக்கொள்ளலாம்.

தலையில் சுமடு எடுத்த பின் நீ யாரோ? நான் யாரோ? மலை இறங்கும்போது கழுத்து உறைப்பும் கால் உறுதியும் என்னைப் பார், என் அழகைப் பார் என்னும். அனந்தனாற்றுப் பாலம் வரைக்கும் எல்லோருக்கும் ஒரே தடம்தான். ஆடு மாடுகள், மனிதர்கள் நடந்து பழகிய ஒற்றையடித் தடம். தடத்தின் பக்கவாட்டுகளில் பெயரறியாப் பல செடிகள். காரை முள், அழிசு, ஈச்சம் புதர், கள்ளி.... பெருவிரல் நுனிகளுக்குக் கண் திறந்து தடம் பார்த்து சரளைக் கற்கள், மகடிக்கும் சிறு பாறை தவிர்த்து, மழை பெய்திருந்தால் வழுக்கும் தரை பதனம் பார்த்து... தினமும் ஏறியிறங்கும் தடம் என்றாலும், கால் தடுக்கி விழுந்தால், மேலே விழும் கிழங்குச் சாக்கு போகும் வழிக்குச் சங்கு ஊதும்.

சிலர் அனந்தனாற்றுப் பாலக் கலுங்கில் குனிந்து, நரக்கி நரக்கி மூடையைச் சாய்த்துவைத்து, வியர்வை ஆற்றிக்கொள்வது உண்டு. சும்மாடாகத் தலையில் இருந்த துண்டை உதறி, தலை முடி கோதி, தலையை இடதும் வலதுமாக வெட்டிச் சொடக்கு எடுத்து, வியர்வை

துடைத்து, முட்டுப் போட்டுக் குனிந்து மூடையை இழுத்து வெட்டி வெட்டித் தலைக்கு ஏற்றிக்கொள்வது உண்டு. மாடு மேய்ப்போர், காணம், கடலை என விதைத்திருந்தோர் வேலைக்கு வந்திருந்தால், சுலபமாகச் சாக்கு தலைக்கு ஏறிவிடும்.

கண் வெட்டத்தில் எவராவது தென்படுகிறார்களா என்று பார்த்தான் சிவனாண்டி. நேரமும் ஆகிவிட்டது அன்று. பாலக் கலுங்கு ஈட்டானில் மூட்டையை இறக்காமல் அஞ்சலோட்டமாகப் போய்க்கொண்டே இருந்தான். கூப்புக்காரர்கள் சற்றுப் பிந்திதான் இறங்குவார்கள். சில நாட்கள் சாய்ந்த பாறையோரம் தென்னை ஓலை தட்டிக் கட்டி மறைந்த குடிசையில் இரவு தங்கிவிடுவதும் உண்டு.

மரவள்ளிக் கிழங்கு என்பது சேனைக் கிழங்கோ, சேப்பங்கிழங்கோ அல்ல; வாரக் கணக்கில் ஒன்றும் ஆகாமல் கிடப்பதற்கு. அன்று பிடுங்கியதை அன்றே அவிக்க வேண்டும். ஒரு நாள் கிடந்தாலும் கிழங்கு கறுத்துப் போகும். அல்லது தண்ணீரில் போட்டு வைத்திருந்தால் மேலும் ஒரு நாள் கிடக்கும்.

மிகவும் குறுக்குக் கடுத்தால், தோளுயரத்தில் ஊருக்கு ஒன்று இரண்டு சுமைதாங்கிக் கற்கள் நட்டு வைத்திருப்பார்கள். இரண்டு கல் தூண்கள் நாட்டி, குறுக்கே ஒரு கல் தூண் போட்டு, வயிற்றுச் சூலியாக இறந்துபோன பெண்களுக்காக. எல்லாம் ஒரு பரோபகாரம்தான். பார வண்டிகள் அதிகம் போகும் ஊர்களில் வண்டி மாடுகளுக்குத் தண்ணீர் காட்ட கல் தொட்டிகள்கூட அடித்துப் போட்டிருப்பார்கள்.

வேகும் கிழங்கானால் சடாரென விற்றுத் தீர்ந்துபோகும். வேகாத கிழங்கைப் பொய் சொல்லி விற்றால், அடுத்த நாள் ஊருக்குள் இறங்க முடியாது. முறம் கொண்டு சாத்து முறை கிடைக்கும். இன்று அந்தக் கவலை இல்லை. இரண்டு ராத்தல் ஓரணா என்று விற்றால், நான்கு ரூபாயும் வீட்டுக்கு அவிக்கக் கிழங்கும் மிஞ்சும். கடைசியில் விற்காமல் தங்கும் நரங்கல், உடைசல், கோணல், வேர்க் கிழங்குகள் வீட்டுக்கு. பதிவுக் கச்சவடம் என்பதால் கடனும் போகும். கடன் சேர்ந்துபோனால் அரிசியோ, நெல்லோ அளந்தும் தருவார்கள்.

பெரும்பாலும் பெரிய படிப்புரை இருக்கும் வீடாகப் பார்த்து சாக்கை இறக்குவான். தராசும் படியும் அங்கேயே ஒரு வீட்டில் கொடுத்துவைத்திருப்பான். சாக்கை அவிழ்த்ததும் கண்ணில் படும் முதல் பெண்மணியை விளித்து, “யக்கா... இதை ஒரு அஞ்சு மினிட் அடுப்புக் கங்கிலே பூத்து வெச்சு எடுத்தாக்கா” என்பான், பெரிய கிழங்கு ஒன்றைக் கொடுத்து.

யாவாரம் களை கட்டும். எப்போதும் அவன் நிறுவை தாராளமாகவே இருக்கும். சிவனாண்டிக்கு கள்ளத் தராசு பிடிக்கத் தெரியாது என்றாலும், நிறுத்து முடிந்த பின் சாக்கினுள் கைவிட்டு சின்னதாகக் கிழங்கு ஒன்று எடுத்துக்கொள்வார்கள் உரிமையுடன்.

சில வீடுகளில் அந்திக் கடையில் வாங்கி வரும் சாளை, அயிலை, அல்லது நெத்திலிப் புளிமுளத்துடன் கிழங்குக் கறி. சில வீடுகளில் கண்டம் வெட்டிப் போட்டு அவித்து, தண்ணீர் இறுத்து சுட்ட மிளகாய், பூண்டு, உப்பு, சின்ன உள்ளி சேர்த்து நசுக்கிய சம்மந்தி தொட்டுக்கொள்ள. சில வீடுகளில், சின்னச் சின்னத் துண்டுகளாக நறுக்கி, அவித்து, தண்ணீர் இறுத்து, கடுகு உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, மிளகாய் வத்தல் போட்டுத் தாளித்துக் கொட்டிக் கிளறி, தேங்காய்ப் பூ தூவி இறக்கினால் தாளித்த கிழங்கு.

அவியாத கிழங்கு என்றால் அதற்கு வேறு வைத்தியம் பார்க்கணும். கொஞ்சம் அரிசியுடன் சேர்த்து அரைத்து அடைபோலச் சுடலாம். கிழங்கு ரொட்டி என்பார்கள்.

ஓரணாவுக்கு இரண்டு ராத்தல் கிழங்கு வாங்கினால், சின்னக் குடும்பம் ஒரு வேளை பசியாறும்.

எந்தக் கோயிலிலாவது சாமிக்கு நைவேத்தியத்துக்குக் கிழங்கு அவித்துவைக்கிறார்களா என்று தெரியவில்லை. அக்காரவடிசிலும், நெய்யப்பமும், அப்பமும், மோதகமும், அதிரசமும், அரிசிப் பாயசமும், கொழுக்கட்டையும், தோசையும், சுண்டலும், வடையும், புட்டமுதும், பஞ்சாமிர்தமும், நெற்பொரியும், லட்டும் தின்னு சொகுசு கண்ட சாமிக் குலம். அவர்களுக்கு பஞ்சமா, விலைவாசியா என்ன கிடக்கிறது மரவள்ளி தின்ன? மிகப் பழைய காலத்து மனிதர்கள் கடவுள்கள். மரச்சீனிக் கிழங்கு இன்னும் நாஞ்சில் நாட்டின் கல்யாணப் பந்திக்கே வந்து சேரவில்லை.

காலணா, அரையணா பாக்கிவைத்துவிடுவார்கள். முறித்துப் பேசினால் யாவாரம் போச்சு. சிலரிடம் உண்மையிலேயே இருக்காது. நினைவிருந்தால் அடுத்த நாள் கேட்டு வாங்கலாம். சிலருக்கு அது ஒரு விலை குறைத்து வாங்கும் உத்தி. கிட்டத்தட்ட சிவனாண்டிக்கு இந்த யாவாரம் நாயர் பிடித்த புலி வால். ஒரு வகையில் வாழ்க்கையே நாயர் பிடித்த புலி வால்தான். கச்சவடம் நிறுத்தினால் எப்படியும் இருபது, முப்பது போய் கடன் நின்றுபோகும். எந்தக் காலத்திலும் வசூல் ஆகாது. சரி, இதை நிறுத்திவிட்டு வேறு பள்ளிக்கூட வாத்தியார் வேலைக்கா போக இயலும்?

கொழுஞ்சிக் குழை பிடுங்கிக் கட்டிக்கொண்டு வரலாம். சுக்கு நாறிப் புல் அறுத்துக் கட்டி வரலாம். மலம்புல் அறுக்கலாம். விறகு வெட்டி வந்து விற்கலாம். கறிச் சக்கை யாவாரம் செய்யலாம். காவேரி ஆறு கஞ்சியாகவே ஓடினாலும் நாய் நக்கித்தானே குடிக்கணும்?

எல்லோரையும் போல ரூபாய்க்கு மூன்று படி அரிசியை நம்பித்தான் ஓட்டுப் போட்டான் சிவனாண்டி. ஆட்சிக்கு வந்ததும் அயத்துப் போயிற்று எல்லோருக்கும். கும்பி மறக்குமோ வேளைக்குப் பசிக்க?

கட்சிக்காரர்களும் கட்சிக்காரர்களுக்குக் காசு கொடுத்தவர்களும் கள்ளுக் கடை, சாராயக் கடை ஏலம் எடுத்தார்கள். ஊருக்கு வெளியே, சற்று உள் ஒதுங்கி, கள்-சாராயக் கடைகள் வந்தன. முடைந்த தென்னை ஓலைக் கூரையும் பக்க நிரைசலுமாக பெருங்கூட்டம் சாய்ந்தது. கடை வாசல்களில் வறுத்த சாளை, அயிலை, செந்நவரை என மலிந்த மீன்கள். அவித்த தாராக் கோழி முட்டை, கடலை சுண்டல், காரச்சேவு, கண்டம் வெட்டி அவித்த மரச் சீனிக் கிழங்கு.

அன்றைய யாவாரம் முடிந்து, வெறும் சாக்கைக் கக்கத்தில்வைத்துக்கொண்டு, சிவனாண்டி வீட்டுக்கு நடந்தான். ஒரு டீயும் குடித்து, பீடியும் பற்றவைத்து கால்களில் தெம்மாங்கு சலங்கை கட்டி ஆட...

நான்கு கள் - சாராயக் கடைகளுக்கு, மேற்படி தீனிகளை விற்க ஏற்றிருந்த கீழூர் சுப்பையா அண்ணாச்சி, சிவனாண்டியை வழி மறித்தார்.

“ஏய் செவனாண்டி... வா! யாவாரம் எல்லாம் முடிஞ்சு வீட்டுக்குப் போறயாக்கும்? என்னா, வெறும் சாக்கை சுருட்டிட்டுப் போற?”

“வள்ளிசா வித்துப்போச்சு அண்ணாச்சி. வீட்டுக்குக்கூட இன்னைக்குக் கெழங்கு இல்ல... போற வழியில அரிசியும் மீனும் வேண்டணும்.”

“தெரியுமில்லா ஒனக்கு? நாலு கள்ளுக் கடைக்கு நாந்தான் சாக்னாக் கடை.”

“அது எப்படி அண்ணாச்சி? ஒரே ஆளு நாலு கடை எப்பிடி பாப்பேரு? நீரு என்ன பி.யூ.சின்னப்பா நடிச்ச ஜகதலப் பிரதாபனா?”

“பாரு... இதுக்குத்தான்... இதுக்குத்தான் நீ கெளங்கு சுமக்கப்போறே. நான் காலாட்டிக்கிட்டு இருந்து யாவாரம் பாக்கேன்.”

“சம்பளத்துக்கு ஆளு வெச்சிருக்கீரா?”

“சம்பளத்துக்கு ஆளு வெச்சு நொட்னாப்பிலே தான்... விக்கதுலே பாதி அவன் கொண்டுக்கிட்டுப் போவான்... நாம விரலைச் சூப்பீட்டுத் தெருவோட போலாம்.”

“பின்னே என்னதான் செய்யேரு?”

“ஒரு கடையிலே நான் இருப்பேன்... ஒண்ணுலே எம் பொண்டாட்டி இருப்பா... ஒண்ணுலே எங்க அம்மை... ஒண்ணுலே என்னோட மாமியாரு.”

“நாசமாப்போச்சு... கள்ளுக் கடை வாசல்லே?”

“எலே, மாந்தையா? எம் பொஞ்சாதிக்கு அம்பது வயசாகு. எல்லாம் நிண்ணாச்சு. அம்மையையும் மாமியாளையும் கடத்தீட்டுப் போயி என்ன செய்ய? அது கெடக்கட்டும். ஒன்னைக் கூப்பிட்டது வேற ஒரு காரியத்துக்காக்கும். நல்ல கெவனமாக் கேளு... சங்கதி வெளையாட்டுல்ல. தெனமும் எனக்கு அம்பது ராத்தல் மரச் சீனிக் கெளங்கு வேணும். நல்ல மொறட்டுக் கெளங்கா, சட்னு வெண்ணெ மாதிரி வேகக்கூடிய தாட்டு... கடுப்போ கசப்போ இல்லாம... என்ன நான் சொல்லுகது? நீயும் நம்ம பய... ஒனக்கு ஒரு ஏந்தலாட்டு இருக்கும்... அதான் உன்னைக் கூப்பிட்டுக் கேக்கேன். எனக்கு வேற ஆளு கெடைக்காம இல்ல.”

“கொண்டாறதுலே பாதிச் சாக்கு உமக்குப் போட்டுட்டா, நான் பொறகு ஊருக்குள்ளே என்னத்தைக் கொண்டுகிட்டுப் போயி விக்கது?”

“நீ ஒரு மட சாம்பிராணி... மொத்தமா ஒரு இடத்திலே கொண்டுபோட்டுட்டு காசு மாறப்பட்ட வழியைப் பாப்பியா? ஊருக்குள்ளே போயி, கடனுக்கு கூவிக் கூவி விப்பியா?”

“அதுக்கில்லே... பத்து அறுவது குடும்பம் எனக்கக் கெழங்கை நம்பிப் பசியாறும்.”

“நீ கடனுக்குத் தராண்டாம்டே... ரொக்கம். முன் கூறா வேணும்னாலும் வாங்கிக்கோ. என்னா, நாளையிலேர்ந்து போடுகியா?”

“பாக்கட்டும்... யோசிச்சுச் சொல்லுகேன்.”

“இதுலே யோசிக்கதுக்கு என்ன மயிரு இருக்குலே? இல்லேண்ணா ஒரு காரியம் செய்யி... ஒம் மகனுக்கு என்ன வயசாகு?”

“ஏன்? எதுக்கு? பதினஞ்சு...”

“கூடக்கூட பாத்திருக்கேன்... கை காலு தெறனாத்தான் இருக்கான்.

மலைக்குப் போகச்சிலே கூடக் கூட்டீட்டுப் போலே. ஒரு குட்டிச் சாக்கு கௌங்கு செமக்க மாட்டானா? பாடுபட்டாத்தானே சாப்பிட முடியும்? தொழிலும் பழகின மாதிரி இருக்கும்ல!”

“படிக்காம்ணேன்... பத்து போறான். நல்ல படிப்பாம்ணேன்... பதினொண்ணு பாஸாயிட்டாம்ணா, நம்ம எம்மெல்லே கிட்ட சொல்லி எங்கினயாச்சும் சேத்து விட்டிரலாம்.”

“ஆமா! எம்மெல்லே ஒங்களுக்கு செரைக்கதுக்குத்தான் செயிச்சு வந்திருக்கான். சொளையா இருவத்தஞ்சாயிரம்... பப்ளிக் சர்வீஸ் எளுதுனா? வெச்சிருக்கியா ரொக்கம்?”

“என்னது?”

“ஆமா, பொய்யா சொல்லுகேன்? அதும் உள்ளூர்லே இனவனுக்கு செய்தா ஊரெல்லாம் பாட்டு ஆயிரும்னு, வடமதிக்காரனுக்குத்தான் செய்யானாம். காலம்பற ஒரு நாளு அவன் வீட்டு வாசல்லே போயிருப் பாரு... அவனவன் பெரிய சஞ்சியிலே நோட்டுக் கட்டு வெச்சுக்கிட்டு காத்து கெடக்கதை. தேங்கா வித்தது, மாங்கா வித்தது எல்லாம் இவனுக்குப் பொந்திலேதான்... அதுனால பேசாம ஒம் மகனைக் கூடக் கூட்டீட்டுப் போ...”

“படிக்கப்பட்ட பயல்லாண்ணேன்...”

“ஆமா, படிச்சு பெரிய ஜில்லா ஜட்ஜா ஆகப் போறான். போலே, புத்தியாட்டுப் பொழைக்கப்பட்ட வழியைப் பாரு.”

சிவனாண்டியின் மண்டைக்குள் யோசனைக் கதிர்வீச்சுகள் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்து பாய்ந்தன.

அடுத்த நாள் காலை சிவனாண்டியுடன் அவன் மகன் குமராண்டியும் மரச் சீனி வாங்கப் போனானா?

குமராண்டி போகவில்லை.

போயிருந்தால் அவனுக்கு இந்தக் கதையை எழுதிக்கொண்டிருக்க வாய்ப்பு இருந்திருக்காது!

**-ஆனந்த விகடன், 7.11.2012**

# 12

## பூனைக் கண்ணன் கடத்திய அம்மன்

நினைத்ததுபோல் அம்மன் சிலை அவ்வளவு கனமாக இல்லை. உள்ளே கோயில் கருவறையில் இருப்பது கற்சிலை. அதைக் கிளப்பத்தான் பொக்லைன் வேண்டும். ஆனால், கோயில் உக்கிராண அறையில் பூவரச மரப் பத்தாயத்தில் காலம் முழுக்கக்கிடந்த அம்மன் சிரமம் தரவில்லை. ஐந்து கிலோ இருப்பாள். சின்ன உரச் சாக்கில் அடக்கஒடுக்கமாக நட்டக்குத்தறக் கிடக்கிறாள். மாசி, பங்குனி மாதக் கொடை நாட்களில் வெளியே எடுத்து, புளி போட்டுத் தேய்த்து, மற்றொரு முறை திருநீறு போட்டுத் துலக்கி, தயாராக உள்கோயிலில் அம்மனின் கற்சிலைக்கு இடது பக்கம் வைத்திருப் பார்கள்.

நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு வில்லுப்பாட்டுக்காரர் அம்மன் வரத்துப் பாடி, முரசு எகிறிக் குதிக்க, கோமரத்தாடிகளுக்கு ஆராசனை வந்து ஆடிப் பூ எடுத்து, சுற்றுபாடுத் தெய்வங்களுக்குப் பலி முடிந்து, சாமி கொண்டாடிகள் கோயில் நடைக்கு இறங்கும்போது, கோயில் முன் வாசலில் மான் வாகனம் ஜோடிக்கப்பட்டு பீடத்தின் மேல் அம்மன் சிலையை இருத்தி, மணிக்கயிற்றால் வரிந்துகட்டி, சர்வ அலங்காரியாகச் சற்றுக் கர்வத்துடன், கனிந்த பார்வையுடன் வீற்றிருப்பாள் அம்மன். அவளுடைய கையில் அவள் தோள் உயரத்துக்கு முச்சூலம் பொன்னே

போல் ஒளிரும்.

சற்றுப் பயமாகவே இருந்தது பூனைக் கண்ணனுக்கு. எத்தனையோ குற்றங்கள், பாவங்கள் செய்திருக்கிறான். என்றாலும், தினமும் அம்மனின் மஞ்சள் காப்பைப் பூசித் திரிபவனுக்கு அவளையே களவாடுவதில் அச்சம். அன்ன விநாயகம் அடியாளான பூனைக் கண்ண னுக்குப் பலதரப்பட்ட வேலைகள். நாகரிக உலகத்தில் பல நிறுவனங்களில் சமூக விரோத வேலைகளுக்கு என்றே, நல்ல சம்பளத்தில் கார் வசதியுடன், செல்போன் சகிதம் அலுவலர் ஒருவர் இருப்பார். லஞ்சம் பேசி, அதை எவ்விடம், யாரிடம் கொடுப்பது; மது விருந்துகள் ஏற்பாடு செய்வது; சட்ட விரோதமாக உதவிகள் செய்வோருக்கு வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்பாடுசெய்வது; கேளிக்கைகளுக்கு அழகிகளைக் கூட்டிக்கொடுப்பது என ஏகமான பணிகளை அவர் பார்ப்பார். இவற்றை சின்னத் தோதில், ஊர்ப்புறத்துத் தோட்ட உரிமையாளருக்குச் செய்துகொடுப்பது பூனைக் கண்ணனின் வேலை. பண்ணை வீடுகளுக்கு இரவு விருந்தாட வரும் சின்னச் சின்னப் பெரும்புள்ளிகளுக்கு, அவர் சொல்லும் கேளிக்கைக்காரிகளை டிரைவருடன் சென்று பாதுகாப்பாகக் கொணர்ந்து, அதிகாலை திரும்பக்கொண்டுவிடுவது; சில்லறை வெட்டுக் குத்துக்களுக்கு ஆட்களை அடையாளம் காட்டுவது; எதிர்க் கட்சிக் கூட்டங்களில் சாரைப் பாம்பு அவிழ்த்துவிடுவது; தேர்தல் காலங்களில் சாக்குமூட்டைகளில் ரூபாய் நோட்டுகளைக் கொண்டுசேர்ப்பது... சின்னத் தோதில் அரசியல் கட்சிக்கு ஆதரவாக இருப்பவரின் அடியாளாக இருப்பது என்பது லேசுப்பட்ட காரியமா என்ன?

அன்னவிநாயகம் மத்திய-மாநில அமைச்சராக, நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினராக, மாநகர-பெருநகரத் தந்தையாக, மாநில ஆளுநராக எல்லாத் தகுதிகளும் உடையவர். இன்றெல்லாம் பணம் அலையும் காற்றில், உறைந்த மலையில், சலிக்கும் மணலில், பொடியும் கரியில் காய்க்கிறது. தவிரவும் பெரும்புள்ளி ஒருவரின் பினாமி ஆகவும் தனது மனைவியை, மக்களை, மைத்துனர்களைத் தயாரித்திருந்தார். முன்னால் போனால் கடிக்கும்... பின்னால் போனால் உதைக்கும் என்பதால், ‘சட்டம் ஒரு கழுதை’ என்றானாம் அறிஞன் ஒருத்தன். ஆனால், மேதைகள் வடிவமைத்த இந்தியச் சட்டம் இல்லாப்பட்டவனைத்தான் கடிக்கும், உதைக்கும்.

அன்னவிநாயகத்தின் பண்ணை வளாகத்தில்தான் பூனைக் கண்ணனின் இருப்பு. கூட இரண்டு நாட்டு நாய்களின் கூட்டு. செல்லும், செலவும், உணவும், துணியும் கிடைக்கும். கட்சிப் பேரணிகள், எழுச்சி

மாநாடுகள், பொன்மொழி மாநாடுகள் என்று வெள்ளை ஸ்கார்ப்பியோவில் அன்னவிநாயகம் போகும்போது செந்நாய்ப் படைபோல, ஓட்டுநருக்குப் பக்கத்து இருக்கை, பூனைக் கண்ணனுக்கு. ஸ்கார்ப்பியோ நிற்க யத்தனிக்கும்போதே கதவு திறந்து குதித்து, அன்னவிநாயகத்துக்குக் கதவு திறந்துவிடுவது, அவர் நடக்கும்போது, 'விலகு விலகு' என்று ஆள் ஒதுக்குவது, தங்கும் இடங்களில் எடுபிடி வேலைகள் செய்வது என்று ஏகப்பட்ட மக்கள் பணி அவனுக்கு. பூனைக் கண்ணன் சின்னத் தோதில் செய்த வேலைகளைப் பெரிய தோதில் செய்தார் அன்ன விநாயகம்.

அம்மனைத் தலையிலும் தூக்க முடியாது, தோளிலும் போட முடியாது. சாக்கின் வாயைச் சுருட்டிப் பிடித்து, புத்தகப் பையைத் தோளில் மாட்டுவதுபோலப் பற்றி இருந்தான் பூனைக் கண்ணன். அருள் பாலிக்கும் கமலக் கால்களாலும், மூவுலகின் பசியாற்றும் பொற்கிண்ண முலைகளாலும், அபயம் அளிக்கும் கருணைக் கரங்களாலும், திரிசூலத்தாலும் முதுகில் குத்திக்கொண்டே இருந்தாள் அம்மன்.

பூனைக் கண்ணனுக்குத் தலைவர் உத்தரவு வேறாக இருந்தது. 'ஊர் முதலடி' எனும் பதவி நிலவுடமையாளர், ஆள்கட்டு உடையவர், அதிகாரம்கொண்டவர், பணம் போட்டுப் பணம் எடுப்பவருக்கு ஊர் 'மனமுவந்து' அளிப்பது. இந்து அறநிலையத் துறை ஆலயங்களின் தக்கார்போல. தக்கார் என்பவர் பெரும்பான்மையும் தகவிலர்தானே! ஆனால், அரசாங்கக் கெடுபிடிக் குள் வராத ஊர்க் கோயில்களுக்கு, ஊரே முதலடியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும். கோயில் நிலங்களைப் பாட்டம் கொடுத்து நெல் அளந்து வாங்குவது; அல்லது தானே பாட்டமாக வைத்துக் கொள்வது; நெல்லைப் பத்தாயப் புரையில் போட்டுவைத்திருந்து, சமயம் பார்த்துக் கூடுதல் விலைக்கு விற்று, குறைந்த விலையில் கணக்கை எழுதிக்கொள்வது; வரி வசூலித்துக் கொடை விழா நடத்துவது; கோயில் பிரசாதங்களில் முதல் மரியாதை பெறுவது; கோயில் சாவி, அம்மன் சிலை, வெள்ளி அங்கிகள், உருப்படிகள் பாதுகாக்கப்படும் பத்தாய சாவி, நெல்புரை சாவி, செம்பு - உருளி-நிலவாய் -அண்டா- போணி - குட்டுவம் எனக் கிடக்கும் பாத்திரப் புரைச் சாவி, கணக்கு வழக்கு கள் எல்லாம் முதலடியின் பொறுப்பில் வரும்.

சரிகைக் கரை வேட்டி, மாரில் சந்தனம், நெற்றியில் திருநீறு, மஞ்சள் காப்பு, குங்குமம் என்றொரு தோரணை உண்டு கோயில் காரியங்களில். சுய மரியாதைக் கட்சி, இந்திய தேசியக் கட்சி, ஊர் முதலடி, எல்லாம் முரண்பாடான கூட்டணி அல்லவா என்று உமக்குத் தோன்றக்கூடும்.

இன்றைய சமூகப் பின்நவீனத்துவம் அது. நள்ளிரவில், கோயில் சாவியை எடுத்துக் கொடுத்து, உக்கிராணப் புரைச் சாவியை அடையாளம் காட்டி, பத்தாய சாவியைத் தெரியக்காட்டிச் சொன்னார் முதலடி.

“உருப்படிகளைத் தொடப்படாது. அங்கிகள்ல கை வைக்கப்படாது. அம்மன் சிலைய மட்டும் இந்தச் சாக்கிலே போட்டுக் கட்டிக்கொண்டாந்திரு. ஒரு குருவி அறியக் கூடாது. வீட்டுக்குக் கொண்டாராண்டாம். வயக்காட்டோட பம்மிப் போய், இலுப்பாத்தங்கரையிலே ஏறு... அங்க நம்ம கட்டைப் பூலிங்கம் நிப்பான். அம்பாசடர் காரு இருட்டிலே ஒதுங்கி நிறுத்திக்கெடக்கும்... நேரே கும்பகோணம் போயிருங்கோ. விடிஞ்ச பெறவு நான் ஸ்கார்ப்பியோவில் பொறப்பட்டு வாறன்... என்னா? சூதானமாச் செய்யணும்... அம்புட்டேனு வையி, கொரவளையை அறுத்தாலும் என் பேரு வெளியில வரப்படாது. கோயிலைப் பூட்டி, சாவியை மட்டும் நம்ம மாட்டுத் தொழுவிலே வெச்சிட்டுப் போ. செலவுக்குப் பணம் கட்டப் பூலிங்கத்துக்கிட்டே இருக்கு... போ... பாத்துச் செய்யி.”

ஆனால், பணிக்கப்பட்ட திசைக்கு எதிர்த் திசையில் ஓடிக்கொண்டிருந்தான் பூனைக் கண்ணன்.

போன கொடைக்கு அம்மன் சிலையைத் துடைத்துச் சுத்தப்படுத்த வெளியே எடுத்தபோது, அன்னவிநாயகத்தின் இரண்டாம் மருமகன் தொல்லியல் துறை அதிகாரியாக இருந்தான். கொடை பார்க்க மாமனார் வீட்டுக்கு வந்தவன், பொழுது போகாமல் கோயிலுக்குள் நுழைந்தான். இரவு வாகனத்தில் வைத்துக் கட்ட, புளிபோட்டுத் துலக்கிவைத்திருந்த அம்மன் சிலையைத் தூக்கிப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். முகத்தில் வியப்பு ரேகைகள் அடர்ந்தன.

அன்னவிநாயகம் சொன்னார் “என்ன மாப்பிள? வெறும் பித்தளைதான். சவம் கறுத்துப் போயிக் கெடந்து...”

மருமகன் ஒன்றும் சொல்லவில்லை. திங்கள் இரவில், கோயிலில் ‘குடி அழைப்பு’ முடிந்த பிறகு, அன்னவிநாயகம் வெற்றிலை போடும்போது மெதுவாகப் பேசினான்.

“மாமா, அம்மன் சிலை பித்தளை இல்ல.”

“பின்னே?”

“ஐம்பொன்னாக்கும்...”

“ஓகோ! அப்படின்னா மதிப்புக் கூடுதல்லா?”

“ம்... இந்த உசரம், எடைக்கு ஐம்பொன்னுன்னா உள்ளூர் மார்க்கெட்ல பத்துப் பதினஞ்சு லகரம் போகும். ஆனா, சங்கதி அது இல்ல. சிலையோட பீடத்தில் ஒரு லச்சினை இருக்கு, கவனிச்சேளா?”

“லச்சினைன்னா?”

“அரச முத்திரை. என் கணக்கு சரியா இருந்தா... ஆயிரத்தி நூறு வருஷத்துக்கு முந்தினது. உங்க ஊர்ப் பெயரைவெச்சுப் பாத்தா வீரநாராயணன் சடையன் காலமாட்டு இருக்கும்.”

“அதாரது மாப்பிளை?”

“இரண்டாம் வரகுண பாண்டியன்.”

“எனக்கு ஒரு எளவும் மனசிலாக மாட்டங்கு. விலை இன்னும் கூடுதலாட்டு இருக்குமா?”

“உள் நாட்டுல கோடி பெறும்... கண்டம் தாண்டிப் போயிட்டா பல கோடி.”

“அது எப்பிடி மாப்ள?”

“அது அப்படித்தான். ரகசியமா வெச்சுக்கிடுங்கோ... உங்க ஊரு சோத்துமாடனுகளுக்குத் தெரியாண்டாம்.”

அன்ன விநாயகத்துக்கு அதன் பிறகு உட்கார்ந்து கிடக்க மனமில்லை. தோது பார்த்து, அம்மன் சிலையை வெளியே எடுத்து கும்பகோணம் கொண்டுபோய், அதே போல் பித்தளைச் சிலை ஒன்று செய்து வாங்கி, அதைக் கோயிலுக்குள் வைத்துவிடலாம். மருமகன் நல்ல விலைக்கு ஐம்பொன் அம்மனை விற்றுத்தருவார்.

அம்மனுக்குச் சற்று நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது. ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும் கொடைக்கு வெளியே வந்து, சுத்தக் காற்றைச் சுவாசித்து, களபம்- சந்தனம்- பன்னீர்- சூடம்- சாம்பிராணி வாசம் மோந்து, பிச்சி-அரளி-கமுகம் பூக்கள் சூடி, ஊரை உலா வருவதோடு சரி. பிறகு, அல்லும் பகலும் அறுபது நாழிகையும் பத்தாயத்துக்குள் காற்று இறுக்கம், வவ்வால் வாசம், எலி நடமாட்டம் புழுங்கிய சிவப்புப் பட்டுச் சொரசொரப்பு. பூனைக் கண்ணன் மீது கொஞ்சம் நன்றி உணர்ச்சியும் ஏற்பட்டது. நட்டக்குத்தற அம்மனைச் சாக்கினுள் நிறுத்தி, சணல் கொண்டு சாக்கைக் கட்டி, பத்தாயத்தைப் பூட்டி, உக்கிராணப் புரையைப் பூட்டி, கோயில் நடை சாத்தி, முதலடி வீட்டு மாட்டுத்

தொழுவத்தின் மாடக்குழியில் சாவியை வைக்கப்போனபோது... விரல் நீளப் பாம்பு ஒன்று துள்ளி ஓடியது. நல்ல காலம்தான் என்று எண்ணினான். அம்மன் தனக்குள் மெள்ள நகைத்துக்கொண்டாள்.

ஊர் எல்லைக்கு வந்தான். பிள்ளை நிலா வெளிச்சம் கூட இல்லை. பூனைக் கண்ணன் என்பதே அவனுக்குக் காரணப் பெயர்தான். இருட்டிலும் அவனுக்குக் கண் பார்வை அப்படி. புழுதியில்கிடக்கும் நாலணாகூடத் தெரியும். ஊர் எல்லை வந்து, கிழக்குப் பக்கத் தடத்தில் வயற்காட்டு வரப்பில் இறங்கி நடக்கணும் மருதமரங்களை அடைய.

“மேக்கே போலே மயிராண்டி” என்றது மனக்குரல். சற்றுத் திடுக்கிட்டான். காரணம் இல்லாது மனது சொல்லாது. பல நேரங்களில் மனக் குரலைச் செவி மடுத்து, அவன் தோற்றதில்லை. மேற்கு நோக்கி, ஓடைக் கரையில் அஞ்சல் ஓட்டமாக ஓடத் தொடங்கினான். காதோரம் கால் சலங்கை சிணுங்கினாற் போல் நகை ஒலி. பேருந்து சடாரென இறக்கத்தில் இறங்கும்போது ஏற்படும் மூலாதாரக் கூச்சம். சாக்கு மூட்டையைத் தோளில் சுமக்கும்போது அம்மனின் செப்பு முலைக் காம்புகள் முதுகில் குத்துகின்றனவோ என்றொரு மருள். இலக்கு ஏதுமின்றி ஏவப்பட்ட கணைபோல் நெட்டோட்டமும் அஞ்சல் ஓட்டமுமாகப் பூனைக் கண்ணன் வந்து சேர்ந்த இடம் பத்மனாறு. புறப்பட்ட இடத்தில் இருந்து மேற்குத் திசையில், மலைஅடிவாரத் தில் அறுத்துக்கொண்டு ஓடும் பத்மனாற் றைத் தாண்டினால் மேற்கு மலை ஏறும் தடம் பிரியும்.

சளசளவென்று ஊற்றியது வியர்வை. ஆற்றைக் கடக்க பாலமும் ஆற்றில் இறங்கப் படிக்கட்டும் இரண்டு மைல் தெற்கே இருந்தன. தொண்டை வறண்டது பூனைக் கண்ணனுக்கு. ஆற்றில் மாடு இறங்கும் தடம் ஒன்று தென்பட்டது. ஆனி-ஆடிச் சாரல் தெளிந்து இறங்கிய மலை வெள்ளம் இடுப்புக்கு மேல் ஓடியது. குனிந்து மாடு குடிப்பதுபோல் ஆற்றைப் பருகினான். திரும்பவும் கரையேற முயன்றபோது, ‘மேலக் கரைத் தடத்திலேதான் ஏறேன்... மூதி’ என்றது மனக் குறளி.

கோயிலைப் பூட்டி இறங்கியபோது ஒரு மனத் தைரியத்துக்காக, உள்நடை வாசல் ஓரம் தொங்கிக்கிடந்த மரக் கொப்பரையில் கைவிட்டு நெற்றி நிறையத் திருநீறு பூசியிருந்தான் பூனைக் கண்ணன். இப்போது, ஆற்றில் நின்றவாறு எட்டி சாக்கைக் கரையில் வைத்துவிட்டு, அம்மனையே திருடிய குற்றத்தைக் கழுவிவிடுவதுபோல முங்கிக் குளித்தான். சிவந்தெரியும் கண்கள் தணிந்தன.

மருத மூட்டில் ரொம்ப நேரமாகக் காத்திருந்த கட்டைப் பூலிங்கம்

காரைக் கிளப்பிக் கொண்டுபோய் அன்னவிநாயகத்திடம் சொல்லி இருக்கக்கூடும். தேளாகக் கடுக்கத் தொடங்கியிருப்பார்.

“எங்க போயிருவான்? மப்புல மாடுகளுக்கு இடையில தொழுவத்துல விழுந்துகிடப்பான். மசணை மாடன்... நீ போய்ப் படுடே பூலிங்கம்... காலம்பற பாப்போம்” என்றார் முதலடி.

பூனைக் கண்ணன் மோசக்காரனல்ல. கோவணம் கட்ட அரைஞாண்கொடிகூட இல்லாமல் வந்தவன். ‘மூதி சுருட்டுப் பிடிக்கும். கள்ளோ, சாராயமோ மாந்தும். ரெண்டாளம் சோறு திங்கும். வயசு நாப்பது இருக்கும். இதுவரைக்கும் பொம்பளைக்காகக் கோவணம்கூட அவுத்திருக்க மாட்டான்...’ என்று பாய்ந்தது முதலடியின் சிந்தனை. ஏழெட்டு வயதில் எங்கிருந்து வந்தானோ? ஊராரோ, உற்றாரோ யாரும் அவனைத் தேடி வரவில்லை.

ஆற்றில் குளியல், புறவாசலில் சோறு, பத்தாயப் புரையில் உறக்கம். எதையும் ஏவினால் செய்து முடித்திருப்பான். கழுத்தறுத்தாலும் காட்டிக்கொடுக்க மாட்டான். அது பற்றிய பயம் இல்லை அன்னவிநாயகத்துக்கு. மேலும், அம்மன் சிலை யைத் தானே அடித்து மாற்றச் சொல்லிவிட்டு, அரசு வல்லாண்மைத் துறையிடம் புகார் கொடுக்க இயலுமா? எதுவானாலும் விடிந்து பார்த்துக்கொள்ளலாம் என்று படுக்கப்போனார்.

பூனைக் கண்ணனை, சித்தமோ, சிவமோ, சிவசக்தியோ, ஏதோ ஒன்று உள்ளிருந்து செலுத்திக் கொண்டிருந்தது. சிலையை மடை மாற்றி விற்கவோ, கடத்தவோ அவனுக்கு அவ்வளவு கருத்தில்லை. ஆற்றின் மறுகரை ஏறி, சிலை இருந்த சாக்கை அலுங்காமல் சற்று மாற்றிவைத்து, ஈரத் துணியை உரிந்து முறுக்கிப் பிழிந்து, உதறிக் கட்டினான்.

‘இருட்டில் எவம் பார்க்கக் கெடக்கு?’ என்றோடியது மனக் குரங்கு.

‘ஏண்டா... இங்கொரு பொம்பளை இருக்கது ஓர்மை இல்லையா?’ என்றொரு குரல் குறுக்கு வெட்டியது. யார் பேசியது? அம்மனா... அசரீரியா? மனக் குறளியா? திரும்பத் திரும்பக் கேட்ட சிறுவரி! சிலை எந்தக் காலத்திலடா பேசியது?

அன்னவிநாயகம் அதிகாலையில் குளித்து, திருநீறு அணிந்து, சாமிப் படங்களுக்குத் தூப தீபம் காட்டி, நானாவிதப் பரிமள புஷ்பங்கள் சாத்தி, மணி அடித்துப் பாடும் பாட்டொன்று மனத்துக்கண் ஓடியது. ‘அம்மையே... அப்பனே... ஒப்பிலா மணியே...’

ஈரத் துணியுடன், காடடைந்து கிடந்த தலைமயிர் காற்றாட,

அம்மனைத் தூக்கித் தோளில் சாத்தினான். கும்மிருளில் சிறு விலங்குகளின் அசைவுகூட இல்லை. எல்லாம் உணவெடுத்து ஓய்வும்கொண்டனபோலும். காட்டு வெருதுப் பூனை ஒன்று ஓடியது குறுக்கே. கெட்ட சகுனம் என்று தோன்றியது. 'கடவுளையே சுமப்பவனுக்குச் சகுனம் என்னடா பூனைக் கண்ணா?'

'போச்சுடா' என்றான் பூனைக் கண்ணன்.

ஆற்றங்கரை தாண்டி, புறம்போக்கு வெட்டித் திருத்திப் போட்டிருந்த கடலை விளை, காணம் விளை, எள்ளு விளை, மரச்சீனி விளை தாண்டி, பனந்தோப்பு, மா, குழை மரங்கள் காடடைந்து கிடந்த தோப்புகள் தாண்டி... விறுவிறுவென்று மலையேறிக்கொண்டிருந்தான் பூனைக் கண்ணன். விறகு பொறுக்கப்போகும், ஆடு மேய்க்கப்போகும், தடம் ஒன்று தெரிந்தது இருட்டினுள். தெரிந்ததா... இல்லை அம்மன் காட்டினாளா? இளநிலா எட்டிப் பார்த்தது ஏளனத்துடன். எனினும் காடு அடர்ந்துகொண்டும், இருண்டுகொண்டும் போனது. அரவங்களோ, ஓணானோ, எலிகளோ சரசரத்தன புதரினுள். மரத்தின் மறைவில் சிவந்த இரு கண்கள் தெரிந்தன. தாட்டைக் குரங்கோ, முள்ளம் பன்றியோ, காட்டுப் பூனையோ? எடையற்றுப்போயிருந்தாள் அம்மன். வாலைச் சிறுமி ஒருத்தியைத் தோளில் சாத்தி, மலையேறுவதுபோல் சுகமாகவும் இருந்தாள்.

நீண்டு நகர்ந்தது இரவு... மலைச் சர்ப்பம்போல. விடிவுக்கு எத்தனை நாழிகைகளோ? அல்லது விடியாமலேயே போய்விடுமோ? மலையேறும்போது மூச்சு மூக்கு முனைகளிலிருந்து வெப்பமாக, வேகமாகச் சீறிச் சுழன்று வந்தது. ஈரத் துணிகள் உலர்ந்துவிட்டன.

வலது பக்கம் காட்டு ஓடை ஒன்று வளைந்து, சரிந்து ஓடியது. புதர்களை ஒதுக்கி, ஓடையில் இறங்கி, கால் நனைத்துச் சற்று நேரம் நின்றான் பூனைக் கண்ணன். சிரிப்பு பீறிட்டுக் கிளம்பியது. 'என்ன வேலை செய்ய வந்து, என்ன வேலை செய்துக்கிட்டு இருக்கேன்?' சுற்றிலும் புதர்களும் கொடிகளும் முட் தாவரங்களுமாகக் காடு பற்றிக் கிடந்தன. வானத்துக் கருமையுளும் சில நட்சத்திர ஒற்றாடல்கள்... அம்மனை இறக்கி ஓடைக் கரையில் வைத்தான். சாக்கு வாயை அவிழ்த்தான்.

"தண்ணி சில்லுனு இருக்கு... குளிக்கியாட்டி குட்டி?" என்றான். அவள் முகத்தில் எஞ்ஞான்றும் மங்காத மாய முறுவல். உரச் சாக்கை உரித்து புதர் மேல் எறிந்துவிட்டு, ஓடையில் நிறுத்தி, இரு கரங்களாலும் தண்ணீர் கோரிக்கோரி அம்மன் மேல் ஊற்றினான். கை விரல்களால்

தண்ணீரை வழித்துத் தடவினான். பாதங்களும், கால்களும், துடைகளும், வரியோடிய வயிறும், நாபிச் சுழியும், ஒடுங்கிய இடையும், முலைகளும், கழுத்தும், கரங்களும், கன்னமும், உதடுகளும் கண்களும், நெற்றியும், உச்சியின் மணிமுடியும்...

மறுபடியும் யாத்திரை. இருமுடி கட்டி சபரிமலை ஏறுவதுபோல். 'தேக பலம் தா... பாத பலம் தா... தாது பலம் தா... மோக பலம் தா...'! மலை மேல் யாரோ விருந்தினர் விடுதி கட்டி வைத்திருப்பது போலவும், போனவுடன் வெந்நீரில் குளித்து, சட்டமாகச் சாப்பிட்டு, பஞ்ச சயன மெத்தையில் கால் நீட்டிப் படுக்க வேண்டியதுதான் என்பதுபோலவும் வேகமாக நடந்துகொண்டிருந்தான். களைப்பில்லை, சோர்வில்லை, பயம் இல்லை, துன்பம் இல்லை. மலையின் தோள் பகுதியில் நடந்துகொண்டிருந்தான். கிழக்கு வெளுத்து வருவதுபோல் இருந்தது. பறவைகள் சிலம்பின. கருமையின் கட்டுக் குலைந்து, காடு கண் விழித்துச் சோம்பல் முறித்தது. எந்த மாற்று யோசனையுமின்றி, ஏதோ கோயில் சந்நிதிக்குச் சென்று தேவ தரிசனம் செய்ய இருப்பவன் வேகத்துடன் பூனைக் கண்ணன் நடந்தான்.

தெய்வத்தைக் கீழே இறக்கிவைத்துவிட்டு, சூரியனைக் கை தொழுதான். புதிய காட்சி, புதிய உதயம் என்றாலும் தோள்பட்டை வலித்தது. கால்கள் கடுத்தன. இரவு முழுக்க முழித்த கண்கள் காந்தின. பல் விளக்கிவிட்டு, பின் வாசலில் நின்றால் பெரிய நாச்சியார் தேநீர் ஊற்றித் தரும் நேரம். எங்காவது படுத்து உறங்கினால் போதும் என்றிருந்தது. வயிறு, குடல் முறிப் பண் பாடியது.

என்ன இது பைத்தியக்காரத்தனம்? திரும்ப மலை இறங்கி, தலைவர் வீட்டுக்குப் போய்.... 'தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே!' எனலாம். இவளை இங்கோர் புதரிடைப் போட்டுவிட்டுத் தேசாந்திரியாகப் போய்விடலாம். அல்லது எங்காவது கொண்டு விற்று விடலாம்.

'கடவுளை விற்கவோ வாங்கவோ முடியுமாடா மூடா?'

'எல்லாம் இந்த இவளால்தானே! சமுண்டித் தள்ளிரலாமா' என்று காலைத் தூக்கினான். முதுகு, பாறை மீது மளார் என அடிக்க, சறுகி மல்லாக்க விழுந்தான். நல்லவேளை பிடரியில் அடிபடவில்லை. கலகலவெனச் சிரித்தது யார்! கானுயிர்களா? சிரிப்பு, வலி மறைத்து இனித்தது.

'என்னட்டி? சிரிப்பா இருக்கா? ஆளைப் போட்டுப்

பதங்குலைக்கியே!'

'நானாடா... என்னை இங்கே தூக்கியாரச் சொன்னேன், பைத்தியாரா? பாட்டு கேட்டிருக்கியா - விதி ஒன்றது பிடர் பிடித்து உந்த நின்றது!'

'ஆமா! இதுல பாட்டு வேற! இப்பம் என்ன செய்யலாம்? கடவுளைக் கள்ள மொதலாட்டு விக்க மனசில்லே!'

'கடவுளை விக்கத்தாண்டா நாயே, கண்டம் விட்டுக் கண்டம் கள்ள மொதலு வருது...'

கனத்த மௌனம். சூரியன் வெப்பக் கதிர் வீச்சைத் தொடங்கினான். பெற்ற பிள்ளையை வாரி அணைப்பதுபோல், நெஞ்சோடு அம்மனைச் சேர்த்து பிடித்தபடி மலையேற ஆரம்பித்தான். தடம் என்று ஒன்று இல்லை. கனத்த புதர் மண்டிய காட்டினுள் கால் போன வழி எல்லாம் தடம்தான். ஏறியேறிக் களைத்து மொட்டைப் பாறையொன்று முட்ட, அதன் காலடியில் நின்றான். மழைக்கும் வெயிலுக்கும் ஓராள் ஒதுங்கத் தோதாகச் சாய்ந்து நின்றது பாறை. வெடிப்புகளில் குற்றுச் செடிகள் முளைத்துக்கிடந்தன.

'என்னா... இங்கின குத்த வெச்சிரலாமா?' என்று கேட்டான் பூனைக் கண்ணன். குத்துச் செடிகள் சிலவற்றைப் பிடுங்கி, வாருகோல் போலச் சேர்த்துப் பிடித்து, பாறை மீது பரவிக்கிடந்த விலங்கின விட்டைகள், புழுக்கைகளைப் போக்கினான். புதர்களைப் பிடுங்கி ஒதுக்கினான். கொஞ்சம் படுக்க வேண்டும் என்று தோன்றியது. துண்டை உதறிப் பாறை மேல் விரித்து, வலக் கையை மடித்துத் தலைக்குவைத்துப் படுத்தான். அவனை வெறித்தவாறு நின்றிருந்தாள் அம்மன். நல்ல நிழல், தண்காற்று. உறக்கம் அள்ளிக்கொண்டுபோனது. தன்னை மறந்த உறக்கத்தில் நெடுநேரம் உறங்கினான். கண் விழித்தபோது, சூரியன் மேற்கில் சாய்ந்திருந்தது.

எழுந்து, சடைவு முறித்து அம்மனை அமர்த்த வாகான இடம் தேடினான். நின்ற பாறையும் கிடந்த பாறையும் சந்திக்கும் இடத்தில், உட் சரிவில் தளம் நிரப்பாக இருந்தது. நட்டமாக நிறுத்தினான். லேசாகப் பீடத்தில் ஆட்டம் இருந்தது. பாறைச் சில்லு எடுத்து அண்டை கொடுத்தான்.

கொடும் பசி. அவளுக்கும் பசிக்கும்தானே! சலசலத்து ஓடியது சிற்றோடை. படுத்தவாக்கில் குளித்தான். ஓடைக் கரையில் அகன்று விரிந்து ஆடிய சேம்பு இலையில் தண்ணீர் முகர்ந்து அம்மனைக்

குளிப்பாட்டினான். காற்று அவள் மேனியைத் தழுவித் துடைத்தது. பூத்திருந்த மஞ்சணத்தியைத் தழையுடன் பறித்து, சூட்டினான்.

தின்னக் கிடைக்குமா ஏதும் என்று தேடினான். சற்றுத் தொலைவில் காட்டுப் பலா, சிறு கோட்டுப் பெரும்பழங்கள். மந்திகள் பழம்பறித்துக் கையால் பிளந்து, கை நுழைத்துச் சுளை எடுத்து, கொட்டை வீசி, சாறொழுகத் தின்றுகொண்டிருந்தன. குரங்குகளுக்கு ஒதுக்கமாக நடந்து... தாழ்ந்து தொங்கிய பலாப்பழம் ஒன்றைப் பறித்துவந்து பாறையில் மோதி, இரண்டாக இரணியன் மார்பைப் பிளப்பதுபோல் பிளந்து, முதல் பாதியை அம்மனுக்குப் படைத்துவிட்டு, மறு பாதியைச் சுளை எடுத்துத் தின்னத் துவங்கினான். காட்டு எலிகள், காட்டு அணில்கள், காட்டு முயல்கள் எட்டிப்பார்த்தன. கூட்டமாகப் பெரிய ஈக்கள் வந்து மொய்த்தன. அவனுக்கு ஏதோ ஒன்று கிடைத்தது தினமும் தின்பதற்கு. சமைக்காத உணவுதான். அம்மன் சைவம். தேடும்போது அவளே முன்நின்று காட்டுவாள். தீ முட்ட அவனிடம் ஒன்றும் இல்லை.

தாயும் மகனுமா? தகப்பனும் மகளுமா?

குறு முயல், காட்டுப் பன்றி, முள்ளம் பன்றி, பெருச்சாளி, அணில், ஓணான், நச்சரவங்கள், விஷமற்ற பாம்புகள், கருடன், செம்போத்து, கருங்காகம், வால் நீண்ட கருங்குருவி, புறா, கிளி, குருவி, சிட்டு, மயில் எனப் புள்ளினங்கள் முறைவைத்துப் பார்த்துப்போகும். புலியும் வெங்கரடியும் வாழும் காடு அல்ல அது. எதுவானாலும் அவனுக்குப் பகை இல்லை. அவனும் எவற்றுக்கும் பகை இல்லை என ஆகிப்போயிற்று.

மா காய்த்தது, புளி உதிர்ந்தது, அன்னாசிப் பழம் மணத்தது. காட்டு எலுமிச்சை, நாரத்தை, வள்ளிக் கிழங்குகள்... எதுவானால் என்ன? குரங்குகள் காட்டித் தந்தன. அம்மனுக்கு குங்கும நிறத்துக் கொழுஞ்சி மலர் ஒரு நாள், காட்டுப் பிச்சி ஒருநாள், தும்பைப் பூ ஒரு நாள், மாம்பூ ஒரு நாள், உண்ணிப் பூங்கொத்துகள் ஒரு நாள்.

தலை மயிர் அடர்ந்தது. தாடியும் வளர்ந்தது. உடுத்த வேட்டி கிழிந்து கோவணம் ஆயிற்று. கோவணம் நைந்து காற்றோடு பறந்தது. தாய் ஒருநாள் சிவ மூலிகை காட்டிக் கொடுத்தாள். நறுமலரை அவளே சூடிக்கொண்டாள். இலை கசக்கித் தின்று பாறை மேல் கண்டம் கிடத்திக் காட்டில் மேகம் போல மிதந்தான். மாடு மேய்ப்பவர், சுள்ளி பொறுக்க வந்தவர், விறகுக்கும் சுக்கு நாறிப் புல்லுக்கும் வந்தவர், மின்னல் போல் தோன்றி மறையும் சடைமுடிச் சாமியாக அவனைக் கண்டு அஞ்சினர். மாடு மேய்க்கும் சிறுவர் சிலர் கூடி ஒருநாள் ஏறி வந்து

பார்த்தபோது, பாறை மீது, தன் பெயரையே மறந்துபோன பூனைக் கண்ணன் நிர்வாணமாகக் கண்ணயர்ந்திருந்தான். கண்ணில்பட்ட அம்மன் சிலையின் சிரசில் கருநாகம் ஏறிச் சுருண்டு படமெடுத்து நின்றது. ஒவ்வொருத்தராக வரத் தொடங்கினார்கள். காலடித் தடம் பதிந்தது. சிலர் சேர்ந்து, பனையோலைக் குடில் ஒன்று வேய்ந்து கொடுத்தனர். அம்மன் குடிலாயிற்று. சிலர் வந்து அரிசிப் பாயசம் வைத்து வழிபட்டுப்போனார்கள். நிழலில் படுத்திருந்த சாமி முன்பும் அம்மன் சிலை முன்பும் தேக்கிலையில் படைத்தார்கள்.

நள்ளிரவுகளில் தூக்கம் வராமல் அம்மனும் பூனைக் கண்ணனும் தனித்திருந்து உரையாடிக்கொள்வார்கள். சீவராசிகள் கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கும், சிதானந்தம் பாடம் கேட்பதுபோல.

பூனைக் கண்ணன் ஒருநாள் அம்மனிடம் கேட்டான், ‘கெட்டவன்னு தெரிஞ்சும் தண்டிக்கலேன்னா, நீயெல்லாம் என்ன சாமி?’

அம்மன் சொன்னாள், ‘நல்லவன்னா யாரு? கெட்டவன்னா யாரு?’

‘போட்டீ... புத்தி கெட்டவளே!’ என்றான் பூனைக் கண்ணன்!

**-ஆனந்த விகடன், 19.6.2013**

# 13

## கடிதடம்

காந்திபுரத்தில், 95-ம் எண் பேருந்துக்கு காத்து நின்று கொண்டிருந்தான் கஸ்தூரி. பசித்திருந்தான் எனினும், உப்பிலிப்பாளையம் போய்த்தான் சாப்பிட வேண்டும். மத்தியானம் இரண்டே கால் ஆகிவிட்டிருந்தது. சற்று முன் ஒரு தேநீர் பருகத் தோன்றியது. எட்டு ரூபாய் ஆக்கிவிட்டார்கள். விலையில்லா அரிசிபோல, அடுத்த தேர்தல் வாக்குறுதியாக, விலையில்லா தேநீர் என்று அருளலாம், பாராளுவோர்.

ஓராண்டு முன்பு, காந்திபுரம் வந்து திரும்ப ஏழு ரூபாய் இருந்தால் போதும். இப்போது தாழ்தள சொகுசுப் பேருந்துக்கு 18 ரூபாய் வேண்டும். அற்புதமோ, சிவனருளோ என 114 அல்லது சாதா 95 கிட்டினால் - பெரும்பாலும் கிட்டாது - ஒரு வழிப் பயணம் நான்கு ரூபாயில் ஒதுங்கும். ஆனால், அற்புதமும் சிவனருளும் பெறுவதற்கே ஒரு அந்தஸ்தும் ஜவேஜுும் வேண்டும். அவர்கள் நகரப் பேருந்துக்குக் காத்துக்கிடக்க மாட்டார்கள்.

சாதா 95 வந்தது. ஒன்பதுக்குப் பதிலாக நான்கு. ஐந்து ரூபாய் மிச்சம். மனத்துக்குள் ஸ்வஸ்திக் குறியை செந்தூரத்தால் வரைந்து, சுபம்- லாபம் என்று எழுதிக்கொண்டான். பேருந்தின் இடதுபுறம் சன்னலோரம். பயணச் சீட்டு வாங்கி, ஞாபகமாய் மிச்சமும் வாங்கி, எதிர்க் காற்றுடன்

இயைந்து பயணம் தொடங்கியபோது, வலது கழுத்தில் ‘சுரீர்’ என்றது. வலியுணர்ந்து இடக்கரம் அனிச்சையாகத் தடவப் புகுமுன், மேலும் காட்டமாய் மற்றுமோர் சுரீர்! தோசையைத் திருப்பிப்போட்டது போல... கவனத்தில் கொள்ளுங்கள், திருப்பிப் போடப்பட்டது தோசை; ரோஸ்ட் அல்ல!

விரல்களில் தட்டுப்பட்டதை நசுக்காமல் எடுத்துப் பார்த்ததில், ஒரு பெரிய கட்டெறும்பு. கட்டெறும்பு எனில் கறுப்புத்தான். உங்களுக்கு உருவ அளவு சொல்ல வேண்டுமானால், கிராம்பு அளவு எனலாம். கொஞ்சம் வலிய காரி. விரலிடுக்கில் இருந்து வழுக்கிக் கீழே விழுந்து ஓடியது.

பேருந்தினுள் எலி, அரணை, ஓணான், குட்டிப் பாம்பு என இவையே நடமாடும்; எப்படிக் கட்டெறும்பு?

பேருந்து விட்டு இறங்கி, செலவாதிக்கு ஒதுங்கும்போது, காடாக மண்டிக் கணிசமாகப் பூத்து விரிந்து, கருவண்டுகள் தேனுண்ண மொய்ப்ப, எருக்கலை மூடுகளில் குடும்பம் குடும்பமாகக் கட்டெறும்புகள் கண்டதுண்டு. காத்து நின்றபோது, காற்றிலாடி நின்ற வேப்ப மரத்தில் இருந்து சட்டையின் தோள் பக்கம் விழுந்திருக்கலாம். அல்லது, மரத்தடியில் ஒதுங்கி நின்ற பேருந்தின் கூரையில் இருந்து ஊர்ந்து இறங்கி இருக்கலாம்.

வழக்கமாக, சொர்க்கத்தில் கட்டெறும்பு என்றுதானே சொல்வார்கள்! கஸ்தூரிக்கு அந்தப் பழமொழி பொதிந்து அலையும் காழ்ப்பின் மீது வெறுப்பு வந்தது. அதென்ன, சொர்க்கத்தில் கட்டெறும்பு போகக்கூடாதா? தற்கால அரசியல்காரர்கள் பூதவுடலுடன் சொர்க்கம் போகும் வரம் வாங்கி வந்திருக்கும்போது, கட்டெறும்பு எவ்வகைப் பாவியினம்? ஆனால், அதற்காகச் சொல்லப்பட்ட பழமொழி அல்ல அது. ‘இன்பமான வேளையில் வந்த இடைஞ்சல்’ என்று பொருள். என்ன இன்பமான வேளை என்று கேட்டால், அதற்கெல்லாம் பொருள் எழுதவியலாது.

நல்லவேளை, கட்டெறும்பாகப் போயிற்று என்று எண்ணினான். ஒரு நாள் கடுக்கும்; அவ்வளவே! செந்நிறத்தில் இருக்கும் மொசறு என்றொரு இனம் உண்டு. மாமரம், கொய்யா, புன்னைமரம் என இலைகளை வளைத்துக் கூடு கட்டும். மானிடரைக் கடித்து, புளிப்புச் சுவையில் திரவம் உமிழ்ந்து, கையோடு செத்தும் போகும். மொசறு, கூட்டமாய் கை காலில் படர்ந்து ஏறிக் கடிப்பது, சில மணித் துணிகள் கடுக்கும். பாதி உடல் சிவந்து, மீது உடல் கறுத்து, கறுப்பும் சிவப்புமான ஒரு இனம்.

கட்டெறும்பின் தரத்தினதுதான் என்றாலும், மூன்று நாட்கள் கடுக்கும். பெயரே கடுத்துவா. சுத்தமான இலக்கணப் பெயர் தெரியவில்லை. கடுத்தவால் என இருக்கலாம் - புலிக்கு கடுவாய் எனப் பெயர் வந்ததுபோல!

நல்ல காலமாக, கட்டெறும்பு கடித்து இதுவரை எவரும் செத்துப்போனதாகத் தெரியவில்லை என்று எண்ணினான். சமீபத்தில் மின்சாரப் பொறி பறந்து, தீப்பிடித்து, மூன்று பெண்கள் மாண்டுபோன பாப்பநாயக்கன் பாளையம் சந்திப்பில் பேருந்து இடப்பக்கமாகத் திரும்பியதும், திடீரென அவனுக்குள் ஒரு கேள்வி பிறந்தது... ‘கட்டெறும்பு என்னத்துக்கு நம்மளைக் கடிக்கணும்?’

தமிழ் சினிமாவில் ஒரு கதாநாயகியைக் கட்டெறும்பு கடித்தது. ஆனால், கட்டெறும்பு கடித்தால் பாட்டு வருமா? தமிழ் சினிமாவில் பாம்பு கடித்தாலே பாட்டு வரும். பெரும் பாம்பு கடித்தால் கூத்து வரும். கதாநாயகியின் கட்டெறும்பு காமம் அல்லவா என யோசித்தான்.

‘காமம் கட்டெறும்பா? தேள் அல்லவா? அதுவுமில்லை. தேள் ஒருநாள் கடுக்கும்; காமம் காலமெல்லாம் கடுக்கும் விடமுள்ள நச்சரவம்!’

கண்ணன் பாட்டில் பாரதியார் பாடியது நினைவு வந்தது கஸ்தூரிக்கு.

‘அங்காந்திருக்கும் வாய் தனிலே - கண்ணன்

ஆறேழு கட்டெறும்பைப் போட்டு விடுவான்’

நினைவு சரஞ்சரமாய்ப் பொரிந்தது.

‘அதிலயும் கட்டெறும்பு ஒண்ணு போதாது. ஆறேழு. சவம் ஒரு கடிக்கே இந்த அரிப்பு. ஆறேழு வாயில், உட்கன்னத்தில், நாக்கில், அடி நாக்கில், தொண்டையில் கடித்தால் எப்படி இருக்கும்? கண்ணனின் தீராத விளையாட்டு இத்தனைக் குரூரமாகவா இருக்கும்? நம்ம கூட்டாளிகள் கண்ணனிடம்தான் பாடம் படிச்சிருப்பார்களோ? கழுதையின் காதில் கட்டெறும்பைப் பிடித்துவிட்டு, அது ‘காள், காள்’ என்று கத்துவதை வேடிக்கை என்று நினைக்கும் கூட்டம்!

இருக்கையின் கீழே குனிந்து, கீழே விழுந்த கட்டெறும்பு காலில் ஏறுகிறதா என்று கவனித்தான். ‘சவம், கடிக்கக்கூடாத எடத்திலே கடிச்சிருச்சுன்னா?’ என்றொரு கிலி சொல்லி அடித்தது.

என்றாலும், இந்தக் கட்டெறும்புக்குத் தன் மீது என்ன கோபம் என்று எண்ணினான் கஸ்தூரி. ‘நாமென்ன முன்னூறு கோடி பட்ஜெட்டில்

கதாநாயகனுக்கு எண்பத்தஞ்சு கோடி கொடுத்து தமிழ்த் திரைக் காவியமா எடுக்கிறோம்?’

கட்டெறும்புக்கு உயிருள்ள மனிதர் உணவல்ல. முன் விரோதம் ஏதும் இல்லை. காதலில், ரியல் எஸ்டேட்டில், மாவட்டச் செயலாளர் பதவி வாங்குவதில் போட்டியல்ல. பெண் தகராறு என எதுவும் இல்லை. ஒருவேளை, தான் ஊர்ந்து செல்லும் யாவற்றையும் கடித்துப் பரிசோதித்துப் பார்க்குமோ? கல்லை, மரத்தை, மானுடன் உள்ளிட்ட விலங்கு களை? சபரி கனிவர்க்கம் கடித்துப் பரிசோதித்து, ராமனுக்காகத் தேடிவைத்தது போன்றா?

கட்டெறும்பை முட்டாள் என்றும் சொல்லிவிடுவதற்கில்லை. ஏழு மலை தாண்டி, பரண்மேல் இருந்தாலும் கருப்பட்டிப் பானையைக் கண்டறிந்துவிடுகிறதே! யாரும் கொண்டுவந்து விடுகிறார்களா என்ன?! அதிலும், கருப்பட்டிப் பானைக்குள் கடியெறும்பு வருவதில்லை; பிள்ளையார் எறும்பு வருவதில்லை; மொசறு வருவதில்லை; கடுத் துவா வருவதில்லை; மொலுமொலு வெனச் சிற்றெறும்பு வருவதில்லை. கரிய கட்டெறும்பு மாத்திரம் மூளை இல்லாமலா கருப்பட்டி தேடி வருகிறது?

கஸ்தூரி கழுத்தில் கட்டெறும்பின் கடி தடத்தைத் தடவிப் பார்த்தான். கடி தடம் எனில், வேறு பொருளும் உண்டு. கதைப் போக்குக்கு இங்கு அது அநாவசியம். லேசாகக் கழுத்து எரிந்தது. சற்று வீங்கினாற் போலவும் இருந்தது. மூளைக்கு ரத்தம் போகும் நாளத்தில் கட்டெறும்பின் விடம் பாய்ந்திருக்குமோ எனவும் யோசித்தான். கட்டெறும்புக்கு விடம் இல்லை என்பதை அறிவான். ஒருவேளை, இதுவரை யாராலும் கண்டுபிடிக்கப்பட்டிராத விடமுள்ள கட்டெறும்பாக இது இருந்து விட்டால்?

‘வீரம் அன்று, விதி அன்று, பழியன்று, பகையன்று, இம்மண்ணினுக்கு என்னுடல் பாரம் அன்று, பண்பு அழிந்து இது என் செய்தவாறு அரோ’ என்று வாலி ராமனைக் கேட்ட அடுக்குமொழிக் கேள்விகள் நினைவில் பாய்ந்தன. ஆனால், கட்டெறும்பு ராமனோ, கஸ்தூரி வாலியோ இல்லை என்பதும் நினைவு வந்தது.

இப்படித்தான் காரண காரியம் இன்றிக் கடிவாங்கும் வாழ்க்கையாக இருக்கிறது என்று தத்துவப் பாம்பு பிடிக்கப் போனான் கஸ்தூரி. முதற்கடி விழுந்தது, தமிழ்ப் பாட நூலில் இருந்து. அது விஷக்கடியும், தமிழ்க்கடியும். பத்தாம் வகுப்பு வாசிக்கும்போது மனப்பாடப் பகுதியாக வந்து விழுந்த அடி... பின்னர் அந்தப் பாடலைப் பல மேடைகளில் கேட்டபோது கை கணக்கில்லாமல் அவனுக்குக் கோவம் வந்திருக்கிறது,

இந்தப் பாட்டுத்தானே, நம்மைப் பள்ளியை விட்டு ஓடச் செய்தது என..!

பலராலும் மனப்பாடம் செய்ய முடியாத பாடல் அது. தமிழ் ஐயாவே பார்த்துத்தான் படிப்பார். மேடையில் சொன்னவர்களும் எழுதி வைத்தே வாசித்தார்கள். அதை எழுதிய ‘கவிக் கனகமலை’ தக்காணத்து எழிலனார், ஒருக்கால் மனப்பாடம் செய்திருப்பாரோ?

கஸ்தூரிக்கு இன்றும் மூன்று சந்தேகங்கள் உண்டு. பிற மாணவர் சிலர், எங்ஙனம் உலக்கையை விழுங்குவதுபோல அந்தப் பாடலை மனனம் செய்தனர்? பாடத்திட்டக் குழு அந்தப் பாடலை மனப்பாடம் செய்வார்களா? அந்தரங்கமான வேளைகளில் - கட்டெறும்பு கடிக்கக்கூடாத நேரங்களில் - கவிக் கனகமலை தக்காணத்து எழிலனாரைச் செல்லமாக அவர் மனைவி எப்படி அழைப்பார்?

எதுவானால் என்ன? முதலில் வாங்கியது தமிழ்க்கடி எனில், இரண்டாவது பாம்புக்கடி.

‘சனியன் பத்து நாள் முந்தியோ பிந்தியோ கடிச்சிருக்கலாம். கரெக்டா நேரம் பார்த்து, கலியாணத்துக்குத் தலைக்கா நாள் சாயங்காலம், வாசல்லே வாழைக்குலை நாட்ட தோட்டத்திலே போயி வெட்டச்சிலே கடிக்குது. கடிச்ச பாம்பைப் பிடிச்சுப் பாத்தா தெரிஞ்சிடும் அது நல்லதா, விரியனா, கொம்பேறி மூக்கனான்னு. ஆ, ஊன்னு சத்தம் போட்டு, பாம்பைத் தோட்டத்துக்குள்ளே விட்டுட்டானுகோ. பொறவு எங்க போட்டுப் புடிக்க? வில்லுவண்டி கட்டி, சர்க்காரு ஆசுபத்திரிக்கு தூக்கிட்டுப் போயி, அவன் ஒரு ராத்திரி கழியணும்னுட்டான். ஊரெல்லாம் பரபரப்பாகிப் போச்சு... ‘கலியாண மாப்பிள்ளையப் பாம்பு கடிச்சுப் போட்டுதுடோய்..!’ பெறகென்ன? கலியாணம் நின்னது நின்னதுதான்! அதோட போச்சா? ஊருப்புறத்திலே சும்மா இருக்குமா வாயி? அவுனுக்கு நாக தோசமாக்கும், என்னைக்கின்னாலும் பாம்பு கடிச்சுத்தான் சாவான்... கௌப்பி விட்டுட்டானுக. சோசியம் பாத்து காளஹஸ்தி, கீழப்பெரும்பள்ளம், திருநாகேசுவாம், சோமனூர் வாழைத் தோட்டத்து ஐயன், நகரம்மன் கோயில் வெரதம்... எல்லாம் ஒரு தொகை காலி!

எத்தனை சாதகப் பொருத்தம் பார்த்து, எத்தனை பொண்ணு பார்த்தாச்சு! ஒருத்தன் சொல்லுறான், இவனுக்குப் பொண்ணு குடுக்கதுக்கு பொண்ணை பாம்புப் புத்துக்குள்ளே கைவிடச் சொல்லலாம்னு. எல்லாம் போச்சு! கலியாணம் நின்னுபோன பொண்ணை வேற வெளில கட்டிக் குடுத்து, மகன் இன்ஜினீயரிங் படிக்கான். நாம 95-ஆம் நம்பர் பஸ்ஸிலே ஏறி, கட்டெறும்புக் கடி

வாங்குறோம். எல்லாம் நேரம்!

கஸ்தூரி வீட்டுக்குப் போயி, காலையில் பொங்கி வைத்த சோறும், புளி கரைச்சுத் தாளித்த ரசமும், கையிலே இருக்கப்பட்ட பக்கோடாவும் தின்று, அடுத்த சோலி பார்க்க வேண்டும்.

'நம்ம கதை இப்பிடிக் கெடக்கு. பதங்கொலஞ்சு போயி... இதுலே கட்டெறும்பும் கூட நம்மளைக் கடிச்சுப் பாக்கு! காலம் கெடக்கிற கெடப்பு...' என்று முனகிக்கொண்டான்.

'கொளத்திலே குளிக்கச்சிலே ஒருவாடு அட்டை கடிச்சிருக்கு. குளுப்பாட்டக் கொண்டுபோன எருமைக்கடா சங்கதிக்குள்ளே அட்டை போயிக் கடிச்சு ரெத்தமா வடிஞ்சதுகூட ஓர்மை இருக்கு. வீட்டிலே எரியப்பட்ட பின்னக்கெண்ணை வெளக்கை அணைச்சுக்கிட்டுப் படுத்தா, கோரம்பாயிலே எங்கேருந்து வருமோ, மூட்டைப் பூச்சி? ராவெல்லாம் கடிச்சு, படைபடையா மேலெல்லாம் தடிச்சு அரிச்சிருக்கு. கொசு, பின்னே நமக்கு இனமானப் பறவை! கடிக்கப்பிடாதுன்னு சொல்ல முடியுமா? மசுக்குட்டி கடிக்காது. ஆனா, அதுக்க ரோமம் பட்டா நாள் பூரா சொறிஞ்சுட்டே கெடக்கலாம்.

ஒருக்கா மோரு வாங்கறதுக்கு, வடக்குத் தெரு பண்ணையாரு வீட்டுக்குப் போனபோது, அவுரு வளக்கப்பட்ட ராஜபாளையம் தொடையிலே பல்லு பதியத் தோண்டி வச்சிற்று. படிப்புரையிலே உக்கார வச்சு, வாழையிலைத் துண்டிலே பழைய சோறும் எருமைத் தயிரும் உப்பும் பச்சமொளகாயும் போட்டுப் பெனஞ்சு சாப்பிடச் சொன்னா அந்த ஆச்சி. சாப்பிட்டுக் கை கழுவுனதும் வலது உள்ளங்கையைக் குவிக்கச் சொல்லி, ஆப்பை நிறைய நல்லெண்ணெய் ஊத்தி, அப்பிடியே குடிக்கச் சொன்னா. நாய்க்கடிக்கு அன்னைக்கு அதாம் மருந்து. பத்தியம்? மூணு நாளைக்குச் சுடுகாட்டுப் பொணம் எரியப்பட்ட மணம் புடிக்கப்பிடாது. வீட்டிலே வளக்கப்பட்ட நாயின்னதுனால ஒண்ணும் செய்யலே! ஆனாலும், கடி தடத்துப் புண்ணு ஆற ஒரு வாரம் ஆச்சு!

பீளமேடு பேருந்து நிறுத்தம் நெருங்கும்போது, நடத்துநருக்கும் பாவப்பட்ட வயசாளிப் பயணிக்கும் வாக்குவாதம். ஒற்றை ரூபாய் சில்லறை பாக்கித் தர்க்கம்.

"டிக்கெட்டுக்கு நாலு ரூவா அழுதாச்சு. அஞ்சு ரூவா குடுத்தா ஒத்த ரூவா பாக்கி தரமாட்டியா? நாலு ரூவாயும் ஒருத்தன் சில்லறையாட்டா கொண்டாருவான்? இது எவடத்த நாயம்? சம்பளம் பத்தலேன்னா

கெவுர்மென்ட்லே கொடி புடிங்கோ, கோசம் போடுங்கோ... இல்லாப் பட்டவானா பொழைச்சான்...”

மூஞ்சியில் விட்டு எறியாத குறையாக, இன்னும் சில மாதங்களில் செல்லாதவையாக ஆகப்போகும் இரண்டு ஐம்பது காசு துட்டுக்களைக் கொடுத்தார் நடத்துநர். அதற்கும் சண்டை போடாமல், பயணி அவசரமாய் இறங்கட்டும் என, ஓட்டுநர் கியர் மாற்றினார்.

‘ஒருக்கா களுத கடிச்சிருக்க வேண்டியது; நல்ல காலம் தப்பிப் பொழச்சேன்’ என்றெண்ணிச் சிரித்துக்கொண்டான் கஸ்தூரி. ‘எல்லாம் பட்டாச்சு, நாப்பத்தஞ்சு வயசுக்குள்ளே! கொசுக்கடி, மூட்டைக்கடி, தலையிலே புழுக்கடி, அட்டைக்கடி, குண்டியிலே கிரிமிக்கடி, எறும்புக்கடி, நாய்க்கடி, பாம்புக்கடி, தமிழ்க்கடி, புன்னைக்காய் பொறுக்கப் போயி மொசறுக்கடி, உறங்கச்சிலே உப்பு குத்தியிலே எலிக்கடி, சண்டை போட்டு சேக்காளியின் கடி... இந்த கட்டெறும்புக் கடி நம்மள என்ன செய்திடும்?’

‘பேய்க்கடி ஒண்ணுதான் பாக்கி’ என்று எண்ணி, சிறியதோர் நகைச்சுவை தனக்குச் சித்தித்ததாக எண்ணிக்கொண்டான் கஸ்தூரி.


சிக்னல் மஞ்சள் பூத்திருந்தாலும், அவிநாசி நெடுஞ்சாலையில் சிக்னலைக் கடந்துவிடலாம் என அதிவிரைவு வேகத்தில் வந்துகொண்டிருந்தது, கருங்கல் கொட்டுப் பாரம் ஏற்றிய லாரி ஒன்று. அதன் பின்னால் ஏதும் தாசில்தார் ஜீப் துரத்தி வருமாக இருக்கும். சட்ட விரோதமாகக் கல்குவாரியில் இருந்து கடத்தி வரும் லாரியை மடக்க அல்லது, ஏதாம் சட்டப் பேரவை உறுப்பினரின் வைப்பாட்டியின் வண்டியாக இருக்கும். அவர்களுக்குச் சட்டம், ஒழுங்கு, போக்குவரத்து விதிமுறைகள், டிராஃபிக் போலீஸ், சிக்னல், பிற வாகனப் போக்கும் வரத்து எதுவும் பொருட்டே இல்லை.

‘நாள் என் செயும், விதிதான் என் செயும், எனை நம்பி வந்த கோள் என் செயும், கொடுங் கூற்று என் செயும்’ எனும் பாவத்தில், பேயாய் விரைந்து வரும் லாரியைப் பொருட்படுத்தத் தேவை இல்லாமல், சிக்னல் கிடைத்த தைரியத்தில், அவிநாசிச் சாலையில் இருந்து சௌரிபாளையம் போவதற்கு, இடப்பக்கம் இருந்த சந்துச் சாலைக்குத் திரும்ப யத்தனித்தார் 95 பேருந்தின் ஓட்டுநர். திரும்பும் வண்டியின் இடதுவசம், பேய்க்கடி ஒன்றும் காத்திருந்ததை அறியாத கஸ்தூரி, சொகுசாகக் கட்டெறும்பின் கடி தடத்தைச் செல்லம் கொஞ்சிக்கொண்டிருந்தான்.

மீதிக் கதை சொல்ல கஸ்தூரி மீள்வானோ அல்லது உடல் நசுங்கித்

தலத்திலேயே மாள்வானோ, நமக்கென்ன தெரியும்?

**-விகடன் தீபாவளி மலர், 2013**



# நாஞ்சில் நாடன்

நவீனத் தமிழ் இலக்கியப் பரப்பில் முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தீவிரமாகச் செயல்பட்டுவரும் நாஞ்சில் நாடன், 1947-ன் இறுதி நாளில் பிறந்தவர். கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், வீரநாராயண மங்கலம் பிறந்த ஊர். தகப்பனார் கணபதியா பிள்ளை, தாயார் சரஸ்வதி அம்மாள்.

ஆறு நாவல்கள், ஒன்பது சிறுகதைத் தொகுப்புகள், இரண்டு கவிதைத் தொகுப்புகள், எட்டு கட்டுரைத் தொகுப்புகள் தமிழுக்கு இவரது கொடை. பல சிறுகதைகள் பன்மொழிகளில் பெயர்க்கப்பட்டவை. ‘எட்டுத் திக்கும் மதயானை’ என்கிற இவரது நாவல், ஆங்கிலத்தில் ‘Against All Odds’ என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. முதல் நாவல் ‘தலைகீழ் விகிதங்கள்’,

‘சொல்ல மறந்த கதை’ என திரைப்படம் ஆனது. ‘பரதேசி’ திரைப்படத்துக்கு இவரது வசனம் முத்தாய்ப்பு.

மாணவர்கள் பலர் இவரது படைப்புகளில் M.Phil., Ph.D., ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர். நாவல்கள், பல்கலைக்கழகப் பாடத் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

2009-ல் ‘கலைமாமணி’ விருது, 2010-ல் ‘சாகித்ய அகாடமி’ விருது, 2012-ல் கனடா இலக்கியத் தோட்டம் சார்பில் வாழ்நாள் சாதனையாளருக்கான ‘இயல் விருது’ ஆகியவை இவருக்குக் கிடைத்த விருதுகளில் குறிப்பிடத்தக்கவை.

குடும்பத்துடன் கோவையில் வசித்து வரும் நாஞ்சில் நாடன் கணிதத்தில் பட்ட மேற்படிப்பு படித்தவர். மகள் டாக்டர் சங்கீதா

மருத்துவத்தில் மேற்படிப்புப் பட்டமும், மகன் கணேஷ் பொறியியல் கல்வியில் பட்டமும் பெற்றவர்கள்.

Printed Books

**பே**ராசிரியர் வீட்டுத் தோட்டத்தில் குடியிருந்த பாம்பு சொன்னது, சோமாலியா நாட்டில் பூர்வகுடிப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிற்றுவிக்க ஐந்தாண்டு ஒப்பந்தத்தில் போய்விட்டார் என. தன் வாழ்க்கையின் பண்பும் பயனுமே தமிழ்ச் சேவை என்று முடிவுகட்டிய பாம்புக்கு காதருகில் ஷெனாய் வாத்தியத்தின் துக்கம் பொதிந்த ஊதல்.

பாம்பு மலைத்துப் போயிற்று. பாம்புகளுக்கு பாரத நாட்டில், பாஸ்போர்ட் தருவதில்லை. பாலைவன நாட்டுக்குப் போகக் கள்ளத் தோணியும் இல்லை. விமானங்களில் நுழைவதற்குக் கடுமையான பாதுகாப்புத் தடைகள் இருந்தன. மேலும் அந்தப் பாம்பு நினைத்தபடி பயணம் செய்ய மத்திய அமைச்சரோ, கிரிக்கெட் வீரரோ, டெரரிஸ்டோ, சினிமா நடிகரோ, தொழிலதிபரோ, கடத்தல்காரரோ, கலைத் தூதுவரோ இல்லை.

ஐந்தாண்டுகள் சென்று தனது புதிய மூன்றாந்தாரம் சோமாலிய மனைவியுடனும், புல்கானின் தாடியுடனும் பேராசிரியர் ஊருக்கு வந்தபோது பாம்பு வயோதிகத்தில் இருந்தது. பகலில் சூரிய ஒளிக் கூச்சத்தில் கண் தெரிவதில்லை. இரவில் மாணிக்கனை உமிழ்ந்து அந்த ஒளியில் இரை தேட வேண்டியதிருந்தது. உடல் நீளம் குறுகிக் கழுத்துப் பக்கம் சின்னச் சிறகுகள் முளைக்க ஆரம்பித்துவிட்டன. எலி சீரணமாவதில்லை. மிக்ஸியில் அடித்துக் கொடுத்தால் சாப்பிட எளிதாக இருக்கும். சட்டை உரிப்பதன் இடைவெளிகள் நீண்டுவிட்டன. விந்து சுரப்பில்லை. பாம்பு முயன்றால் எட்டுப் பத்து அடிகள் பறக்க இயலும் தற்போது.

விகடன் பிரசுரம்

KONGUTHAER VAAZHKKAI

₹ 70

(1st Edition)

ISBN 978-81-8476-542-7

9788184765427